நமது வேதாகமம்

வேதாகமத்தை புரிந்துகொள்ள உதவும் 25 ஆய்வு தலைப்புகள்



போதகர். பெ. பெவிஸ்டன்

M.A., M.Div., D.TJ., D.D.,

நமது வேதாகமம்

புத்தகங்களுக்கெல்லாம் புத்தகம்
(பயனுள்ள 25 தலைப்புகள்)

(யாருக்கு)

(யாரால்)

(எதற்காக)

(நாள்)

(கையெழுத்து)

நமது வேதாகமம்

(பயனுள்ள 25 தலைப்புகள்)

பாஸ்டர். பெ. பெலிஸ்டன்

Namathu Vedhagamam
Copyright © 2022 by Beviston. B

1st Edition: 1500 Copies (March 1, 2022)

This book is available at all Christian Book Stores & Online Stores

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording, or otherwise without the prior written permission of the publisher.

Published by: Tamil Christian Network
16/1D, Zion Nagar, Vellalanvilai Post, Tuticorin Dt, India – 628219
web: tcnmedia.in | email: channeltcn@gmail.com

Label: Notion Press
TCN MEDIA © ALL RIGHTS RESERVED

நமது வேதாகமம்

புத்தகங்களுக்கெல்லாம் புத்தகம்

பொருளடக்கம்:

I	வேதாகமம் - பொருள் விளக்கம்	8
II	வேதாகமத்தின் ஆக்கியோன்(கள்)	9
III	வேதாகமம் எழுதப்பட்ட காலம்	11
IV	வேதாகமம் எழுதப்பட்ட இடங்கள்	11
V	வேதாகம மொழிகளும் மொழிபெயர்ப்புகளும்	12
VI	வேதாகமம் எழுத பயன்படுத்தப்பட்ட பொருட்கள்	14
VII	வேதாகமம் எழுதப்பட்டதின் நோக்கம்	17
VIII	வேதாகமத்தின் மையக்கருத்து	19
IX	வேதாகமத்திற்கு வேதாகமம் வழங்கும் பெயர்கள்	22
X	வேதாகமத்திலுள்ள வசனங்களுக்குரிய பெயர்கள்	23
XI	ஏற்பாடு பொருள் காரணம்	25
XII	அதிகாரங்களும், வசனங்களும்	27
XIII	வேதாகமத்தின் பிரிவுகள்	27

XIV	எபிரேய வேதாகமத்தின் பிரிவுகள்	32
XV	தள்ளுபடி ஆகமங்கள் (Apocryphal Books)	34
XVI	கேனான் அளவுகோல் (Canonical Order)	38
XVII	வேதாகம சரித்திரத்தின் சுருக்கம்:	40
XVIII	பழைய ஏற்பாடு புத்தகங்களின் சுருக்கம்	47
XIX	புதிய ஏற்பாடு புத்தகங்களின் சுருக்கம்	63
XX	வேதாகமத்தின் 25 பயன்கள்	75
XXI	வேதாகமத்தின் 30 சிறப்புக்கள்	77
XXII	வேதாகமம் தேவனுடைய வார்த்தை - சான்றுகள்	79
XXIII	வேதாகமத்தின் 7 காலங்கள்	94
XXIV	வேதாகமம் தொடர்பான பொன்மொழிகள்	95
XXV	தமிழில் பரிசுத்த வேதாகமம் பிறந்த வரலாறு	99



முகவுரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு எனது அன்பின் வாழ்த்துக்கள். இந்த கையேடு வாயிலாக உங்களை சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நமது பரிசுத்த வேதாகமமானது உலகிலேயே அதிகமான மொழிகளில் அச்சிடப்பட்டுள்ள அற்புதப் புத்தகமாகும். அதிகமாக விநியோகம் செய்யப்படும் வியத்தகு புத்தகமாகும். மேலும் உலகிலேயே அதிக ஆசிரியர்களால் எழுதப்பட்ட ஆச்சரிய புத்தகமாகும். வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தரின் வார்த்தைகள் நிறைந்த வேதாகமத்தின் ஆக்கியோனும் தேவனே. வேத புத்தகம் உண்மையானது என்பதை நிரூபிக்க ஒரு புத்தகம் தேவையில்லை. ஏனெனில் அது, அதன் அடிப்படை அமைப்பிலேயே உண்மையானதாகவே இருக்கிறது.

நமது பரிசுத்த வேதாகமம் என்பது ஒவ்வொரு விசுவாசிகளின் உயிர்நாடி. ஏனெனில் நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்கக்கூடிய திறன் வாய்ந்த வார்த்தைகள் கொண்ட புத்தகமாக நம்முடைய பரலோக தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். இது உலகத்தில் வெளியிடப்பட்ட, வெளியிடப்படுகிற மற்ற எல்லா புத்தகங்களை விட முற்றிலும் வித்தியாசமானது! நீங்கள் இந்த வேதபுத்தகத்தை கருத்தாய் படிக்கும்போது, தேவனே நேரடியாக உங்களிடம் பேசுவதை உங்களால் உணர முடியும்!

இத்தகைய வேதாகமத்தை முறைப்படி கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொடுக்கவும் விரும்புவோர், அடிப்படையில் அறிந்திருக்க வேண்டிய பல தகவல்கள் இந்நூலில் 25 தலைப்புகளின் கீழ் இடம் பெற்றுள்ளது. வாசித்து பயன் பெறுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

பாஸ்டர். பெ. பெவிஸ்டன்

புத்தக ஆசிரியர்

I. வேதாகமம் - பொருள் விளக்கம்

இந்த உலகத்திலுள்ள உள்ள கணக்கிலடங்காத புத்தகங்களில், ஒரு புத்தகத்தை மட்டும் ஈடு இணையற்ற புத்தகம் என்று சொல்ல முடியுமென்றால் அந்தப் புத்தகம் பரிசுத்த வேதாகமமே ஆகும். ஒவ்வொரு மதத்தினருக்கும் அவர்கள் புனிதமாய் போற்றும் வேத நூல் உண்டு. ஆனால் பரிசுத்த வேதாகமம் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரிய நூல் அல்ல. இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவரும் படித்துப் பின்பற்ற வேண்டிய புனித நூல் பைபிள் ஆகும். இந்நூலினை பரிசுத்த வேதாகமம், திருவிவிலியம், பொது திருமறை, பைபிள் போன்ற பல பெயர்களில் தமிழ் மரபின்படி அழைத்தாலும் புத்தகம் என்பதே அதன் பொருள் விளக்கமாகும்.

பைபிள் (Bible) என்னும் ஆங்கில வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். பாப்பிரஸ் (Papyrus) என்னும் நாணல் செடியிலிருந்து, அதன் மேல்பட்டையாகிய பிபிலோஸ் (Biblos) என்று அழைக்கப்படும் தோலை உரித்து, பல இரசாய ண மாற்றங்களுக்குட்படுத்தி, அதை பதப்படுத்தி தோல் போலாக்கி, எழுதி பத்திரப்படுத்தி பின்வரும் சந்ததியார் அறிய வேண்டுமென்று பாதுகாத்து வைத்தார்கள். அதில் பெரும் பகுதி இடம்பெற்றது நமது வேதாகமாகும். இந்த உலகில் புத்தகம் (The Book) என்று அழைக்கப்படுவதற்கு தகுதியும், அந்தஸ்தும் உடையது நமது வேதாகமம் ஒன்றே! இதில் 66 புத்தகங்கள் இருந்தாலும், 13ம் நூற்றாண்டில் புத்தகங்கள் என்று பன்மையி லிருந்த பிபிலியா (Biblia) என்னும் கிரேக்க வார்த்தையை, இலத்தீன் வேதப்பண்டிதர்கள் ஒரே புத்தகம் என அழைத்தார் கள். அதுவே பிபிலோஸ் என்பதாகும். பாப்பிரஸ் என்னும் பெயரிலிருந்து பேப்பர் என்பதும், பிபிலோஸ் என்பதிலிருந்து பைபிள் என்பதும் வந்தது. ஏனென்றால் வேதாகமமானது எல்லாக் காலத்திற்கும் ஒரே புத்தகம் என்பதால் இப்படி வருகிறது. இதுபோன்ற ஒரு புத்தகம் உலகில் வேறெதுவும் இல்லை என்பது சூட்சகமான பொருளாகும்.

II. வேதாகமத்தின் ஆக்கியோன் (கள்)

ஒரு புத்தகத்தினை வாசிக்க முயற்சிக்கும் போது அதன் ஆசிரியர் யார் என்பதை கவனித்து வாசிப்பது போல வேதாகமத்தை வாசிக்கும் முன் வேதாகமத்தின் ஆக்கியோன் குறித்த தெளிவான புரிதல் அவசியமானதாகும். நேரடியாக பதில் கூற வேண்டுமானால் வேதாகமத்தின் ஆக்கியோன் பரிசுத்த ஆவியானவர் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி கூறிவிடலாம்.

நம்முடைய பரிசுத்த வேதாகமமானது உலகத்தில் உள்ள மற்ற புத்தகங்களை போல மனிதர்களால் எழுதப்பட்ட தோ, சுயமான பொருளை உடையதோ அல்ல. இது முற்றிலும் பரிசுத்த ஆவியானவரால் எழுதப்பட்ட புத்தகமாகும். இதனை பவுலும் பேதுருவும் தனது நூல்களில் திட்டமாகவும், உறுதி யாகவும் குறிப்பிடுகின்றனர்.

“வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி யாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது” (2தீமோ.3:16-17).

“வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்ற மான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசன மானது ஒருகாலத்திலும் மனுஷரு டைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத் த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார் கள்”. (2 பேதுரு.1:20-21)

மேற்கண்ட இரு வசனங்களும் வெவ்வேறு நபர்களால், வெவ்வேறு சூழ்நிலைகளில், வெவ்வேறு இடங்களிலிருந்து எழுதப்பட்டிருந்தாலும் வேதாகம ஆசிரியர் குறித்த ஒத்தகருத் தை காண முடிகிறது. இன்னமும் ஏராளமான வசனங்கள்

இதனை நேரடியாகவும், மறைமுகமாகவும் வேதாகமத்தின் ஆக்கியோன் பரிசுத்த ஆவியானவரே என்பதை உறுதி செய்கிறது. நமது வேதாகமத்தின் ஆக்கியோன் பரிசுத்த ஆவியானவராக இருந்தாலும் இப்புத்தகத்தை எழுத தேவன் அநேக தேவ மனிதர்களை பயன்படுத்தியிருக்கிறார். அரசன் முதல் ஆண்டி வரை என கூறுவார்களே அதுபோல வெவ்வேறு துறைகளை சார்ந்த சுமார் 40 ஆசிரியர்களை கொண்டு பரிசுத்த ஆவியானவர் இந்த புத்தகத்தை எழுதினார். மனித எழுத்தாளர்கள் தேவன் எழுத விரும்பியதை மிகச் சரியாக எழுதினார்கள், இதன் விளைவு தேவனது பரிபூரணமான பரிசுத்த வார்த்தையாக வேதாகமம் காணப்படுகிறது. (சங்.12:6; 2 பேதுரு.1:21).

தாவீது மற்றும் சாலமோன் போன்ற ராஜாக்களையும், எஸ்றா மற்றும் நெகேமியா போன்ற அரசியல் தலைவர்களை யும், ஆசாத் மற்றும் ஆபகூக் போன்ற தேவாலய பாடகர்களை யும், மெத்தப்படித்த மோசே மற்றும் பவுல் போன்ற கல்விமான் களையும், கல்லாதவர்களும் பேதமையுள்ளவர்களுமான பேதுரு மற்றும் யோவான் போன்ற மீனவர்களையும் தேவன் பயன்படுத் தினார். ஆமோஸ் என்னும் மேய்ப்பனையும், மத்தேயு என்னும் ஆயக்காரனையும், லூக்கா என்னும் வைத்தியரையும், யோபு என்னும் செல்வந்தனையும், ஏசாயா என்னும் அரசு அதிகாரி யையும், தானியேல் என்னும் அரசியல் ஆலோசகரையும் கர்த்தர் உபயோகப்படுத்தினார்.

பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் தேவனால் பிறப்பிக்கப்பட்ட வார்த்தைகளை எழுதினார்கள். இந்த "தேவனுடைய வார்த்தைகள்" கிறிஸ்தவ விசுவாசத்தை யும், கிறிஸ்தவ வாழ்க்கை முறையையும் உருவாக்குவதற்கு தெய்வீக அதிகாரம் பெற்றவையாகும். 66 புத்தகங்களை உள்ளடக்கிய முழு வேதாகமத்தையும் நாம் வாசிக்கும் போது, ஒரே ஒரு நபர் எழுதிய உணர்வை நம்மால் உணந்து கொள்ள முடியும். அந்த ஒரு நபர் பரிசுத்த ஆவியானவரே என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி கூறிவிடலாம்.

III. வேதாகமம் எழுதப்பட்ட காலம்

பழைய ஏற்பாட்டின் சரித்திர காலம் என்பது கி.மு 4000-ல் துவங்குகிறது. பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் மோசேயினால் கி.மு 1446 முதல் கி.மு 1406 வரையிலான இடைப்பட்ட 40 ஆண்டுகளில் வனாந்திர யாத்திரையின் போது எழுதப்பட்டிருக்க கூடும் என வரலாற்று அறிஞர்கள் உறுதியாக கூறுகின்றனர்.

பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமான மல்கியா என்னும் நூல் கி.மு 400 வரை நடந்தவைகளை பதிவு செய்கிறது. கி.மு 400 முதல் கிறிஸ்து பிறப்பு வரை இருண்ட காலம் என அழைக்கப்படுகிறது. அந்நாட்களில் தேவனுடைய வார்த்தை ஒருவருக்கும் வெளிப்படவில்லை. இவைகளின் படி கி.மு 1450 முதல் கி.மு 400 வரையிலான 1050 வருட இடைவெளியில் பழைய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்டன.

புதிய ஏற்பாட்டு நூல்கள் கி.பி 100 வரையிலான சரித்திரங்களை உள்ளடக்கியுள்ளது. தெளிவுபட கூறவேண்டுமெனில் கிமு 1450 முதல் கி.பி 100 வரையிலான இடைப்பட்ட காலத்தில் சுமார் 1550 ஆண்டுகள் இடைவெளியில் முழு வேதாகமம் எழுதும் பணி நடைபெற்றுள்ளது. ஒருவருக்கொருவர் எவ்வித தொடர்புமின்றி பல்வேறு நூற்றாண்டு இடைவெளிகளில் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமம் ஒன்றுக்கொன்று முரண்படாமல் மையக்கருத்தினை சந்தேகத்திற்கு இடமின்றி தெளிபட கூறுவது தான் வேதாகமத்தின் சிறப்பு.

IV. வேதாகமம் எழுதப்பட்ட இடங்கள்

ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய 3 வெவ்வேறு கண்டங்களில் எழுதப்பட்டது. வனாந்திரங்கள், குன்றுகள், மலைகள், பட்டணங்கள், தேவாலயங்கள், அரண்மனைகள், ஆற்றங்கரைகள், சிறைச்சாலைகள், தீவுகள் போன்ற

இடங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு காலகட்டங்களில் பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டது.

மோசே பாலஸ்தீனா தேசத்திற்கு வெளியிலிருந்து எழுதினார். கானான் தேசத்திலிருந்து பலர் எழுதினார்கள், பாபிலோனிலிருந்தும், தாவீது பாலைவனத்திலிருந்தும் அரச சிம்மாசனத்திலுமிருந்தும் எழுதினார்கள். புதிய ஏற்பாட்டுக் கடிதங்களை ஆசிய ஐரோப்பிய கண்டத்திலுள்ள முக்கிய நகரங்களிலிருந்தும் எழுத்தப்பட்டது. அவைகளில் பாலஸ்தீனம், ரோமாபுரி, எபேசு, கொரிந்து, மக்கதோனியா, அந்தியோகியா போன்றவை முக்கிய இடங்களாகும்.

V. வேதாகம மொழிகளும் மொழிபெயர்ப்புகளும்

பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதிகள் எபிரேய மொழியிலும், சில பகுதிகள் அராமிக் (Aramaic) மொழியிலும் எழுத்தப்பட்டது. மற்றும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது. இப்படி பல மொழிகளில், பல இடங்களிலிருந்து எழுதப்பட்டது தான் வேதாகமம்.

கிரேக்க மொழியில் புதிய ஏற்பாடு எழுதப்பட காரணம் என்னவெனில், கி.மு.332-ல் மகா அலெக்சாண்டர் பெர்சியரை தோற்கடித்தபோது கிரேக்க சாம்ராஜ்யம் உலக வல்லரசாக மாறியது. கிரேக்க அரசனாகிய மகா அலெக்சாண்டர் கி.மு.332-ல் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினான். கி.மு.331-ல் முழு உலகமும் அவன் ஆளுகையின் கீழ் வந்தது. கி.மு.327-ல் இந்தியாவை ஜெயித்து பாபிலோனை அதன் ஆதி மேன்மைக்கு எடுத்துக் கட்ட வேண்டுமென்று தீர்மானித்தபோது தனது 32-வது வயதில் (கி.மு.323) இந்தியாவில் மரணமடைந்தான்.

இவன் யூதர்களோடு மிகவும் நட்பாக நடந்து கொண்டான். எருசலேமை அழிக்காமல் விட்டுவிட்டான். முழு உலகத்திலும் கிரேக்க பட்டணங்களை நிறுவினான். தான் ஜெயித்த பகுதிகளிலெல்லாம் கிரேக்க கலாச்சாரத்தையும், கிரேக்க மொழி

யையும் மக்கள் தழுவும்படி செய்தான். எனவே, அலெக்சாண்டர் காலத்திற்கு பின்பு பாலஸ்தீனம் முழுவதிலும் கிரேக்க நிறுவனங்கள் பெருகின. கிரேக்கக் கலாச்சாரமும், கிரேக்க மொழியும் யூதர்கள் மேல் திணிக்கப்பட்டது. எனவேதான், பிற்காலத்தில் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

யூதர்கள் தங்களுடைய வேதத்தை கி.மு.285-ல் கிரேக்க மொழிக்கு மொழியாக்கம் செய்தனர் இதற்கு செப்துவ ஜிந்த் (Septuagent) என்று பெயர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முடிவில் ரோம் மொழி இலத்தீனிலும், எகிப்திய மொழி காப்டிகி லும், சிரியா மொழி சீரியாவிலும் பழைய ஏற்பாடு மொழியாக் கம் செய்யப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக ரோமன் கத்தோ லிக்க சபை பிரிவின் தலைமை, தங்கள் போதகர்கள் தவிர மற்றவர்கள் வேதத்தை வாசிக்க தடை செய்திருந்தது. வேதத் தை கற்கவும் மொழி மாற்றம் செய்யவும் முற்பட்ட அநேகர் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

விக்லி∴ப் என்பவர் கி.பி.1380-ல் புதிய ஏற்பாட்டையும், 1382-ல் பழைய ஏற்பாட்டையும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். கி.பி.16-ம் நூற்றாண்டில் டிண்டேல் என்பவர் வேதாகமத்தின் ஆங்கில மொழியாகத்தில் ஈடுபட்டு இரத்த சாட்சியாக மரித்தார். அவரது மொழியாக்கம் பிற்கால ஆங்கில வேதாகமத்திற்க்கு அடித்தளமாக அமைந்தது. புதிய மற்றும் பழைய ஏற்பாட்டின் பெரும் பகுதியை அவர் மொழியாக்கம் செய்தார். அவரது நண்பரர் கவர்டேல் ஆங்கில வேதாகமத்தை கி.பி.1535-ல் வெளியிட்டார். இதன் பிறகு தான் பலரால் பயன்படுத்தபட்டு வரும் KJV வெளியிடப்பட்டது.

ஸ்காட்லாந்தின் ஆறாவது ஜேம்ஸ் அரசர் இங்கிலாந் தின் முதலாம் ஜேம்ஸ் அரசரானார். அவர் வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்வதற்க்கான சிறந்த வல்லுனர்களை நியமித்து, கவனமாக பணி புரிய செய்தார். அதன் பயனாக கி.பி.1611-ல் King James Athorised Version வெளியிடப்பட்டது.

கி.பி.1466-ல் ஜோகான் மென்றல் என்பவர் வேதாகமத்தை ஜெர்மன் மொழியில் மொழியாக்கம் செய்தார். இதுவே உலகின் அச்சிடப்பட்ட முதல் வேதாகமம் ஆகும். கி.பி.1521-ல் மார்டின் லூதர், புதிய ஏற்பாட்டை ஜெர்மன் மொழியில் மொழியாக்கம் செய்தார். தொடர்ந்து 1532-ல் பழைய ஏற்பாட்டையும், 1534-ல் தள்ளுபடி ஆகமங்களையும் ஜெர்மன் மொழியில் மொழியாக்கம் செய்தார்.

தமிழ் வேதாகமம் முதன் முதலில் ஜெர்மனி நாட்டை சேர்ந்த திரு பர்த்தலமேயு சீகன்பால்க் என்பவரால் 1711-ம் ஆண்டு மொழி பெயர்க்கப்பட்டது. 1715-ம் ஆண்டு அச்சு இயந்திரத்தில் அச்சிடப்பட்டது. சீகன்பால்க் அவர்கள் முதலாவது புதிய ஏற்பாட்டையும் பின்பு பழைய ஏற்பாட்டில் உள்ள ஆதியாகமம் முதல் ரூத் வரையுள்ள புத்தகங்களை மொழி பெயர்த்தார். தன் மரணத்தின் நிமித்தம் விட்டு சென்ற பழைய ஏற்பாட்டின் மீதமுள்ள பகுதிகளை "பெஞ்சமின் ஸ்கல்ஸ்" என்பவர் மொழிபெயர்த்தார். 1728-ம் ஆண்டு முழு வேதாகமும் முதன் முறையாக தமிழில் அச்சிடப்பட்டது.

VI. **எழுத பயன்படுத்தப்பட்ட பொருட்கள்**

வேதாகமம் எழுதப்பட பல எழுதுப்பொருட்கள், தோல் சுருள், இறகு, நாணற்காகிதம், மை, எழுதுகோல் குச்சி, உலோகம், மண் தகடுகள், கல், களிமண் தகடுகள், மெழுகால் மூடப்பட்ட மரத்தகடுகள் போன்றவைகள் எழுத பயன்படுத்தப் பட்டன.

- ***காகிதம்*** *(Papyrus)*

காகிதத்தினாலும், மையினாலும் அவைகளை எழுத எனக்கு மனதில்லை. (2 யோவா 1:2) காகிதம் என்பது பாப்பிரஸ் கொண்டு தயாரிக்கப்படுவதை குறிக்கிறது. ஆதி நாட்களில் எழுத அதிகமாய் உபயோகிக்கப்பட்டது பப்பைரஸ். இது

ஏரிகள், ஆறுகள் அருகே வளரும் ஒரு வித நாணற்செடி. எகிப்திலும், சீரியாவிலும் இது அதிகமாய் காணப்படுகின்றது. இந்த நாணற்செடியை வெட்டி, தோலுரித்து, பதப்படுத்தி, காயவைத்து எழுத பயன்படுத்தினார்கள். இது எளிதில் கெடாது. கி.மு 2400 - கி.பி 300 வரை இது அதிகமாக புழக்கத்தில் இருந்தது.

சிரியாவிலிருந்து பைப்லோஸ் என்ற துறைமுகம் வழியாக இந்த பப்பைரஸ் பல இடங்களுக்கும் அனுப்பப் பட்டது. இது 10 இன்ஞ் உயரமும் 30 அடி நீளமுள்ளதாகும். புதிய ஏற்பாடு காலத்தில் இந்த காகிதம் உபயோகிக்கப்பட் டது. புத்தகம் என்பதின் கிரேக்க வார்த்தை பிப்லோஸ். எனவே இந்த ஊருக்கு புத்தகம் என்ற பொருளுள்ள பைப்லோஸ் என்ற பெயர் வந்தது.

பேப்பர் என்ற ஆங்கில வார்த்தை இதன் அடிப்படை யிலே உருவாக்கப்பட்டது. தனித்தனியாக இருந்த பாப்பிரஸுக் களையும் ஒன்றாக ஒரு புத்தகம் போல கட்டாக ஏற்படுத்தியுள் ளதை கோடெக்ஸ் என்று அழைத்தார்கள்.

- ***தோல்*** *(Skin)*

“புத்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும் நீ வருகிறபோது எடுத்துக் கொண்டுவா”. (2 தீமோ.4:13) இந்த வசனத்தில் தோற்சுருள்கள் பற்றிய குறிப்பு கிடைக்கிறது. இவ் வகை தோல் சுருள்கள் அக்காலத்தில் பார்ச்மென்ட், வெலம் கொண்டு தயாரிக்கப்பட்டது. ஆடு, மாடு மற்றும் மிருகங்களின் தோல்களை பதப்படுத்தி, பக்குவப்படுத்தி பயன்படுத்த ஆரம்பி த்தனர். இதற்கு பார்ச்மென்ட் (தோற்சுருள்) என்று பெயர்.

பார்ச்மென்ட் (Parchment) என்ற வார்த்தை பெர்கமஸ் (பெர்கமு) என்ற வார்த்தையிலிருந்து வந்தது. வெளிப்படுத் தலில் சொல்லப்பட்டுள்ள பெர்கமு என்ற ஊரில் இந்த தோல் பதனிடும் தொழில் மிக பிரசித்தி பெற்றதாக இருந்தது.

வெலம் (Vellum) என்று அழைக்கப்படும் இது கன்றுக் குட்டியின் தோலில் இருந்து தயாரிக்கப்பட்ட மெல்லிய தோல்சுருள். இது பதப்படுத்தப்பட்டபின் கருஞ்சிவப்பு சாயம் பூசப்பட்டு இதில் பொன், வெள்ளி, ஆகிய உலோகங்களை உருக்கி எழுதினார்கள்.

- **உலோகம்** *(Metal)*

பசும்பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று அதிலே முத்திரை வெட்டாக வெட்டி.. (யாத். 28:36)

- **மை** *(Ink)*

அவர் தமது வாயினால் இந்த எல்லா வார்த்தைகளையும் உரைத்து, என்னுடனே சொன்னார், நான் மையினால் புஸ்தகத்தில் எழுதினேன். (எரே. 36:18)

- **இறகு** *(Feather)*

எழுதவேண்டிய காரியங்கள் அநேகமுண்டு; ஆனால் மையினாலும் இறகினாலும் எழுத எனக்கு மனதில்லை. (3 யோவா 1:13)

- **களிமண்** *(Clay)*

மனுபுத்திரனே, நீ ஒரு செங்கலை எடுத்து, அதை உன் முன்வைத்து, அதின்மேல் எருசலேம் நகரத்தை வரைந்து... (எசே 4:1)

- **கல்** *(Stone)*

இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக மோசே எழுதியிருந்த நியாயப்பிரமாணத்தை அவன் அங்கே கற்களில் பேர்த்தெழு தினான். (யோசு 8:32)

- ***எழுதுகோல்கள்*** *(Writing stick)*

சிறிய உளி, முப்பட்டை உருவிலான உலோகப்பேனா, கூர்மையான நாணற்குச்சி, ஆகியவை எழுதுகோலாக பயன்படுத்தப்பட்டன. அடுப்புக்கரி, பசை, தண்ணீர் சேர்த்து தயாரிக்கப்பட்ட மை எழுதுவதற்கு பயன்படுத்தினார்கள்.

இன்று நமது கைகளில் வைத்திருப்பது போன்று அனைத்து புத்தகங்களையும் உள்ளடக்கிய வேதாகம தொகுப்பு எல்லாரிடமும் இருக்காது. அன்றைய சூழலில் அது சாத்தியமன்ற ஒன்று என்பதை நம்மால் அறிந்திருக்கிறோம். இங்கொன்றும் அங்கொன்றுமாக சில புத்தக சுருள்களை மிக பாதுகாப்பாக ஆசாரியர்கள் வைத்திருப்பார்கள். அதை பிரதி எடுப்பவர்கள் மிக ஜாக்கிரதையாக பிரதி (Copy) எடுப்பார்கள். ஒரு சொல்லும் விடுபடாமல் பார்த்துக் கொள்வர்கள். பிரதி எடுத்தவுடன் சொற்களை எண்ணிப்பார்த்து பிரதான புத்தகத்தி ற்க்கு இணையாக உள்ளதா என சரி பார்ப்பார்கள். இல்லை என்றால் அந்த பகுதியே கிழித்து விட்டு மீண்டும் எழுதுவார்கள்.

கர்த்தரின் நாமமான யெகோவா என்ற பெயர் எழுதும்போது புதிய எழுதுகோலில் அவரது நாமத்தை எழுதி, முடித்தவுடன் எழுதுகோல் முனையை உடைத்து விடுவார்கள் என வேதாகம அறிஞர்கள் கூறுகின்றனர். அடுப்புக்கரி, பசை, தண்ணீர் சேர்த்து தயாரிக்கப்பட்ட மையை எழுதுவதற்கு பயன்படுத்தினார்கள்.

VII. வேதாகமம் எழுதப்பட்டதின் நோக்கம்

வேதாகமம் இஸ்ரவேல் மற்றும் ஆதிசபையைக் குறித்த ஒரு சரித்திரக் குறிப்பேடு மட்டுமல்ல. வேதாகமம் இயற்கைக்கு அப்பாற்பட்ட உண்மையான தெய்வீக வெளிப்பாட்டிற்கு ஒரு சாட்சியாக விளங்குகிறது. வேதாகமத்திலுள்ள ஒரே கருப்பொ ருள் 66 புத்தகங்களையும் இணைக்கிறது. “இரட்சிப்பு / மீட்பு” என்பது அக்கருப்பொருளாகும். சிருஷ்டிகராகிய தேவனுக்கு

விரோதமாக மனிதன் தன்னுடைய கீழ்ப்படியாமையினால் விழுந்த பாவத்தின் பிடியிலிருந்து மனுக்குலத்தை இரட்சிப்ப தற்காக தேவன் கூறியவற்றையும், செய்தவற்றையும் வேதாக மம் தொகுத்து அளிக்கிறது. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஆள்தத்துவ த்தில் இந்தக் கருப்பொருள் நிறைவு பெறுகிறது.

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைக ளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர் களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைக ளே". (யோவா.5:39-40)

"இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவை எழுதப்பட்டிருக்கிறது" (யோவா.20:31).

மேற்கண்ட வசனங்கள் வேதாகமம் எழுதப்பட்டதின் பரிபூரண நோக்கத்தை ஒளிவுமறைவின்றி நேரடியாக கூறுகி றது. உலகில் வாழும் ஒவ்வொரு மனிதரும் கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தை பெறவும், நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளவுமே வேதாகமம் எழுதப்பட்டுள்ளது. வேதாகமம் கீழே உள்ள கேள்விகளுக்கு பதில்கள் இப்புத்தகத்தில் உள்ளது.

நான் எங்கிருந்து வந்தேன்? நான் ஏன் இங்கிருக்கிறேன்? நான் எங்கே போக வேண்டும்? இந்த மூன்று கேள்விகளுக்கு வேதாகமம் தெளிவான பதிலை கூறுவதோடு, மீட்பின் திட்டத் தில் பங்குபெற வைத்து நித்திய ஜீவனை கொடுப்பதே வேதாகம திட்டமாகும்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி யாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும்,

சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோ.3:16-17)

கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்புக்ககேற்ற ஞானமுள்ளவர்களாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவர்களாகவும்" மக்களை மாற்றுவது வேதாகமத்தின் நோக்கம் என்று 2தீமோ.3:14-17 வசனங்களில் வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.

இப்படியாக, ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தைப் பெற்றபின், "எந்த நற்கிரியையும் செய்ய" அவனைத் தகுதியுள்ளவனாக்கும் நான்கு காரியங்களை வேதாகமம் அளிக்கிறது:

- கோட்பாடு (Doctrine)
- கடிந்துரைத்தல் (Showing the wrong)
- திருத்துதல் (Showing the right)
- நீதியின் போதனை (Right Relationships with God and man)

VIII. **வேதாகமத்தின் மையக்கருத்து**

வேதாகமத்தை ஒரே சொல்லில் கூற வேண்டுமெனில் அது கிறிஸ்து என்பதாகும். ஜீவிக்கிற வார்த்தையாகிய கிறிஸ்துவைப்பற்றி எழுதப்பட்டதே எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமம். வரலாறு என்பது அவரது கதையே (History is his story). வரலாற்றை கிமு - கிபி எனப் பிரித்த வரலாற்று நாயகனும் அவரே. வேதத்தின் பழைய ஏற்பாடு - புதிய ஏற்பாடு என்ற பிரிவுகளுக்கு காரணமும் கிறிஸ்துவே.

வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவே முக்கியமான மையமாக திகழ்கிறார். முழு புத்தகமும் அவரைப் பற்றியது. பழைய ஏற்பாடு அவரது வருகையை முன்னறிவிக்கிறது மற்றும் உலகிற்குள் அவரது நுழைவுக்கான அரங்கத்தை அமைக்கி

றது. புதிய ஏற்பாடு அவரது வருகை மற்றும் நம்முடைய பாவ உலகத்தை இரட்சிப்பதற்கான அவருடைய செயல்களை விவரிக்கிறது. வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களும் இயேசுவை நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளிப்படுத்துகிறது.

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவா.5:39) கிறிஸ்துவே முக்கியமான மையமாக திகழ்கிறார். என்னைக்குறித்து என்பது இயேசு கிறிஸ்துவை குறித்து ஆகும். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டில் இயேசு எப்படியெல்லாம் தென்படுகிறார் என்பதை காண்போம்.

அ) பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் இயேசு கிறிஸ்து

ஆதியாகமத்தில் இயேசு - ஸ்திரியின் வித்து

யாத்திராகமத்தில் - முன் நிழலான தேவ ஆட்டுக்குட்டி

லேவியராகமத்தில் இயேசு - இயேசு பிரதான ஆசாரியர்

எண்ணாகமத்தில் - யாக்கோபிலிருந்து உதித்த நட்சத்திரம்

உபாகமத்தில் இயேசு - தீர்க்கதரிசி

யோசுவாவில் இயேசு - தேவனுடைய சேனாதிபதி

நியாயாதிபதிகளில் இயேசு - யெகோவா

ரூத்தில் இயேசு - நமது உறவினரும் இரட்சகரும்

சாமுவேலில் இயேசு - பிதாவும் தாவீதின் வித்தும்

ராஜாக்களிலும், நாளாகமங்களிலும் - அரசர்களுக்கு அரசர்

எஸ்தரில் இயேசு - மத்தியஸ்தர்

யோபுவில் இயேசு - நமது உயிர்த்தெழுந்த இரட்சகர்

சங்கீதங்களில் இயேசு - தேவனுடைய குமாரன்

நீதிமொழிகளில் இயேசு - தேவனுடைய செல்லப்பிள்ளை

பிரசங்கியில் இயேசு - எல்லாவற்றிற்கும் மேலானவர்

உன்னதப்பாட்டில் இயேசு - முற்றிலும் அன்புமயமானவர்
ஏசாயாவில் - அபிஷேகம் பண்ணப்பட்டவரும், இரட்சகரும்
எரேமியாவில் இயேசு - நமது நீதிபரர்
புலம்பலில் இயேசு - துக்கமுள்ள மனிதர்
எசேக்கியேலில் இயேசு - அரசரும், ஆசாரியரும்
தானியேலில் இயேசு - மேசியாவும், அரசரும்
ஓசியாவில் இயேசு - விழுந்து போனவர்களை இரட்சிப்பவர்
யோவேலில் இயேசு - உலகை அசைக்கிறவர்
ஆமோஸில் இயேசு - கடிந்து மீட்டுக்கொள்பவர்
ஒபதியாவில் இயேசு - அரசாங்கத்துக்கு அதிபதி
யோனாவில் இயேசு - எழும்பின தீர்க்கதரிசி
மீகாவில் இயேசு - பெத்லகேமில் உதித்த ராஜா
நாகூமில் இயேசு - நற்செய்தியைக் கொண்டு வருபவர்
ஆபகூக்கில் இயேசு - சிலுவை தழும்புள்ள மனிதர்
செப்பனியாவில் இயேசு - மீட்டுக் கொள்ளும் இரட்சகர்
ஆகாயில் இயேசு - மக்களுடைய ஆசை
சகரியாவில் இயேசு - எளிமையும் தாழ்மையுமானவர்
மல்கியாவில் இயேசு - நீதியின் சூரியன்

ஆ) புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் இயேசு கிறிஸ்து

மத்தேயுவில் இயேசு - இம்மானுவேல்
மாற்குவில் - வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்
லூக்காவில் இயேசு - மன்னிக்கும் எஜமானர்
யோவானில் இயேசு - சிருஷ்டிகர், இரட்சகர்
ரோமரில் இயேசு - நீதிபதி
1 கொரிந்தியரில் இயேசு - உயிர்த்தெழுதலின் நம்பிக்கை

2 கொரிந்தியரில் இயேசு - ஆழ்ந்த அன்பு

கலாத்தியரில் இயேசு - இரட்சிக்கும் கிருபை

எபேசியரில் இயேசு - சபையின் தலைவர்

பிலிப்பியரில் இயேசு - உயிர்த்தெழுந்த ஜீவனின் வல்லமை

கொலோசெயரில் இயேசு - முதற்பலனானவர்

1 தெசலோனிக்கேயரில் - மரித்தவர்களை எழுப்பும் ஒலி

2 தெசலோனிக்கேயரில் - பாவிகளால் அஞ்சப்படத்தக்கவர்

1 தீமோத்தேயுவில் - பரிசுத்தவான், மத்தியஸ்தர்

தீத்துவில் இயேசு - உலகத்தின் ஆசீர்வாத நம்பிக்கை

பிலமோனில் இயேசு - நமது பிரதான ஆசாரியர்

1 பேதுருவில் இயேசு - குற்றமில்லா தேவ ஆட்டுக்குட்டி

2 பேதுருவில் இயேசு - நமது இதயங்களின் விடிவெள்ளி

யோவான் நிருபங்களில் இயேசு - ஜீவனுள்ள வார்த்தை

யூதாவில் இயேசு - இரட்சகரான தேவன்

வெளிப்படுத்தலில் இயேசு - வரப்போகிற இராஜாதி ராஜா

IX. வேதாகமத்திற்கு வேதாகமம் வழங்கும் பெயர்கள்

நமது வேதாகமத்திற்கு நாம் திருவிவிலியம், உலக மொதுமறை, திருமறை, வேதம் என்று பல பெயர்களை சூட்டியுள்ளோம். ஆனால் வேதாகமம் தனது பெயரினை எப்படி யெல்லாம் அறிமுகப்படுத்துகிறது என கீழ்கண்ட 10 குறிப்புக ளில் காணலாம்.

1) கர்த்தருடைய புஸ்தகம் (ஏசா.34:16)

2) வேத புஸ்தகம் (2 நாளா.17:9)

3) நியாயப்பிரமாண புஸ்தகம் (யோசு.1:8)

4) உடன்படிக்கையின் புஸ்தகம் (யாத்.24:7; 2 இரா.23:21)

5) தீர்க்கதரிசன புஸ்தகம் (வெளி.22:19)

6) கர்த்தருடை வேதம் (சங்.19:7; சங்.1:2; சங்.119:1; எஸ்.7:10)

7) சத்திய வேதம் (மல்.2:6)

8) தேவனுடைய வேதம் (ஓசி.4:6)

9) தேவன் அருளிய வேதம் (சங்.37:31)

10) பரிசுத்த வேதாகமம் (ரோம.1:4)

X. வேதாகமத்திலுள்ள வசனங்களுக்குரிய பெயர்கள்

நமது பரிசுத்த வேதாகமத்திலுள்ள வேதவசனங்களுக்கு அநேக எழுதப்பட்ட பெயர்களும், சில உருவக பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளை குறித்த குறிப்புகளை இங்கே காணலாம்.

அ) எழுதப்பட்ட பெயர்கள்

1) கர்த்தருடைய வசனம் (சங்.18:30)

2) தேவனுடைய வசனம் (ஏசா.40:8)

3) கிறிஸ்துவின் வசனம் (கொலோ.3:16)

4) தேவ வசனம் (அப்.6:8)

5) இரட்சிப்பின் வசனம் (அப்.13:26)

6) கிருபையுள்ள வசனம் (அப்.20:32)

7) ராஜ்யத்தின் வசனம் (மத்.13:19)

8) வல்லமையுள்ள வசனம் (எபி.1:3; யாக்.1:21)

9) நீதியின் வசனம் (எபி.5:13)

10) ஜீவ வசனம் (பிலி.2:14)

11) சாட்சியின் வசனம் (வெளி.12:11)

12) சத்திய வசனம் (2 தீமோ.2:15)

13) நித்திய ஜீவ வசனம் (யோவா.6:68)

14) தேவனுடை வாக்கியம் (யோவா.3:2)

15) ஜீவ வாக்கியங்கள் (அப்.7:38)

16) வேத வாக்கியங்கள் (யோவா.5:39)

17) நீதியான வார்த்தை (ஏசா.45:23)

18) பரிசுத்த வேத எழுத்துக்கள் (2 தீமோ.3:15)

மேற்கண்ட 18 குறிப்புகளும் வேதாகமத்திலுள்ள வசனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்களாகும். மட்டுமல்லாமல் இந்த வேத வசனங்களுக்கு சில உருவக பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளின் தொகுப்பையும் உங்களுக்கு வழங்குகிறேன். உருவக பெயர்கள் வேத வசனத்தின் தன்மையை நமக்கு படம்படித்து காட்டுகிறதாய் அமைகிறது.

ஆ) உருவக பெயர்கள்

1) வளர்ச்சியை தரும் ஞான பால் (1 பேது.2:3)

2) வழிகாட்டும் விளக்கு (2 பேது.1:19)

3) பிரதிபலிக்கும் கண்ணாடி (யாக்.1:25)

4) ஆகாரத்தை விளைவிக்கும் மழை (ஏசா.55:10,11)

5) கன்மலையை நொறுக்கும் சம்மட்டி (எரே.23:29)

6) போஷிக்கும் அப்பம் (மத்.4:4)

7) ஜநிபிக்கும் அழிவில்லாத வித்து (1 பேது.1:23)

8) இருபுறமும் கருக்குள்ள பட்டயம் (எபி.4:12)

9) சுட்டெரிக்கும் அக்கினி (எரே.5:14)

10) அனைவரும் விரும்பும் பசும்பொன் (சங்.19:10)

11) மதுரமான தெளித்தேன் (சங்.19:10)

12) புடமிடப்பட்ட வெள்ளி (சங்.12:6)

13) தானியத்தை பிறப்பிக்கும் விதை (லூக்.8:11)

மேற்கண்ட 13 குறிப்புகளும் திருவசனத்தின் தன்மையை நாம் புரிந்து கொள்ளும்படி உருவகமாக கொடுக்கப்பட்ட பெயர்களாகும்.

XI. ஏற்பாடு பொருள் காரணம்

ஏற்பாடு என்னும் சொல் உடன்படிக்கை, ஒப்பந்தம், (Testament - Covenant) என்ற பொருளை தருகிறது. இரண்டு நபர் அல்லது இரண்டு குழுவினருக்கு இடையே ஏற்படும் ஒப்பந்தம். பழைய ஏற்பாடு என்பது தேவனுக்கும் அவர் தெரிந்து கொண்ட இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது போன்ற பரிசுத்தவான்கள் வழியாக செய்யப்பட்ட உடன்படிக்கையாகும்.

இவைகளில் மோசேயின் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு பத்து கற்பனைகளின் மூலமாய் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கை பிரதானமானதாகும். புதிய ஏற்பாடு என்பது தேவன் இயேசுவின் கிறிஸ்துவின் வழியாக முழு மனுகுலத்திற்கும் செய்துகொண்ட உடன்படிக்கையாகும்.

உடன்படிக்கை என்ற கருத்து பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிற்கும் அடிப்படையானது. கி.பி. 2-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து, பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று நாம் அழைக்கும் வேதாகமத்தின் இரண்டு பிரிவுகளைளையும் பழைய உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை என்று சபை பெயரிட்டுள்ளது.

எபிரேய மொழியில் உடன்படிக்கைக்கு பெரித் (Berith) என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் ஒரு ஒப்பந்தம், உறுதிமொழி அல்லது இணக்கம் என்பதாகும். கிரேக்க மொழியில் உடன்படிக்கைக்கு டையாதெக் (Diatheke) என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் சமமில்லாத பிரிவினிரிடையே ஏற்படும் ஓர் ஒப்பந்தம் என்பதாகும்.

தேவன் மனுக்குலத்தோடு செய்துள்ள உடன்படிக்கை என்பது (டையாதெக்) வகையை சார்ந்தது. ஒருவருக்கொருவர் சமமில்லாத பிரிவினரோடு இறங்கி வந்து ஒப்பந்தம் செய்வதை இது குறிக்கிறது. தேவனுடைய உடன்படிக்கையில் மூன்று பரிமாணங்கள் இருப்பதை காணலாம்.

அ) நான் உங்கள் தேவனாயிருப்பேன்

ஆபிரகாமிடத்தில் (ஆதி.17:7)

ஈசாக்கினிடத்தில் (ஆதி.26:24)

யாக்கோபினிடத்தில் (ஆதி.28:13,14)

மோசேயினிடத்தில் (யாத்.29:45,46; உபா.29:13)

தாவீதினிடத்தில் (2 சாமு.7:24)

எரேமியாவினிடத்தில் (எரே.31:33; எபி.8:10)

எசேக்கியேலினிடத்தில் (எசே.37:27)

ஆ) நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்

மோசேயினிடத்தில் (உபா.7:6; 29:12,13)

தாவீதினிடத்தில் (2 சாமு.7:24)

எரேமியாவினிடத்தில் (எரே.31:33; எபி.8:10)

எசேக்கியேலினிடத்தில் (எசே.37:27)

இ) நான் உங்களில் வாசமாயிருப்பேன்

மோசேயினிடத்தில் (யாத்.29:45,46)

தாவீதினிடத்தில் (2 சாமு.7:5-14; அப்.7:44-49)

எசேக்கியேலினிடத்தில் (எசே.37:27,28)

இந்த உடன்படிக்கைப் பரிமாணங்களின் நிறைவேறுதல் கிறிஸ்துவிலும், புதிய எருசலேமிலும் தன்னுடைய முழுமை

யான உச்சக் கட்டத்தை அடைகிறது. (வெளி.21:3,4; 2 கொரி 6:16-18). நமது தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையை மறவாமலும், வழி மாற்றாமலும் இருந்தார், இன்றும் இருக்கிறார். நாமும் உடன்படிக்கைக்கு பாத்திரவான்களாக நம்மை தகுதிபடுத்திக்கொண்டு, உடன்படிக்கை ஒப்பந்தத்தில் உண்மை யுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பாகும்.

XII. அதிகாரங்களும், வசனங்களும்

வேதத்தில் உள்ள ஐந்து புத்தகங்களைத் தவிர, மற்ற புத்தகங்கள் அதிகாரங்களாகவும், பல்வேறு வசனங்கள் கொண்டதாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அந்த ஐந்து புத்தகங் கள் முறையே ஒபதியா, பிலேமோன், 2 யோவான், 3 யோவான் மற்றும் யூதா ஆகும். இந்த புத்தகங்கள் மிகவும் சிறியவையாக காணப்பட்டு, வசனங்கள் மட்டுமே பிரிக்கப்பட்டு தனித்தனி புத்தகங்களாக வேதாகமத்தில் இணைக்கப் பட்டுள்ளது.

வேத வசனங்களை பிரிவுகளாகவும், அதிகாரங்களாக வும் பிரித்து கார்டினல் ஹுகோ டி எஸ். காரோ என்பவர் கி.பி. 1238-ம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். மேலும், வேத வசனங்க ளை தனித்தனி வசனங்களாக ராபர்டஸ் ஸ்டீபன்ஸ் என்பவர் 1551-ம் ஆண்டு பிரித்து அதிகாரங்களுக்குள் உள்ளடக்கினார். அதுவரையிலும் வசனங்கள் பிரிக்கப்படவில்லை. இவர்களது கடின உழைப்பினால் தான் மிக எளிதில் வேதாகம வசனங்க ளை அடையாளப்படுத்த முடிகிறது.

XIII. வேதாகமத்தின் பிரிவுகள்

இந்த பரிசுத்த வேதாகமம் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என இரு பெரும் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் என மொத்தம் 66 புத்தகங்கள் நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. எனவே இந்த

பரிசுத்த வேதாகமத்தை புத்தகங்களின் புத்தகம் எனவும் அழைக்கலாம்.

நமது பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் 929 அதிகாரங்களும், புதிய ஏற்பாட்டில் 260 அதிகாரங்களும் என மொத்தம் 1,189 அதிகாரங்கள் இடம் பெற்றுள்ளது. மேலும் பழைய ஏற்பாட்டில் 23,219 வசனங்களும், புதிய ஏற்பாட்டில் 7,954 வசனங்களும் என மொத்தம் 31,173 வசனங்கள் உள்ளது. வார்த்தைகளை கணக்கிட்டால் பழைய ஏற்பாட்டில் 5,92,439 வார்த்தைகளும், புதிய ஏற்பாட்டில் 1,89,253 வார்த்தைகளும் என மொத்தம் 7,73,692 வார்த்தைகள் உள்ளது.

எழுத்துக்களின் அடிப்படையில் கணக்கிட்டால் பழைய ஏற்பாட்டில் 27,28,100 எழுத்துக்கள், புதிய ஏற்பாட்டில் 838380 எழுத்துக்கள் என மொத்தம் 35,66,480 எழுத்துக்கள் வேதாகம த்தில் உள்ளது.

அ) வேதாகமத்தின் முதல் பகுதி - பழைய ஏற்பாடு

வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன. அதில் பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்கள் உள்ளது. அவை எபிரேயு, அராபிக் மொழியில் எழுதப்பட்டது. பழைய ஏற்பாட்டில் உலகப் படைப்பைப் பற்றியும், மனித வரலாற்றைப் பற்றியும், தேவனுடைய ஜனங்களுக்குக் கொடுத்த நியாயப் பிரமாணத்தைப் பற்றியும், தேவனைப் புகழ்ந்து பாடிய சங்கீதங்களையும், தேவன் மனிதனுக்குச் சொன்ன நீதிநெறிக ளையும், வருங்காரியங்களைக் குறித்த தீர்க்கதரிசனங்களைப் பற்றியும் எழுதியிருக்கிறது. குறிப்பாக பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் வருகையையும் சிலுவைப்பாடுகள் குறித்தும் எழுதப்பட்டிருக்கிறது.

ஆ) வேதாகமத்தின் இரண்டாம் பகுதி - புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் உள்ளது. அவை கிரேக்க மொழியில் எழுதப்பட்டு உள்ளது. புதிய ஏற்பாட்டில்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளை உள்ளடக்கிய சுவிசேஷமும் திருச்சபையின் வரலாறும், திருச்சபைக்கு இறுதிக்காலத்தைப் பற்றிய விழிப்புணர்வு வருவதற்காக எழுதிய நிருபங்கள், இறுதி நாட்களில் உலகில் சம்பவிக்கும் காரியங்கள் ஆகிய இறுதி வெளிப்பாடும் எழுதப்பட்டுள்ளது.

இ) வேதாகமத்தின் பத்து உட்பிரிவுகள்

நமது வேதாகமத்தை பத்து பிரிவுகளாக பிரித்து நாம் எளிதில் கிரமமாக கற்றுக்கொள்ள முடியும்.

பழைய ஏற்பாட்டில் ஐந்து பிரிவுகள், புதிய ஏற்பாட்டில் ஐந்து பிரிவுகள் என மொத்தமாக பத்து பிரிவுகளையும் வரிசைபடுத்தலாம்.

பழைய ஏற்பாட்டின் ஐந்து பிரிவுகள்

பழைய ஏற்பாட்டு தொகுதியில் பஞ்சாகமங்கள் (5), சரித்திர புத்தகங்கள் (12), கவிதை புத்தகங்கள் (5), பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (5), சிறிய தீர்க்கதரிசன புத்தங்கள் (12) ஆகிய உட்பிரிவுகள் காணப்படுகின்றன.

- ***பஞ்சாகமங்கள் (5)***

ஆதியாகமம் முதல் உபாகமம் வரையுள்ள ஐந்து புத்தகங்கள் ஆகமங்கள் என அழைக்கப்படுகிறது. இவைகள் சட்ட புத்தகங்கள் எனவும், நியாயப்பிரமாணம் எனவும், பஞ்சாகமம் எனவும் அழைக்கப்படுகிறது. எபிரேய மொழியில் இதனை தோரா (Torah Ketuvim) என்பார்கள்.

- ***சரித்திர புத்தகங்கள் (12)***

யோசுவா முதல் எஸ்தர் வரையிலுமுள்ள 12 புத்தகங்கள் சரித்திர புத்தகங்கள் என அழைக்கப்படுகிறது. எபிரேயத்தில் இதனை கெத்துவிம் (Ketuvim) என்பார்கள்.

- ***கவிதை புத்தகங்கள் (5)***

யோபு முதல் உன்னதப்பாட்டு வரையுமுள்ள ஐந்து புத்தகங்களும் பாட்டு புத்தகங்கள் அல்லது செய்யுள் ஆகமங் கள் என அழைக்கின்றனர். இதனை ஐந்து சுருள்கள் அல்லது செய்யுள் ஆகமங்கள் என அழைப்பதுண்டு. இதற்கு எபிரேய மொழியில் மகிலோத் என்ற பெயர் கொடுக்கப்பட்டு ள்ளது.

- ***பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (5)***

ஏசாயா முதல் தானியேல் வரையுள்ள ஐந்து புத்தகங்களும் பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் என அழைக்கப்படுகிறது. அளவில் பெரிய புத்தகங்களை இவர்கள் எழுதியதால் இவைகள் பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் என அழைக்கப்படுகிறது.

- ***சிறிய தீர்க்கதரிசன புத்தங்கள் (12)***

ஓசியா முதல் மல்கியா வரையிலுமுள்ள 12 புத்தகங்க ளும் சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் என்று அழைக்கப் படுகிறது. எபிரேய மொழியில் சிறிய மற்றும் பெரிய தீர்க்க தரிசன புத்தகங்களை நெபீம் என அழைப்பார்கள்.

புதிய ஏற்பாட்டின் ஐந்து பிரிவுகள்:

புதிய ஏற்பாட்டு தொகுதியில் சுவிசேஷங்கள் (4), சரித்திர புத்தகம் (1), பவுலின் நிருபங்கள் (3+1=14), பொதுவான நிருபங்கள் (7), தீர்க்கதரிசன புத்தகம் (1) ஆகிய உட்பிரிவுகள் காணப்படுகின்றன.

- ***சுவிசேஷங்கள் (4)***

மத்தேயு முதல் யோவான் வரையுள்ள 4 புத்தகங்க ளும் சுவிசேஷங்கள் அல்லது நற்செய்தி நூல்கள் என அழைக்கப்படுகிறது.

- ***சரித்திர புத்தகம் (1)***

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் என்னும் அற்புதமான புத்தகம் புதிய ஏற்பாட்டின் சபை வரலாற்றினை தெளிவுற கூறுகிறது. இந்நூலை சபையின் சரித்திரங்கள் என்றும் அழைப்பதுண்டு.

- ***பவுலின் நிருபங்கள் (14)***

ரோமர், 1 & 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1 & 2 தெசலோனிக்கேயர், 1 & 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் ஆகிய 13 கடிதங்கள் பவுலடிகளாரால் எழுதப்பட்டவை ஆகும்.

இவைகளுக்கு அடுத்து வரும் எபிரேயருக்கு எழுதின நிருபம் யாரால் எழுதப்பட்டது என்று தெரியவில்லை. ஆயினும் எழுத்து நடைகளின் அடிப்படையில் இந்நிருபத்தையும் பவுல் எழுதியிருக்க வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.

- ***பொதுவான நிருபங்கள் (7)***

யாக்கோபு, 1 & 2 பேதுரு, 1, 2, & 3 யோவான், யூதா ஆகிய 7 கடிதங்கள் பொதுவான நிருபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நிருபங்களை பவுல் எழுதாத பிற நிருபங்கள் என்றும் அழைப்பதுண்டு.

- ***தீர்க்கதரிசன புத்தகம் (1)***

நமது வேதாகமத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தின விசேஷம் என்னும் புத்தகம் தீர்க்கதரிசன புத்தகம் அல்லது வெளிபாட்டின் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டு கால சபைகளை வருகைக்கு ஆயத்தப்படுத்துவதும், நித்திய வாழ்விற்கான நம்பிக்கையையும் இந்நூல் அருளுகிறது.

XIV. எபிரேய வேதாகமத்தின் பிரிவுகள்

பழைய ஏற்பாடு (Old Testament) விவிலியத்தின் முதலாவது பகுதியாகும். பழைய ஏற்பாடு கிறித்தவர்களுக்கும் யூத சமயத்தவர்க்கும் பொதுவானதாகும். இது எபிரேய வேதாகமம் என்றும் அழைக்கப்படுகிறது. யூதர்கள் பழைய ஏற்பாட்டின் (எபிரேய வேதாகமம்) 39 நூல்களையும் TaNaKh (தானாக்) என்னும் சுருக்கக் குறியீடு மூலம் கீழ்வருமாறு பிரிப்பர்.

தோரா (Torah) (Ta) - சட்டங்கள், ஐந்து நூல்கள் (Pentateuch)

நெவீம் (Nevi'm) (Na) - நபிகள் அல்லது தீர்க்கர்கள்

கெதுவிம் (Ketuvim) (Kh) - பரிசுத்த எழுத்துக்கள்

அ) தோரா (Torah) - சட்டங்கள், ஐந்து நூல்கள் (5)

1) ஆதியாகமம்
2) யாத்திரகமம்
3) லேவியராகமம்
4) எண்ணாகமம்
5) உபாகமம்

ஆ) நெவீம் (Nevi'm) - நபிகள் அல்லது தீர்க்கர்கள் (8)

நெவீம் என்னும் தீர்க்கதரிசன புத்தகங்கள் முந்தைய தீர்க்கதரிசிகள், பிந்தைய தீர்க்கதரிசிகள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- ***முந்தைய தீர்க்கதரிசிகள் (4)***

6) யோசுவா
7) நியாயாதிபதிகள்
8) சாமுவேல்

9) இராஜாக்கள்

- ***பிந்தைய தீர்க்கதரிசிகள் (4)***

10) ஏசாயா

11) எரேமியா

12) எசேக்கியேல்

13) 12 சிறிய தீர்க்கதரிசிகள்

இ) கெத்துவிம் (Ketuvim) - பரிசுத்த எழுத்துக்கள் (11)

கெத்துவிம் என்பது பரிசுத்த எழுத்துக்கள் ஆகும். இந்த தொகுப்பில் கவிதைகள், சுருள்கள், சரித்திரங்கள் இடம்பெற்றுள்ளது.

- ***பாட்டாகமங்கள் (3)***

14) யோபு,
15) சங்கீதம்,
16) நீதிமொழிகள்

- ***சுருள்கள் (5)***

17) உன்னதப்பாட்டு
18) ரூத்
19) புலம்பல்
20) பிரசங்கி
21) எஸ்தர்

- ***சரித்திரங்கள் (3)***

22) தானியேல்
23) எஸ்றா + நெகேமியா
24) நாளாகமம்

எபிரேய வேதாகமத்தில் மொத்தம் 24 புத்தகங்கள் உள்ளடங்கியுள்ளது. இந்த எபிரேய வேதாகமத்தை யூதர்கள் இன்றளவும் பயன்படுத்தி வருகின்றனர். இந்த வேதாகமத்தினை தானாக் என அழைக்கிறார்கள்.

எபிரேய வேதாகமத்தின் மூன்று பிரிவுகளின் எபிரேய தலைப்புக்களின் சுருக்க குறியிடே தானாக் என்பதாகும். தோரா என்பதிலிருந்து Ta என்பதையும், நெவீம் என்பதிலிருந்து Na என்பதையும், கெத்துவிம் என்பதிலிருந்து Kh என்பதையும் எடுத்து TaNaKh (தானாக்) என பெயரிட்டுள்ளனர்.

XV. **தள்ளுபடி ஆகமங்கள்** (Apocryphal Books)

எபிரெய பழைய ஏற்பாட்டில் இல்லாத 14 அல்லது 15 ஆகமங்கள் "அப்போகிரிப்பா" (Appocryphal Books) எனப்படுகிறது. இதையே தமிழில் "தள்ளுபடி ஆகமம்" என்று கூறுகிறோம். இந்த தள்ளுபடி ஆகமங்களில் பெரும்பாலும் ரோமன் கத்தோலிக்க வேதாகமத்தில் இடம் பெறுகிறது.

அப்போகிரிப்பா (Appocryphal) என்ற வார்த்தைக்கு "மறைவானது" அல்லது "இரகசியமானது" (Hidden or Secret) என்பது பொருள். தள்ளுபடி ஆகமங்களின் உறுதியான எழுத்தாளர், எழுதப்பட்டகாலம், இந்தப் புத்தகங்கள் உருவான வீதம் ஆகியவை திட்டமாய் தெரியவில்லை. எனவே அப்போகிரிப்பா என பெயர் வந்திருக்கலாம்.

அ) தள்ளுபடி ஆகமங்களின் பெயர்கள்

1) 1 எஸ்ட்றாஸ் - I Esdras

2) 2 எஸ்ட்றாஸ் - 2 Esdras

.3) தொபியாஸ் ஆகமம் - Tobit

4) ஜூடித் ஆகமம் - Judith

5) எஸ்தரின் புத்தகம் - Book of Esther

6) சாலொமோன் ஞானம் - Wisdom of Solomon

7) பிரசங்கியின் புத்தகம் - Ecclesiastucus

(பொது வேதாகமத்தில் உள்ளதல்ல)

8) பாருக் - Baruch

9) 3 பரிசுத்தப் பிள்ளைகளின் பாட்டு - Songs of the Three Holy Children

10) சூசன்னாளின் சரித்திரம் - History of Susannce

11) பெல் கடவுளும், வலுசர்ப்பமும் - Bel and Dragon

12) மனாசேயின் ஜெபம் - Prayer of Manasseh

13) 1 மக்கபேயர் - 1 Maccabees

14) 2 மக்கபேயர் - 2 Maccabees

15) எரேமியாவின் நிருபம் - Jeremiah Epistle

கி.பி. 363-ல் லவோதிக்கேயாவில் நடந்த சபை தலைவர்களின் கூட்டத்தில் இந்தப் புத்தகங்கள் ஆவியினால் நிறைந்து எழுதப்பட்டவை அல்ல, எனவே தேவனுடைய வசனம் என்று இவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இவைகளை சபைகளில் உபயோகிக்கக் கூடாது எனத் தீர்மானித்தனர். இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தது கிரேக்க சபையார் ஆவர். ஆனால் 1546-ல் டிரண்ட் என்ற ஊரில் நடந்த கத்தோலிக்க ஆலோசனைக் கூட்டத்தில் இவைகளில் பெரும்பான்மையானவைகளை வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ள தீர்மானித்தார்கள்.

ஆ) சூடோகிரிப்பா (Pseudocrypha)

மேற்கண்ட தள்ளுபடி ஆகமங்கள் தவிர, புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எழுதப்பட்ட முதல் 100 ஆண்டுகளிலும்,

அதற்கு அடுத்த நூற்றாண்டிலும் “சூடோகிரிப்பா” (பொய்யான எழுத்துக்கள்) "Pseudepgrapha" என்னும் இலக்கிய தொகுப்புக்கள் தள்ளுபடி ஆகமங்களுக்கு இணையாக எழுந்தன. இவற்றை யூதரும், கிறிஸ்தவர்களும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை.

கள்ள எழுத்துக்கள் அல்லது கள்ள புத்தகங்கள் கி.மு. இறுதி நூற்றாண்டிலும், கி.பி. முதலாம் நூற்றாண்டிலும் இவை எழுதப்பட்டன. இவைகளுக்கு புதிய ஏற்பாட்டு அப்போகிரிப்பா என்ற மறுபெயரும் உண்டு. இவைகள் பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற வேண்டும் என்ற தவறான நோக்கத் துடன் இப் புத்தகங்களுக்கு வேதாகமத்தில் காணும் பெரியோர் களின் பெயர்களை சூட்டியிருக்கின்றனர். (உம்.) ஏனோக்கு, நோவா. பவுல், தோமா, இன்னும் பலர்..

பல்வேறு பின்னணியங்களையும், பாரம்பரியங்களையும் சுவாரசியக் கதைகளாகவும், அறிவு புகட்டும் எழுத்துக்களாக மட்டும் இத்தகைய ஆகமங்கள் அமைந்திருந்தமையால் நியாய மான மற்றும் தகுந்த காரணங்களின் அடிப்படையில் மேற்படி ஆகமங்களைக் ஆதி சீர்திருத்த திருச்சபைகள் புறக்கணித்தன.

நமது விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும், இரட்சிப்புக் கும், கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் மேற்கண்ட இவ்விருநூல்க ளும் அத்தியாவசியமானவையல்ல என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

இ) தள்ளுபடி ஆகமங்களை தள்ளுபடி செய்ய காரணங்கள்

1546ல் டிரென்ட் ஆலோசனைக்கூட்டத்தில், ரோமன் கத்தோலிக்க சபை இப்புத்தகங்களை ஏற்றுகொண்டாலும் ஆதி சபைகள் பரிசுத்தாவியின் ஏவுதலால் எழுதப்பட்ட புத்தகங்கள் அல்லவென்று நிராகரித்துவிட்டன. ஒருவேளை இப்புத்தகங்க ளில் வரலாற்று உண்மைகளும், திறமைகளும் இருந்தாலும் இவைகள் கீழ்காணும் காரணங்களால் தள்ளப்படுகின்றன.

1. இயேசு கிறிஸ்துவை தேவன் என்று இந்த புத்தகங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

2. எபிரெய பழைய ஏற்பாட்டில் அது சேர்க்கப்பட தகுதியற்றது என்பதை ஆதிமுதலே யூத தலைவர்கள் தீர்மானித்திருந்தனர்.

4. பழைய ஏற்பாட்டின் புத்தகங்களின் அட்டவணையில் யூத வரலாற்று ஆசிரியர் ஜொசிபஸ் தள்ளுபடி ஆகமங்களைச் சேர்க்கவில்லை.

5. தள்ளுபடி ஆகமங்களை எழுதிய ஆசிரியர்கள் எவரும் தெய்வீக ஏவுதலை தெரிவிக்கவில்லை, சிலர் இதனை மறுக்கின்றனர். (உதா: 1 மக்.4:46, 2 மக்.2:23,15,38).

6. கிரேக்க மொழிபெயர்ப்பில் இவைகள் இடம்பெற்றிருந்தாலும் மூல எபிரேயு பதிப்பில் இவைகள் இடம்பெறவில்லை.

7. சரித்திரத்திற்கும், வருடங்களுக்கும், நிலவியல் அமைப்பிற் கும், முரண்பட்ட காரியங்கள் இதில் காணப்படுகின்றன. இந்த புத்தகங்களில் பொய்யான வரலாறும், இடங்களும், தவறான வருடங்களும், உண்மையற்ற கட்டுகதைகளும் காணப்படுகி ன்றன.

8. வேத வசனங்களுக்கு முரண்பட்ட உபதேசங்களும், பழக்க வழக்கங்களும் இவைகளில் கூறப்பட்டுள்ளது.

9. வேதாகம மொழி பெயர்ப்புகளிலும் இவை சேர்க்கப்படவில் லை. கி.பி 360-ல் கூடிய Bible Council-லில் இந்த ஆகமங்க ளைச் சேர்க்கவில்லை.

10. ஜெமினியாவில் 90 கி.பி யில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் யூதர்கள் இவைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

11. வேதத்தில் சொல்லப்பட்ட தரமான உபதேசங்களுக்கு மாறாக சில பொய்யான உபதேசங்களை உபதேசிக்கின்றது (தற்கொலை, தாக்குதல், மரித்தோருக்கான ஜெபம் போன்ற காரியங்களை நியாயப்படுத்துகின்றது).

12. இயேசுவும் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் இந்த புத்தக ங்களிலிருந்து ஒரு குறிப்பும் எடுத்து சொன்னதில்லை. அனால் மற்ற புத்தகங்களில் இருந்து நூற்றுக்கணக்கான குறிப்புகளை எடுத்துரைத்திருக்கிறார்கள்.

13. ஆதிகால சபை பிதாக்களான ஒரிஜன், ஜெரோம், டட்டுலிய ன், ஜெருசலேம் சிறில், தேர்ட்டுலியன் மற்றும் ஆத்ரசியஸ் போன்றவர்கள் இவைகளுக்கு எதிராக பேசினார்கள்.

14. முதல் நான்கு நூற்றாண்டுகளில் வேதாகமம் சார்ந்த ஆலோசனைக் கூட்டங்களில் இவைகள் அங்கீகரிக்கப்பட வில்லை.

15. பிரபல மத போதகர் லூத்தரும், சீர்திருத்தவாதிகளும் இந்த புத்தங்களை நிராகரித்தனர்.

16. சீர்திருத்த காலங்களில் இருந்த ரோமன் கத்தோலிக்க அறிஞர்களும் தள்ளுபடி ஆகமங்களை நிராகரித்தனர்.

17. கேனானின் அளவுகோல் விதிகளை இந்த புத்தகங்கள் நிறைவேற்றவில்லை.

XVI. **கேனான் அளவுகோல்** (Canonical Order)

பரிசுத்த வேதாகம ஆசிரியர்கள் நமது வேதத்தை தொகுப்பதற்காக உபயோகப்படுத்தின முறைதான் கேனான். கிரேக்க மொழியில் கேனான் என்பது லெவல் (Level) அல்லது அளவுகோல் (Ruler) எனப் பொருள்படும். இதை தச்சர்கள் பயன்படுத்துவார்கள், வேதபாரகர்கள் பயன்படுத்தும் கருவியு

மாகும். இதனால் கேனான் என்பது நடத்தையின் அளவுகோல் அல்லது விசுவாசத்தின் அளவுகோல் என்பதையும் குறிக்கும். இந்த அளவுகோல் வேதாகமத்தில் அங்கீகரிக்கப்பட்ட 66 ஆகம தொகுப்பையும் குறிக்கும். இப்பதத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர் "அத்தேநேசிஸி" என்னும் ஆதி சபைப்பிதா ஆவர்.

கேனான் என்ற அளவுகோலின் அடிப்படையிலேயே வேதத்தின் 66 புத்தகங்களும் தொகுக்கப்பட்டன. அவைகள் தொகுக்கப்படுவதற்கான விதிமுறைகளை தேவ மனிதர்கள் குறித்திருந்தனர்.

கேனான் விதிமுறைகள்

வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன இவற்றை வேதாகமமாகக் கோர்க்கும்போது, வேதாகம புத்தக ங்களுக்கு சில தகுதிகள் இருக்க வேண்டுமென்று யூத மார்க்கத் தின் மதத்தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆகையால், ஏராள மான கடுப்பாடுகளை உள்ளடக்கிய வரையறைகளுக்கு உட் பட்டு இந்த புத்தகங்கள் வேதாகமத்தில் இடம் பெற்றன.

1) வேதாகமத்தின் புத்தகத்தை ஏதாவது ஒரு தீர்க்கதரிசி எழுதியிருக்கவேண்டும் அல்லது ஏதாவது ஒரு தீர்க்கதிரிசி அந்தப்புத்தகத்தை அங்கீகரித்திருக்கவேண்டும்.

2) ஒரு புத்தகம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, எழுதப் பட்டது மற்றும் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெறுவதற்கு தகுதியுடையது என்று யூத ரபிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3) இயேசு கிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் அந்த புத்தகங்களை அங்கீகரித்திருக்க வேண்டும். அதிலுள்ள வசனங்களை மேற்கோளாகப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

4) வேதாகம நூல்களின் ஆசிரியர்கள் தாங்கள் பரிசுத்த ஆவி யானவரின் ஏவுதலினாலும், தெய்வீக அதிகாரத்தினாலும் இந்த

புத்தகங்களை எழுதியிருப்பதாக அங்கீகரிக்க வேண்டும்.

5) வேதாகமம் ஒரு வரலாற்று புத்தகமல்ல. ஆயினும், இது இஸ்ரவேலருடைய வரலாற்றை மிகவும் தெளிவாக கூறுகிறது. எனவே வேதாகம புத்தகங்கள் இஸ்ரவேலருடைய வரலாற்றை முரண்பட்டு கூறக்கூடாது.

6) வேதாகம புத்தகங்கள் கூறப்பட்டுள்ள சத்தியங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருக்கவேண்டுமே தவிர, முரண்பட்டு இருக்கக்கூடாது. இந்த அடிப்படையில்தான் பழைய ஏற்பாட்டிலுள்ள 39 புத்தகங்களும் தொகுக்கப்பட்டன.

XVII. **வேதாகம சரித்திரத்தின் சுருக்கம்**

தேவன் மனிதனை உருவாக்கி, ஒரு பரிபூரணமான சூழலில் அவனை வைத்தார்; இருப்பினும், மனிதன் தேவனுக்கு விரோதமாக செயல்பட்டு தேவ மகிமையற்றவனானான். இதன் விளைவு உலகம் தேவனால் சபிக்கப்பட்டது. ஆயினும் மனிதகுலத்தை மீட்பதற்கான ஒரு திட்டத்தை தமது சிந்தை யில் மிக நேர்த்தியாக வைத்திருந்தார்.

அவருடைய மீட்பின் திட்டத்தின் ஒரு பகுதியாக, தேவன் ஆபிரகாமை (சுமார் கி.மு. 2000) பாபிலோனியாவிலிரு ந்து கானானுக்கு அழைத்தார். தேவன், ஆபிரகாம் அவனது மகன் ஈசாக்கு மற்றும் அவனது பேரன் யாக்கோபுவையும் தொடர்ந்து வந்த சந்ததிகளுக்கும் வாக்குத்தத்தத்தை அளித் தார். எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த இஸ்ரவேலரை மீட்கும்படி மோசேயை தெரிந்தெடுத்து, அவர் தலைமையில் கி.மு 1,400-ல் மீட்பின் வாக்குதத்தத்திற்கு அடையாளமாக எகிப்திலிருந்து கானானுக்கு கொண்டு சென்றார்.

மீட்பின் திட்டம் நிறைவேற வனாந்திர யாத்திரையில் இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப்பிரமானத்தை கொடுத்து, அவர்

களோடு உடன்படிக்கை செய்தார். பின்பு சுமார் 400-ஆண்டு களுக்குப் பிறகு தாவீதும் அவருடைய குமாரனாகிய சாலமோனும் இருந்த காலத்தில் இஸ்ரேல் ஒரு பெரிய, சக்தி வாய்ந்த ராஜ்யமாக மாறியது.

தாவீதுக்கும் சாலமோனிற்கும் ஒரு சந்ததியார் ஒரு நித்திய ராஜாவாக ஆட்சி செய்வார் என்று தேவன் வாக்கு கொடுத்தார். சாலொமோன் ஆட்சிக்குப் பின், இஸ்ரவேல் தேசம் இரண்டாக பிரிக்கப்பட்டது.

பத்து கோத்திரங்கள் ஒன்றிணைந்து தேசத்தின் வடபுறத்தினை கட்டுப்படுத்தி ஆளுகை செய்தனர். இது இஸ்ரவேல் ராஜ்யம் என்றும் வடக்கு ராஜ்யம் என்றும் அழைக்கப்பட்டது. அவர்களுடைய விக்கிரக ஆராதனைக்காக தேவன் அவர்களை நியாயந்தீர்க்கும் வரையிலும் சுமார் 200 ஆண்டுகளுக்கு அவர்கள் வாழ்ந்தார்கள். அசீரியா வடக்கு தேசமாகிய இஸ்ரவேலை பின்தொடர்ந்து கி.மு.721-ல் சிறைப் படுத்தி கொண்டுபோனார்கள்.

தெற்கேயுள்ள இரண்டு கோத்திரங்கள் ஒன்றிணைந்து தேசத்தின் தென்புறத்தினை கட்டுப்படுத்தி ஆளுகை செய்தனர். இது யூதா ராஜ்யம் என்றும் தெற்கு ராஜ்யம் என்றும் அழைக்கப்பட்டது. அவர்கள் கொஞ்ச காலத்திற்கு நீடித்திருந்தார்கள், ஆனால் இறுதியில் அவர்களும் தேவனை விட்டு பின்மாறி போனார்கள். இறுதியில் பாபிலோனியர்கள் கி.மு. 600-ல் யூதா தேசத்தாரை பாபிலோனுக்கு சிறைப்படுத்தி கொண்டு போனார்கள்.

சுமார் 70 ஆண்டுகளுக்குப் பிறகு, சிறைப்பட்டவர்களில் மீதியானோர் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி செல்ல தேவன் இரக்கம் காட்டினார். தலைநகரான எருசலேம், கி.மு. 444-ல் மீண்டும் கட்டப்பட்டது, இஸ்ரேல் மீண்டும் ஒரு தேசிய அடையாளத்தை நிறுவியது. இவ்வாறு பழைய ஏற்பாடு முடிகிறது.

புதிய ஏற்பாடு சுமார் 400 ஆண்டுகளுக்குப் பிறகு பெத்லகேமில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் திறக்கிறது. இயேசு கிறிஸ்து ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் வாக்குறுதி அளிக்கப்பட்டவராக, மனிதகுலத்தை மீட்பதற்காகவும், சிருஷ்டிப்பை மீட்கும் படியாகவும் வந்து, தேவனின் திட்டத்தை நிறைவேற்றினார்.

இயேசு கிறிஸ்து உண்மையுடன் தமது வேலையை முடித்தார். பாவத்திற்கு மரித்தார், மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார். கிறிஸ்துவின் மரணம் புதிய உடன்படிக்கைக்கு (ஏற்பாட்டிற்கு) உலகிற்குள்ள அடிப்படையாகும். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற எவனும் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு நித்தியமாய் வாழுவான்.

அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை தம் வாழ்வின் சாட்சியினாலும் தமது வல்லமையினாலும் மனுகுலத்திற்கு மெய் மீட்பின் செய்தியை அறிவிக்க அதிகாரங்கொடுத்து அனுப்பினார். அப்போஸ்தலர்கள் இயேசுவின் நற்செய்தியைப் பரப்புவதற்கும், சபைகளை நிறுவுவதற்கும் ஒவ்வொரு திசையிலும் சென்றனர். உபத்திரபவங்களுக்கிடையே நற்செய்தி பணியையும், சீஷராக்கும் பணியையும் தொய்வின்றி நிறைவேற்றினர்.

அவர்கள் ஆசியா மைனர், கிரீஸ், மற்றும் அனைத்து ரோம சாம்ராஜ்யம் வழியாகப் பயணம் செய்தார்கள். புதிய ஏற்பாடு புதிய ஏற்பாடு மனுகுலத்தின் மீட்பிற்கான நற்செய்தியையும், மீட்கப்பட்டோர் கூடிவரும் சபைகளுக்கான ஆலோசனைகளையும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய தீர்க்கதரிசன எச்சரிப்பையும் எடுத் துரைத்து முடிகிறது.

பரிசுத்த வேதாகம சரித்திர நிகழ்ச்சிகளை கிரமமாக ஒன்றன்பின் ஒன்றாக பட்டியலிருகிறேன்.

அ) பரிசுத்த வேதாகம சரித்திர நிகழ்ச்சிகள் - பழைய ஏற்பாடு

1. படைப்புகள்: தேவனுடைய பரிபூரண திட்டம்

2. மனிதன்: தேவ சிருஷ்டிப்பின் மணி மகுடம்

3. பாவம் / மீறுதல்: அனைத்து வேதனைகளுக்கும் ஆரம்பம்

   - ❖ விழுகையில் தேவ திட்டம்

4. தேவனது மீட்பின் திட்டத்தில் இணைத்துக் கொண்ட நோவா

   - ❖ சேம், காம், யாப்பேத்,
   - ❖ ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பாவின் குடியேற்றங்கள்

5. தேவ மீட்பின் திட்டத்தில் புதிய ஒரு மைல்கல்

   - ❖ ஆபிரகாம் - மீட்பின் திட்டத்தில் ஒரு மைல்கல்
   - ❖ ஈசாக்கு - மீட்பருக்கு ஓர் முன்னடையாளம்
   - ❖ யாக்கோபு - மீட்பின் திட்டத்தில் ஓர் முத்திரை பதிப்பு
     - லேவி - யேகோவாவிற்காக பிரித்தெடுக்கப்பட்டவன்
     - யூதா - மீட்பரை ஆயத்தப்படுத்துவோன்
     - யோசேப்பு - இரட்சகன் (ஆதி.49, உபா.33.)

6. இஸ்ரவேல் - எகிப்திலிருந்து கானான் பயணம் (40 வருடம்), சீனாய் உடன்படிக்கை, இஸ்ரவேல் ஒரு ஒப்பற்ற மற்றும் நீதியின் தேசமாக உருவாகுதல்.

7. கானான் குடிகளை மேற்கொண்டு தேசத்தை சுதந்தரித்தல்

8. தேவனது மீட்பின் திட்டத்தில் நியாயதிபதிகளின் சேவை

9. ஏலி, சாமுவேல், சவுல், தாவீது

10. தாவீதின் உடன்படிக்கை - தாவீதுக்காக ஒரு விளக்கு

- ❖ தாவீதின் வெற்றி, வேதனை, வீழ்ச்சி, வளமை

11. சாலொமோன் பொற்கால ஆளுகை

- ❖ தேவனது ஞானம்
- ❖ தேவன் அருளிய செல்வம்
- ❖ உல்லாச வாழ்வு, விக்கிரக ஆராதனை
- ❖ யேகோவாவின் புறக்கணிப்பு

12. ஐக்கிய இஸ்ரவேல் இராஜ்யத்தின் பிரிவு

- ❖ வடக்கு இராஜ்யம் (10 கோத்திரங்கள்)
- ❖ தெற்கு இராஜ்யம் (2 கோத்திரங்கள் + லேவியர்)

13. தேவனது மீட்பின் திட்டத் தொடர்ச்சியில் தெற்கு இராஜ்யம்

- ❖ ஆசா, யோசபாத், யோராம், எசேக்கியா, யோசியா மற்றும் உசியா.
- ❖ இஸ்ரவேல் தீர்க்கர்கள்
- ❖ யூதா தீர்க்கர்கள்

14. பாபிலோனியர் எழுச்சி, ஆளுகை 70 ஆண்டுகள் (கி.மு 625, 612, 609, 606, 539)

- ❖ யூதாவின் மகிமை அழிக்கப்படல்
- ❖ யூதர்களின் சிறையிருப்பு (கி.மு. 606, 597, 586)
- ❖ தீர்க்கர்களின் நிலை: எரேமியா, எசேக்கியேல், மற்றும் தானியேல்

15. மேதியா, பெர்சியாவின் எழுச்சி

- ❖ ஏசாயா 45 ன் தீர்க்கதரிசன நிறைவேறல்
- ❖ பெர்சிய இராஜாவான கோரேஸ் (கி.மு.538)
- ❖ யூதர்களின் விடுதலை:
    - செருபாபேலின் தலைமை (கி.மு.536)
    - எஸ்றாவின் தலைமை - மார்க்க மறுமலர்ச்சி

- நெகேமியாவின் தலைமை சமூக மறுமலர்ச்சி
- தேவாலயம் திரும்பக் கட்டப்படல் (செருபாபேல், யோசுவா, தேசத்தின் குடிகள்)

16. மல்கியாவின் ஊழியம்

17. யூதர்களின் 400 ஆண்டுகள் (யூதர்களின் இருண்ட காலம்)

18. கிரேக்கர்கள்:

❖ கிரேக்க தளபதிகள் (தாலமி, செலுக்கியஸ், லிசிமாக் கஸ், கெஸாண்டர்)

- தாலமியர்: எகிப்து, பாலஸ்தீனம்
- செலுக்கியர்: சிரியா
- மக்கபேயரின் எழுச்சி, ஆளுகை
- தள்ளுபடி ஆகமங்கள்
- அரமேயு பாஷை
  (எபிரேய மொழி போலவே பழங்கால சீரியா மொழி)
- தார்கம்ஸ்
  (எபிரேய பழைய ஏற்பாடு அரமேயு மொழியில்)
- தல்மூத் (பல்வேறு யூத பாரம்பரியங்கள் மற்றும் பழைய ஏற்பாடு வாய்மொழி வியாக்கியானம்)
- செனகரீம்: யூதர்களின் நியாயமன்றம்
- ஜெப ஆலயம்
- சிதறடிக்கப்பட்டவர்கள்
- பரிசேயர்கள்
- சதுசேயர்கள்
- வேதபாரகர்கள்
- செலோத்தியர்கள்
- எசனீயர்கள்

ஆ) பரிசுத்த வேதாகம சரித்திர நிகழ்ச்சிகள் - புதிய ஏற்பாடு

19. ஒரு நோக்கு சுவிசேஷங்கள்

20. யோவான்

21. இயேசுவின் பிறப்பும், இளமைப்பருவமும்

22. இயேசுவின் ஊழியம்

    - ❖ ஞானஸ்நானம்
    - ❖ உபவாசம், சோதனை
    - ❖ இயேசு சீஷர்களை அழைத்தல்
    - ❖ இயேசு செய்த அற்புதங்கள்
    - ❖ இயேசுவின் போதனைகள்
    - ❖ இயேசு மறுரூபமாகுதல்
    - ❖ பாடுகள், சிலுவை மரணம், அடக்கம்.
    - ❖ உயிர்தெழுதல், பிரதான கட்டளை, பரமேறுதல்

23. சபையின் ஆரம்பம் (மத்.16:18)

    - ❖ பெந்தெகோஸ்தே அனுபவம்
    - ❖ எருசலேம் சபை மன்றம்
    - ❖ சபையில் புற இனத்தவர் ஏற்றுக் கொள்ளப்படுதல்

24. பவுலின் மடல்கள் (13+1)

25. பொதுவான மடல்கள்:

    - ❖ பேதுரு
    - ❖ யாக்கோபு
    - ❖ யூதா
    - ❖ யோவான்

26. இறுதிகால சம்பவங்கள் (வெளிப்படுத்தல் விசேஷம்)

XVIII. பழைய ஏற்பாடு புத்தகங்களின் சுருக்கம்

- ஆதியாகமம்

இந்நூலை மோசே எழுதியிருக்க கூடும் என நம்பப்படு கிறது. உலகம் உருவான நாள்முதல் சுமார் கி.மு. 1800 ஆண்டுவரையுள்ள சம்பவங்களை ஆதியாகமம் தெளிவுற எடுத்துரைக்கிறது.

ஆதியாகமம் 1-38 அதிகாரங்களில் காணப்படும் நாகரீ கம், படைப்பு, வம்ச வரலாறு, ஜலப்பிரளயம், புவியியல், மக்களின் யாத்திரை, ஆடு மேய்த்தல், நிலம் சம்மந்தமான காரியங்கள் அகியவை மெசபட்டோமிய நாகரீக வாழ்க்கைக்கு மிக ஒத்துக்காணப்படுகிறது. 39-50 அதிகாரங்கள் எகிப்திய பாரம்பரியத்தை விளக்கக்கூடியதாக அமைகிறது.

ஆதியாகமம் படைப்பின் முழு விபரத்தையும் தெளி வாக்குகிறது. தேவன் படைப்பின் காரணராகவும், படைப்பின் சிகரமாகவும், மனிதனை தன்னுடைய சாயலின்படி படைத்த தையும், அவர்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்து உலகை ஆசீர்வதித்ததையும் தெரிவிக்கிறது. முதல் குடும்பமான ஆதாம், ஏவாள் என்பவர்கள் கீழ்படியாமல் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து அதற்கு தண்டனையாக சாபத்தை பெற்றுக் கொண்டதையும் விளக்குகிறது.

இரட்சிப்பின் ஆரம்பமாக இறைவன் ஒரு நபரை, குடும்பத்தை வம்சத்தை தெரிந்து கொண்டு, உலகத்திற்கு ஆசீர்வாதத்தை கொடுக்க விரும்புவதை தெரிவிக்கிறது. பல கடவுள் வணக்கத்திற்கு வழிதவறிய மக்களை ஒரு கடவுள் வணக்கத்திற்கு நேராக வழிநடத்தியதை விவரிக்கிறது.

மேலும் முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் வரலாறும், எகிப்தில் யோசேப்பின் வரலாற்றைக் குறித்தும் விவரிக்கிறது.

- யாத்திராகமம்

யாத்திராகமத்தில் இஸ்ரவேல் மக்களின் வனாந்திர பிரயாணம் பற்றி எழுதப்பட்டுள்ளது. இதனை யாத்திரை ஆகம ம், விடுதலை பிரயாணம் எனவும் அழைக்கலாம். இந்நூலை மோசே எழுதியிருக்ககூடும் என நம்பப்படுகிறது. யாத்திராகமம் பழைய ஏற்பாட்டில் இரட்சிப்பின் மேன்மையைக் கூறுகிற முன் நூலாக இருக்கிறது. இந்நூல் இருளும் துக்கமும் நிறைந்த நிலையில் தொடங்குகிறது. இருப்பினும் மகிமையில் முடிகிறது. இந்நூல் இறைவன் அடிமையாக்கிய தம் மக்களைத் தம் அன்பினால் மீட்பதற்கு எவ்வாறு இறங்கி வந்தார் என்று தொடங்கி விடுதலையாக்கப்பட்ட மக்களிடையே அவர் எவ்வாறு இறங்கி வந்தார் என்று கூறி முடிகிறது.

யாத்திராகமத்தில் தேவன் தன் பெயர் (யாத்.3:14), குணாதிசயங்கள், இரட்சிப்பு, சட்டம் (நியாயப்பிரமாணம்), தன்னை வழிபட வேண்டிய முறைமைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறார். முதல் உடன்படிக்கையின் நடுவரான மோசே தெரிந்தெடுக்கப்படுதல், ஆசாரியத்துவத்தின் ஆரம்பம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் வரலாற்றிற்கும் ஆண்டவராயிருந்து அற்புதங்களை செய்தது குறிப்பிடப்பட்டு ள்ளது. இஸ்ரவேலருடைய துன்பங்கள் அல்லது எகிப்தியர் மீது வந்த வாதைகள் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டதே. பார்வோன், எகிப்தியர், இஸ்ரவேலர் அனைவரும் அவருடைய வல்லமையை கண்டனர். தேவன் எகிப்திய தேவர்களுக்கெல் லாம் தேவன் என்பதை விளக்கும் புத்தகமாக இது அமைந்து ள்ளது.

- லேவியராகமம்

லேவியராகமத்தின் மையக்கருத்து பரிசுத்தமாகும் (யாத்.11:44) தேவன் பரிசுத்தமானவர், எனவே மக்களும் பரிசுத்தத்தோடு அவரை தொழுதுகொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது. கர்த்தரின் உறவிலிருந்து பிரிந்து வாழும் மனிதனின் வாழ்க்கையை சீர்படுத்தி, கர்த்தரோடு சமாதானம்

செய்து குற்றத்தை நிவர்த்தி செய்து அவரை ஆராதிக்கவும், சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்தவும், கர்த்தர் தந்த ஆசிர்வாத ங்களை நினைவுகூர்ந்து ஸ்தோத்திரம் செலுத்தவும் இஸ்ரவே லருக்கு வழி முறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக பலி என்பது மனிதனால் பயன்படுத்தப்பட்டது. பலி செலுத்தப்பட வேண்டிய விலங்கும் அதனுடைய நேர்த்தியும் விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆராதனை காரியங்களும், பலிகளும் செலுத்தவேண்டியவர்களாக ஏற்படுத்தப்பட்ட ஆசாரியர்களின் கடமைகளும் பணிகளும் விளக்கப் பட்டுள்ளது.

மேலும் இஸ்ரவேலர் தங்களை தூய்மையாக காத்துக்கொள்ள செய்யவேண்டிய காரியங்களும் விவரிக்கப் பட்டுள்ளது. இச்சட்டங்களுக்கு கீழ்ப்படிந்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்களும், இல்லாவிட்டால் கிடைக்கும் சாபங்களும் எழுதப்பட்டுள்ளன. இந்நூலை மோசே எழுதியிருக்க கூடும் என நம்பப்படுகிறது.

- **எண்ணாகமம்**

எண்ணாகமம் அல்லது எண்ணிக்கை ஆகமம் என்னும் இந்த நூலானது இஸ்ரவேலர் வரலாற்றில், அவர்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டின் கிழக்கு எல்லையை அடைந்தது வரை நாற்பது ஆண்டுகளாக நிகழ்ந்தவற்றின் தொகுப்பாகும். சீனாய் மலையினின்று புறப்படும் முன்னும் யோர்தானுக்குக் கிழக்கே மோவாபில் ஒரு தலை முறை கடந்த பின்னும் மோசே செய்த கணக்கெடுப்பின் காரணமாக இந்நூல் இப்பெயரைப் பெறுகிறது. மேலும் காதேஸ் பர்னயாவில் இஸ்ரயேலருக்கு நேர்ந்த இன்னல்களும், அம்மக் கள் தேவனுக்கும் மோசேக்கும் எதிராகச் செய்த கிளர்ச்சியும் இந்நூலில் விரித்துரைக்கப்படுகின்றன. ஆயினும் தேவன், மக் கள் மேல் அன்பு கொண்டு அவர்களின் குறைகளைப் பொருட் படுத்தாது அவர்களை ஏற்றுக் கொள்ளும் அன்பையும் இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது. இந்நூலை மோசே எழுதியிருக்க கூடும் என நம்பப்படுகிறது.

- உபாகமம்

உபாகமம் என்பது உப ஆகமம் (இணை அல்லது துணை ஆகமம்) என்பதாகும். இஸ்ரவேல் மக்கள் பாலை வனத்தில் நெடும் பயணம் செய்து, கானான் நாட்டில் நுழைவத ற்குச் சற்று முன், அவர்களுக்கு தேவன் மோசே மூலமாய் வழங்கிய பேருரைகளின் தொகுப்பாக உபாகமம் அமைந்துள் ளது. லேவியராகமம் ஆசாரியர்களுக்காக எழுதப்பட்டது.

உபாகமம் சாதாரண மக்களுக்காக எழுதப்பட்ட அறிவு ரைகளாகும். எண்ணாகமத்தின் இறுதியில் சொல்லப்பட்ட வரலாறு உபாகமத்தில் தொடருகிறது. இந்நூலில் தான் மோசே யின் மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நூலினையும் மோசே தான் எழுதியிருக்க கூடும் என உறுதியாக நம்பப்படுகிறது. எனினும் இப்புத்தகத்தின் இறுதி பகுதியை யோசுவா எழுதியிருக்கலாம் என வரலாற்று ஆய்வா ளர்கள் கருதுகின்றனர்.

- யோசுவா

தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு, மோசேக்குப் பின் இஸ்ரவேல் மக்களின் தலைவராகச் செயல்பட்டவர் யோசுவா. இவர் கானான் நாட்டின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி, இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கு அத்தேசத்தை பிரித்துக் கொடுத்ததை இந்நூல் விவரித்து கூறுகிறது.

இந்நூலில் காணக்கிடைக்கும் நிகழ்ச்சிகளுள், யோர்தா ன் ஆற்றைக் கடத்தல், எரிகோவின் வீழ்ச்சி, வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறுதல், உடன்படிக்கையைப் புதுப்பித்தல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. முன்பு மோசேயின் மூலம் இஸ்ரவேலர்களை வழி நடத்திய அதே தேவன் தொடர்ந்து யோசுவாவின் வாயிலாகவும் தம் மக்களுக்குத் தாமே முன்னி ன்று போரிட்டு, அவர்களுக்கு வெற்றியை அருளினார் என்பது இந்நூலின் மையக்கருத்தாகும்.

• நியாயாதிபதிகள்

இஸ்ரவேல் நாடு யோசுவாவின் மரணத்திற்குப்பின் குறிப்பிட்ட நியாயாதிபதிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. அந்த நியாயாதிபதிகள் அவர்களை விசாரித்து பிரச்சனைகளை தீர்த்து வைத்தனர். இப்புத்தகம் அநேக தலைவர்களைக் குறித்துச் சொல்லுகிறது. அதில் சிலர் ஞானத்திலும், தைரியத்திலும் பராக்கிரமசாலிகளாகயிருந்தார்கள். சிக்கலான காலகட்டங்களில் நியாயாதிபதிகள் அவர்களது பிரச்சனைகளிலிருந்தும், துன்மார்க்கத்திலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் இஸ்ரவேல் மக்களை விடுவித்தார்கள்.

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் யோசுவாவின் மரண காலம் தொடங்கி சிம்சோனின் மரண காலம் வரையுள்ள வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

• ரூத்

விக்கிரக வழிபாட்டையுடைய மோவாபிய பெண்ணான ரூத்தின் வரலாறு இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூத் விதவையானதின் காரணமாக தனது மாமியாராகிய நகோமியை பற்றிக்கொண்டு இஸ்ரவேலின் தேவனை நோக்கி பெத்லகேமிற்கு வந்து, போவாசை மணந்த சூழ்நிலையை இந்நூல் படம் பிடித்து காட்டுகிறது. இவர்கள் வம்சத்தில் தான் தாவீது ராஜா பிறந்தார்.

• சாமுவேல் 1,2

1, 2 சாமுவேல் என்னும் நூல்களில் இஸ்ரவேலரின் ராஜாங்கத்தின் தொடக்க வரலாறு காணப்படுகிறது. நியாயாதிபதிகளின் காலம் ராஜாக்களின் காலமாக மாறியது குறித்த நிகழ்ச்சிகள், இந்நூலில் இடம் பெறுகின்றன.

மேலும், நியாயாதிபதிகள் வரிசையில் இறுதியாக வந்தவரான சாமுவேல், சமஸ்த இஸ்ரவேலின் முதல் ராஜாவான சவுல், தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு இஸ்ரவேலின்

பேரரசராக உயர்த்தப்பட்ட தாவீது ஆகிய மூவரை மையமாகக் கொண்டு ஏற்பட்ட சமுதாய மாற்றமும் இந்நூலில் இடம் பெறுகிறது. தேவனுக்கு உண்மை உள்ளவர்களாய் இருந்த போது வெற்றியும், அவருக்கு உண்மையற்றவர்களாய் நடக்கும் போது அழிவும் ஏற்படும் என்னும் கருத்து இந்நூலில் தெளிவாக் கப்படுகிறது.

- இராஜாக்கள் 1, 2

சாமுவேல் 1, 2 நூல்களில் சொல்லப்பட்ட அதே வரலாறு இராஜாக்களின் புத்தகங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இதன் முதல் புத்தகத்தில் இளவரசர்களால் ஆளப்பட்ட சிறு நாடுக ளைக் குறித்தும், தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் ஆளுகை குறித்தும், முதலாவது தேவாலயம் கட்டப்பட்ட வரலாற்றைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளது.

முதல் புத்தகத்தின் பிற்பகுதியும் இரண்டாவது புத்தகத் தின் முதற்பகுதியும் சாலொமோனைத் தொடர்ந்து ஆளுகை செய்த இஸ்ரவேலின் இராஜாக்களைக் குறித்தும் குறிப்பாக யூதாவைக்குறித்தும் உள்ள வரலாறு எழுதப்பட்டுள்ளது. அதோடு கூட எலியா, எலிசா தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசன ஊழியங்களைக் குறித்தும் சொல்லப்பட்டுள்ளது.

இராஜாக்களின் இரண்டாவது புத்தகம் பாபிலோனியப் படை இஸ்ரவேல் தேசத்திற்குள் நுழைந்து இஸ்ரவேலை அழித்ததும் இஸ்ரவேல் மக்களில் அநேகர் அடிமைகளாக பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்ட வரலாறும் எழுதப்பட் டுள்ளது.

- நாளாகமம் 1, 2

நாளாகமம் என்பது நாள் ஆகமம் ஆகும். சாமுவேல், மற்றும் ராஜாக்கள் ஆகிய நூல்களில் குறிபிடப்பட்ட நிகழ்ச்சி கள் நாளாகமத்தில் (குறிப்பேடுகளில்) வேறொரு கோணத்தில் காட்டப்படுகின்றன. இதன் முதலாவது புத்தகம் தாவீதின்

முற்பிதாக்களின் வம்சாவழி பட்டியலையும் அவனது ஆளுகை யையும் குறித்துச் சொல்லுகிறது.

இரண்டாவது புத்தகம் சாலொமோனின் ஆளுகையைக் குறித்தும் பாபிலோனின் சிறையிருப்புக்கு செல்லும் வரையிலான யூதாவின் வரலாறும் சொல்லப்பட்டுள்ளது. இந்நூல்களை எஸ்றா எழுதியதாக கூறப்படுகிறது.

- எஸ்றா

எஸ்றா என்னும் இந்நூல் நாளாகமத்தின் தொடர்ச்சியாகும். செருபாபேலின் தலைமையில் இஸ்ரவேல் மக்களின் ஒரு பகுதியினர் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து முதலில் திரும்பி வந்தனர். திரும்பி வந்த இஸ்ரவேலர் எருசலேமில் இடிக்கப்பட்ட ஆலயத்தை திரும்பவும், 515-ல் கட்டியெழுப்பினர். சில ஆண்டுகளுக்குப் பின் எஸ்றாவின் தலைமையில் இஸ்ரவேல் மக்களின் மற்றொரு பகுதியினர் தாயகம் திரும்பி வந்தனர்.

எஸ்றா ஒரு வேதபாரகன்; வேதாகமத்தையும் நடைமுறை வாழ்வியலையும் மக்களுக்கு போதித்து மார்க்க சீர் திருத்தத்தை ஏற்படுத்திய குறிப்புகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இந்நூலினை எஸ்றா எழுதியதாக கூறப்படுகிறது.

- நெகேமியா

நாடு கடத்தப்பட்ட யூதனாகிய நெகேமியா ராஜாவின் அனுமதி பெற்று எருசலேமிற்கு திரும்பி வந்து இடந்துபோன ஆலயத்தின் மதில் சுவரினை 52 நாளுக்குள் கட்டி முடித்தார்.

பல எதிர்ப்பும், பகைமையும், பரியாசமும் இருந்த போதிலும் நெகேமியா நல்ல வேலையை, பெரிய வேலையை முழு முனைப்போடு செயல்பட்ட சம்பவம் இந்நூலின் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூலினை நெகேமியா எழுதியதாக கூறப்படுகிறது.

• எஸ்தர்

ஒரு யூதக் கன்னிப்பெண்ணான எஸ்தர் எப்படி மேதிய, பெர்சிய இராஜாவாகிய அகாஸ்வேருக்கு பட்டத்து இராணியாக மாறினாள் என்றும், அகாஸ்வேருவின் அமைச்சராகிய ஆமானின் சதித்திட்டத்தால் பேரழிவைச் சந்திக்கயிருந்த யூதமக்களை தப்புவிப்பதற்கு அவள் எப்படிக் காரணமாயிருந்தாள் என்பது பற்றியும் எழுதப்பட்டுள்ளது.

• யோபு

செய்யுள் இலக்கியங்களுள் யோபு என்னும் இந்நூல் தொன்மையானது. தேவனுடைய பார்வையில் ஏற்ற நீதிமானா கவும் பெரும் பணக்காரனாகவும் வாழ்ந்த யோபுவை, தேவனின் அனுமதியுடன் சாத்தான் சோதித்தான். இதனால் யோபு பிள்ளைகள், சொத்துக்கள், சரீர ஆரோக்கியம் என அனைத் தையும் இழந்தார். இருப்பினும் தேவனுக்கு ஏற்புடையவராகவே வாழ்ந்து இரட்டிப்பான ஆசீர்வாதங்களை பெற்ற சம்பவம் இந்நூலில் ஒரு நாடகம் போன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

• சங்கீதம்

சங்கீத புத்தகம் பல்வேறு பொருட்தலைப்புகளில் 150 பாடல்கள் அடங்கியதாகும். சங்கீதங்கள் என்பது திருப்பாடல் கள் எனவும் அழைக்கப்படுகிறது. 150 பாடல்களின் தொகுப்பே சங்கீதங்களாகும். பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு கவிஞர்கள் சங்கீதங்களை எழுதி பாடினர். இந்த பாடல்கள் அனைத்தும் தேவனை புகழ்ந்து பாடுதல், தேவனிடம் உதவி கேட்டல், பாதுகாப்பு, மீட்பு வேண்டிப் பாடியவை, மன்னிப்பு வேண்டிய மன்றாட்டுகள்.

தேவன் வழங்கிய ஆசிர்வாதங்களுக்கு நன்றி செலுத் தும் பாடல்கள், ராஜா பற்றிய பாடல்கள், அறிவுரை அளிக்கும் பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இவைகள் தனி மனிதரின் வேண்டுதலாகவோ, நாட்டு மக்களின் மன்றாட்டகவோ

அமைந்துள்ளன. இஸ்ரவேல் இனத்தின் நாட்டங்களையும் உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. கிறிஸ்து இயேசுவின் வாழ்விலும் ஊழியத்திலும் சங்கீத புத்தகங்கள் மிக முக்கியமானதாகும்.

- நீதிமொழிகள்

சாலொமோன் ஞானி இப்புத்தகத்தின் ஆக்கியோனாகச் சொல்லப்படுகிறது. மனிதனுடைய ஜீவியத்திற்கும் அவனது நன் நடத்தைக்கும் இன்றியமையாத ஞானமான காரியங்கள் இதில் அடங்கியுள்ளது. இது இஸ்ரவேல் மக்களை வழி நடத்தும் வழிகாட்டியாகவும் ஒழுக்கநெறிகள் அடங்கிய அறிவு ரைகளாகவும் உள்ளன.

- பிரசங்கி

பிரசங்கியின் புத்தகம் சபை உரையாளர் என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூல் சாலமோன் ஞானியின் சிந்தனை களைக் கொண்டது. மானிட வாழ்வு எவ்வளவு குறுகியது, முரண்பாடானது எனக் கண்டுணர்கிறார். மனித வாழ்க்கையில் காணப்படும் அநீதிகளும் அவநம்பிக்கையும் அவருக்குப் பெரும் புதிர்களாகத் தோன்றுகின்றன. எனவே வாழ்க்கையே வீண், என்ற முடிவுக்கு வருகிறார். தன் வாழ்வில் அனைத்தும் மாயை என்பதை கண்டுணர்ந்த ஆக்கியோன் நமக்கு அறிவுரை கூறுகிறார். இந்த குறுகிய காலத்தில் தேவனின் மீது நம்பிக் கை கொண்டு நமக்கு இருப்பதில் திருப்தியுடன் வாழ வேண்டும் என்ற உணர்வு இந்நூலை வாசிக்கும் போது ஏற்படுகிறது.

- உன்னதப்பாட்டு

உன்னதபாட்டு நூல் கள்ளம் கபடற்ற புனிதமான அன்பை எடுத்துரைக்கிறது. இந்நூலை இரண்டு கோணத்தில் விளக்கப்படுத்தலாம். முதலாவது கணவன் மனைவிக்கிடையே இருக்கவேண்டிய உண்மையான உறவை கற்றுக்கொடுக்கிறது.

இரண்டாவது மணவாளனாகிய தேவன் மணவாட்டியாகிய சபைக்கிடையே இருக்கும் உண்மையான அன்பை இந்நூல் வெளிப்படுத்துகிறது. இதனை சாலலோன் எழுதியதாக நம்பப்படுகிறது.

- ஏசாயா

தீர்க்கதரிசன புத்தகங்களில் முதன்மையானது ஏசாயா நூலாகும். 66 அதிகாரங்களை கொண்ட இந்நூல் சிறிய வேதாகமம் என்று கூறும் அளவிற்கு அமைந்துள்ளது. இப்புத்தகத்தில் பாபிலோனிய சிறையிருப்பைக் குறித்தும் இஸ்ரவேல் மக்கள் இதை எவ்வாறு தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டார்கள் என்பது குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் எருசலேமைப் பிடிப்பதில் அசீரியப் படையினரின் தோல்வியும் பாபிலோன் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியைக் குறித்தும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இஸ்ரவேல் மக்கள் சிறையிருப்பிலிருந்து மீட்கப்பட்டு சொந்த நாட்டிற்குத் திரும்புவார்கள் என்ற வாக்குறுதி அளிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, ஊழியம், மரணம் போன்றவைகள் இந்நூலில் தெளிவுற முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

- எரேமியா

எரேமியாவை தேவன் இளம் வயதில் சந்தித்து தீர்க்கதரிசியாகும்படி அழைத்தார். இப்புத்தகத்தில் தேவனுடைய செய்திகளையும் அவருடைய எச்சரிக்கைகளையும் எரேமியா தொகுத்து அளித்துள்ளார். மேலும் இஸ்ரவேலைக் குறித்து அவர்களுடைய தேசம் பாபிலோனியரால் மேற்கொள்ளப்பட்டு நாசம் செய்யப்படும் என்பதைக் குறித்தும் முன்னறிவித்து அவர்களை எச்சரித்தான். மேலும் தான் கூறிய எச்சரிக்கைகளுக்கு உணர்வுகளையும் வெளிப்படுத்தி எழுதியுள்ளான். ஏரேமியாவின் வார்த்தைகளுக்கு மக்கள் செவிகொடுக்காத போது தனது துக்கத்தையும் பதிவு செய்கிறார். வரயிருக்கும் அழிவைக் குறித்தே அவனுடைய முன்னறிவித்தல் இருந்தாலும் தேவன் யூதமக்களோடு தம்முடைய உடன்படிக்கையை புதுப்பித்துக்

கொள்வார் என்றும் தாம் தெரிந்துகொண்ட தம் மக்களை தம்மோடு மீண்டும் சேர்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை யையும் இந்நூலில் தெரிவிக்கிறார்.

- புலம்பல்

புலம்பல் என்னும் இந்நூல் ஐந்து எபிரேய அகர வரிசைக் கவிதைகளால் ஆனது. கி.மு. 586-ல் எருசலேமுக்கு நேரிட்ட பேரழிவையும், அதன் தொடர் நிகழ்ச்சியான நாடு கடத் தப்படுதலையும் பற்றிய புலம்பலாக இந்நூல் அமைந்துள்ளது. எரேமியாவின் காலச்சூழலைப் பின்னணியாகக் கொண்ட இந்நூலில், அவலச்சுவையே மேலோங்கி நிற்கின்றது. ஆயினும், தேவனின் கிருபையினால் கிடைக்கவிருக்கும் ஒளிமயமான எதிர் காலம் பற்றிய நம்பிக்கையும் ஆங்காங்கே வெளிப்படுகிறது.

- எசேக்கியேல்

தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் பாபிலோனுக்கு சிறை யாக்கிக் கொண்டு செல்லப்பட்டவர்களில் ஒருவர். எருசலேமி ற்கு வரயிருக்கும் வீழ்ச்சியைக் குறித்தும், எருசலேமின் அழிவி ற்கு முன்னும் பின்னும் உள்ள காரியங்களைக் குறித்தும் தீர்க் கதரிசனம் உரைத்துள்ளார். அநேக நாடுகள் இஸ்ரவேலின் வீழ்ச்சியைக் குறித்து மகிழ்ந்து களிகூறினார்கள் என்பதையும் எனினும் இஸ்ரவேல் மக்கள் மீண்டும் ஒன்று சேர்க்கப்படுவார் என்பதையும் பதிவு செய்துள்ளார். அவருடைய செய்திகள் அனைத்தும் தீர்க்கதரிசனமாகவும், எச்சரிக்கையாகவும், வாதி டுகிறவைகளாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக அவருக்குக் கிடைத்த தரிசனங்களைக் குறித்த விபரங்களையும் பதிவு செய்துள்ளார்.

- தானியேல்

இப்புத்தகத்தில் பாபிலோனியர், எருசலேமைப்பிடித்து வெற்றியடைந்த காலத்தில் வாழ்ந்தவர் தான் தானியேல் என்னும் தீர்க்கதரிசி. முதற்பகுதி முக்கியமாக நேபுகாத்நேச்

சாரால் தானியேல் சிறைப்பட்டது தொடங்கி அமைந்துள்ள வரலாறாக உள்ளது.

இப்புத்தகம் நேபுகாத்நேச்சாரின் கனவு, அதற்கு தானியேல் அளித்த அர்த்தம், தானியேல் சிங்கங்களின் கெபியிலே போடப்பட்ட சம்பவம், தானியேலின் மூன்று நண்பர்கள் எரியும் அக்கினிச் சூளையிலே போடப்பட்டது, பெல்சாத்சார் அளித்தப் பெரிய விருந்து, அப்பொழுது ஒரு விரல் தோன்றி எழுதிய சம்பவம் ஆகியவைகள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளது. இப்புத்தகத்தின் பிற்பகுதி யூத மக்களை உற்சாகப்படுத்தும் வகையிலான வாக்குத்தத்தங்களையும் தரிசனங்களையும் விவரிப்பதாக அமைந்துள்ளது.

- ஓசியா

சிறிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படும் 12 தீர்க்கதரிசிகளுள் ஓசியா முதலானவர். அவர் ஆக்கிய ஓசியாவின் புத்தகமே முதலாவதாக அமைந்துள்ளது. ஓசியா இஸ்ரவேலைச் சேர்ந்தவர். ஆகவே அவரது தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் இஸ்ரவேல் மக்கள் தொடர்புள்ளதாகவே அமைந்துள்ளது.

மேலும் இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்தையும், உண்மையற்றத் தன்மையையும், அவர்களுடைய பாவங்களையும் சுட்டிக்காட்டி எச்சரித்ததைப் பதிவு செய்துள்ளார்.

அவர்களுடைய பொல்லாத வழிகளை விட்டு அவர்கள் விலகாவிட்டால் தண்டனையை சந்திக்க வேண்டும் என்ற எச்சரிக்கையையும் கொடுத்துள்ளார். ஆனாலும் தேவன் இஸ்ரவேல் மக்கள் மீது வைத்திருக்கும் குன்றிப்போகாத அன்பையும், அவர்கள் மன்னிப்பைக் கோரும் போது மன்னிப்பளிக்க அவர் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

- யோவேல்

யோவேல் யூதாவைச் சேர்ந்த தீர்க்கதரிசியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. யோவேல் தேசத்தில் வெட்டுக்கிளிகளினால் ஏற்பட்ட பெரும் சேதத்தைக் குறித்தும் அதைத் தொடர்ந்த பஞ்சத்தைக் குறித்த புலம்பல்களையும் குறிப்பிடுகிறார்.

இப்படிப்பட்ட சேதங்கள் அவர்களுடைய பாவங்களின் விளைவாக வந்த தண்டனையாகும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். மேலும் அவர்களுடைய பொல்லாத வழிகளிலிருந்து மனந்திரும்ப வேண்டுமென்றும் அவர்களைக் கேட்கிறார், அப்படிச் செய்தால் தேவன் நன்மையானதைச் செய்வார் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

- ஆமோஸ்

ஆமோஸ் தான் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்று சொல்லிக்கொண்டாலும் இஸ்ரவேல் மக்களுக்கு தேவனுடைய செய்தியை எடுத்துச் சென்றுள்ளார். ஆமோஸ் தமஸ்கு, தீரு, ஏதோம், அம்மோன் மற்றும் யூதேயா தேசத்தில் வரயிருக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார். மேலும் குறிப்பாக இஸ்ரவேல் மீது அந்த நியாயத் தீர்ப்பு வரும், ஏனெனில் அவர்கள் தேவனுடைய வரங்களைப் பெற்றிருந்தும் துன்மார்க்கமான வழியில் நடந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார். இப்புத்தகம், தேவனுடைய இராஜ்ஜியம் இஸ்ரவேல் மக்கள் மத்தியில் மீண்டும் ஸ்தாபிக்கப்படும் என்ற வாக்குத்தத்தத்தையும் அளிக்கிறது.

- ஒபதியா

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளுக்குள் ஒபதியாவின் "தரிசனம்" மிகச் சுருக்கமானது. இஸ்ரவேல் மக்களின் நீண்ட கால சத்துருக்களையும், பல வகையில் அவர்களுக்குக் கொடிய உபத்திரவம் அளித்து வந்த ஏதோமியரைக் குறித்து இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. ஏதோமியருக்கு விழுகை ஏற்பட்டு

அழிக்கப்பட்டபோது ஒபதியா இது ஏதோ தற்செயலாக நடந்த நிகழ்ச்சி என்று கருதாமல் கொடுமையும் பெருமையும் நிறைந்த ஏதோமியருக்கு தேவன் அளித்த நியாயந்தீர்ப்பு என்று எழுதியுள்ளார்.

- யோனா

எபிரெய தீர்க்கதரிசியாகிய யோனாவை, புறஜாதியினரும் தேவனுக்கு விரோதமுமாயிருந்த நினிவே பட்டணத்திற்குச் சென்று அவர்களுக்கு பிரசங்கிக்கும்படிக்கு தேவன் கட்டளையிட்டார்.

யோனா தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் கப்பல் ஏறி வேறு இடத்திற்குச் சென்றான். அதன் விளைவாகப் பெரும் தண்டனையைச் சந்தித்தான்.

கடலில் புயற்காற்றினால் பேரலைகள் எழும்பி கப்பல் தாக்கப்பட்டபோது அவன் கடலுக்குள் தூக்கி எறியப்பட்டான். பெரியமீன் அவனை விழுங்கியது. மீனின் வயிற்றிற்குள்ளிருந்து யோனா ஜெபித்தான். விழுங்கிய அந்த மீன் அவனைக் கரையோரத்தில் கக்கிப்போட்டது. அப்பொழுது அவன் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான். நினிவே பட்டணத்திற்குச் சென்று பிரசங்கித்தான். நினிவே பட்டணத்தார் தங்கள் பொல்லாத வழிகளுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினார்கள்.

- மீகா

மீகாவின் பிரசங்கங்கள், தீர்க்கதரிசனங்கள், வேண்டுதல்கள் அடங்கியது தான் இப்புத்தகம். தங்கள் பொல்லாத வழிகளை விட்டுவிட்டு மனந்திரும்ப வேண்டும் என்று மக்களைத் தூண்டுகிறான். மனந்திரும்பாவிட்டால் பெரும் தண்டனைக்குள்ளாவீர்கள் என்று பயமுறுத்தி எச்சரிககிறார்.

அவர்களிடத்தில் உண்மை இல்லாதபடியால் அவர்களுக்கு இரட்சிப்பின் தகுதி அற்றவர்கள் என்று கடுமையாக

எச்சரிக்கிறான். சில வேத வல்லுனர்கள் மீகா தனது தீர்க்கதரிசனம் மூலம் இயேசு வின் வருகையையும் முன்னறிவித்துள்ளான் என்று கருதுகின்றனர்.

- நாகூம்

நாகூமின் தரிசனம், நினிவேக்கு வரயிருக்கும் பேரழிவைக் குறித்தே முதன்மைப்படுத்துகிறது. நினிவேயைப் போன்றத் தீமைகள் நிறைந்த எந்த தேசமும் தேவனுடைய நியாயத் தீர்ப்பின் முன் நிற்கமுடியாது என்பதை வலியுறுத்துகிறார்.

- ஆபகூக்

யூதா தேசத்தின் மீது கல்தேயர்களின் படையெடுப்பை மையமாகக் கொண்டே ஆபகூக்கின் தீர்க்கதரிசனங்கள் அமைந்துள்ளன. தேவனுக்கும் ஆபகூக்கிற்கும் நடந்த உரையாடல் போல இப்புத்தகம் அமைந்துள்ளது. தன்னுடைய மக்கள் தேவனுடைய தண்டனைக்குத் தகுதியானவர்கள். எனினும் அது கல்தேயர்கள் மூலமாக வந்துவிடக் கூடாது என்ற விண்ணப்பங்களும் அடங்கியுள்ளது. தேவன் அதற்குப் பதில் கொடுக்கும் போது துன்மார்க்கர் மீது நியாயத்தீர்ப்பு வரும் நீதிமான்கள் தப்புவிக்கப்படுவார்கள் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

- செப்பனியா

அநேக இராஜாக்கள் சீர்கேடாக ஆண்ட காலகட்டத்தில் செப்பனியா பிறந்தார். செப்பனியா அதை அறிந்தபோது இந்த பூமியின் தேசங்கள் மீது குறிப்பாக யூதா, எருசலேம் தேசங்களின் மீது கோபாக்கினையின் பெருநாள் அவர்கள் மீது வரும் என்று எச்சரிக்கிறான்.

வரயிருக்கும் பேரழிவின் நாளைத் துல்லியமாகச் சித்தரித்துக் காட்டி மக்கள் மெய்யான மனஸ்தாபத்தோடு மனந்திரும்ப வேண்டும். அந்தப் பேரழிவின் நாளுக்குத் தப்பித்துக் கொள்ளவேண்டுமென்று எடுத்துரைத்துள்ளார்.

- ஆகாய்

ஆகாய் தீர்க்கதரிசி அளித்த நான்கு பேருரைகளையும், மக்கள் மத்தியில் அவைகள் ஏற்படுத்திய தாக்கத்தையும் முதன்மைப்படுத்தி இப்புத்தகத்தில் எழுதியுள்ளார். அந்த பேருரைகளில் யூதமக்கள் தேவாலயத்தைக் கட்டத் தவறிவிட்டார்கள் என்பதைக் கண்டித்து உணர்த்தியுள்ளார். எதிர்காலத்தில் வரயிருக்கும் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்பதை ஆகாய் விவரித்துள்ளார். தேவாலயத்தைக் கட்டி எழுப்புவதில் ஆர்வம் காட்டினால் தேவனுடைய ஆசீர்வாதம் தங்கும் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

- சகரியா

சகரியாவும் ஆகாயுடன் இணைந்தே யூதர்கள் தேவாலயத்தைக் கட்ட வேண்டும் என்பதை உற்சாகப்படுத்தியுள்ளார். ஆகாய் இதே காரியத்தை கண்டித்து உணர்த்துகிறார். ஆனால் சகரியாவோ தனக்குக் கிடைத்தத் தரிசனத்தின் அடிப்படையிலான செய்திகள் மூலம் மக்களை ஊக்கப்படுத்தியுள்ளார்.

தேவனுடைய ஆலயத்தை அவர்கள் கட்டுவானார்களானால் அவர்களுக்கு தேவன் அளிக்கும் செழுமையும் மகிழ்ச்சியும் காத்திருக்கிறது என்ற வாக்குத்தத்தத்தையும் இல்லாவிட்டால் சத்துருக்கள் மூலம் அழிவு காத்திருக்கிறது என்ற எச்சரிக்கையையும் பதிவு செய்துள்ளார். மேலும் அநேக வேத வல்லுநர்களின் கூற்றுப்படி சகரியா இயேசுவின் வருகையைக் குறித்தும் முன்னுரைத்துள்ளார் என்பதும் சொல்லப்பட்டுள்ளது.

- மல்கியா

பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய மல்கியா என்ற இப்புத்தகம் பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்னர் தேவாலயம் மீண்டும் கட்டப்பட்டபோது எழுதப்பட்டதாகும். மல்கியா தீர்க்கதரிசி மக்களுடைய பொல்லாத வழிகளை வெகுவாய் கண்டித்துள்ளார்.

அவர்கள் சிறைபட்டுப் போவதற்கு முன்பு இருந்த தகாத வழிகளை விட்டு விலகிய போது மீண்டும் தேவனை ஆராதிக்க ஆரம்பித்தார்கள்.

மல்கியா, மக்கள் மிகுந்த உண்மையோடும், மோசேயின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதலோடு தேவனை சேவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறுகிறார். கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அவருடைய வழியில் நடக்க மக்களை ஆயத்தப் படுத்துவார் என்று இப்புத்தகத்தை நிறைவு செய்துள்ளார்.

XIX. புதிய ஏற்பாடு புத்தகங்களின் சுருக்கம்

- மத்தேயு

ஒருவேளை இச்சுவிசேஷம் முதலாவதாக எழுதப்படாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் பழைய ஏற்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதன் காரணமாக புதிய ஏற்பாட்டில் முதலிடத்தை பெற்றிருப்பதற்கான சாத்திய கூறுகள் உண்டு. பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி மேற்கோள்களை மத்தேயு தன் சுவிசேஷத்தில் சுட்டிக்காட்டி இருப்பதால், இயேசுவின் வருகை, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் என அவர் மெய்ப்பித்து காட்ட முயல்கிறார். எனவே இயேசுவானவர் நீண்ட காலமாக யூதர்களால் எதிர்பார்த்து காத்திருந்திருந்த இரட்சகராக காணப்படுகிறார்.

நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் வாழ்க்கையையும், உபதேசங்களையும், சிலுவையில் அறையப்படுதலையும், உயிர்த்தெழுதலையும் விளக்குகின்றன. அவ்வாறு இருப்பினும் அவைகள் அணுகுமுறையிலும், நோக்கிலும், சம்பவங்களை விவரிப்பதிலும், உபதேசங்களை பதிவு செய்த முறையிலும் மாறுபட்டு காணப்படுகின்றன. மத்தேயுவின் சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகிற மலைப்பிரசங்கம் தனிப்பட்ட விதத்தில் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. அது போன்றே எருசலேமில் இயேசுவின் கடைசி நாட்களைக் குறித்த விளக்கங்களும்

சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வுகளும் பெரிதும் அறியப்பட த்தக்கதாக உள்ளன.

- மாற்கு

மாற்குவால் பயன்படுத்தப்பட்ட கருத்துக்கள் இயேசு வின் முதன்மைச் சீடர்களில் ஒருவரான பேதுருவின் உபதேசங் களிலிருந்து எடுக்கப்பட்டவை. மாற்கின் சுவிசேஷத்தை அடிப்ப டையாகக் கொண்டு மத்தேயுவும் லூக்காவும் இயேசுவின் சரி தையை தயாரித்தனர் என்று கருதப்படுகிறது. மாற்கின் சுவிசே ஷம் இயேசுவின் செயல்களையும் அவற்றின் தாக்கங்களையும் அதிகமாக விளக்க முற்படுகிறது.

அவர் எவ்வாறு தன்னுடைய தெய்வீக வல்லமையால் பொல்லாங்கின் வல்லமையை அழித்து பிசாசின் ஆதிக்கத்திற் குள்ளானோரை சுகமாக்கினார் என்பதை விளக்குகிறது. இயேசு ஆவிக்குரிய வெற்றியாளர் என்பதை நிலைநாட்டுவதேயன்றி அவரது பிறப்பு, இளமைக்காலம் என்பவற்றைக் குறித்து ஒன்றும் குறிப்பிட முற்படவில்லை.

- லூக்கா

இவர் மாற்கு எழுதிய சுவிசேஷத்தின் அடிப்படையில் இதை எழுதினார் எனத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இயேசுவின் வாழ்க்கையை மற்ற சுவிசேஷத்தைக் காட்டிலும் விவரங்கள் மிக்கதாகவும் உட்பொருள் உடையதாகவும் எழுதி யுள்ளார். எடுத்துக்காட்டாக, யோவான்ஸ்நானகனின் பிறப்பு, நன்றியால் நிறைந்த பாட்டு, மேய்ப்பர்களின் கதை, இயேசுவின் பிறப்பின் போது தூதர்கள் பாடிய பாடல், எருசலேம் தேவால யத்தில் கற்றறிந்த போதகர் நடுவில் இயேசு வினாக்கள் கேட்பது, மிகவும் வெறுக்கப்பட்ட ஆயக்காரனின் வீட்டிற்கு அவர் சென்றது போன்றவை குறிப்பிடத்தக்கவை. இதற்கும் மேலாக, இயேசுவின் பிறப்பு, அவரது ஆரம்பகால சிறார் பரு வம் ஆகியவை லூக்காவால் எழுதப்பட்டுள்ளன.

- யோவான்

யோவான் எழுதின சுவிசேஷம் மற்ற சுவிசேஷங்க ளைப்போல சரித்திர செய்திக் குறிப்புகளை முதன்மையாகத் தராமல் இயேசுவின் தெய்வீக சுபாவத்தை தொடர்புடையதாக உள்ளது. அவர் பூமியில் தோன்றிய காரணத்தை விளக்குகிறது. மற்ற சுவிசேஷங்கள் அவரது பிறப்பு குழந்தைப் பருவம், ஞானஸ்நானம், சோதனை, மறுரூபமாதல் அவரால் செய்யப்ப ட்ட உண்மையான கிரியைகள் ஆகியவற்றை கூறுகின்றன.

நான்காவது சுவிசேஷம் இயேசு யார் என்பதையும், அவர் எதற்காக வந்தார் என்பதையும் அவரில் நம்பிக்கை கொண்டோருக்கு அவர் என்ன செய்வார் என்பதையும் கூறுகிற து. இயேசு வின் போதனைகளை ஓர் உலகளாவிய சமயமாக நிலை நிறுத்தவும் இந்த நான்காவது சுவிசேஷம் தெய்வீக தகவல்களை அள்ளித்தருகிறது.

- அப்போஸ்தல நடபடிகள்

இது சுவிசேஷ பயணங்களைக் குறித்தும் அவரது சீடர்களின் போதனைகளை இயேசுவின் இறப்பு உயிர்த்தெ ழுதல் ஆகியவற்றுக்குப்பின் நடந்தவற்றையும் விளக்குகிறது. அப்போஸ்தல நடபடிகள் சுவிசேஷம் பரவுவதற்கு முக்கிய காரணமான பவுலின் பயணங்களையும் அவரது போதனை களையும் பிரத்தியேகமாக விளக்குகிறது. இது கிறிஸ்தவத்தின் ஆரம்ப நிலைகளையும், சபையின் ஆரம்ப வெற்றிகளையும், உபத்திரபவங்கள் மற்றும் சவால்களையும் முன்னேற்றங்களை யும் கூறுகிறது. மூன்றாவது சுவிசேஷத்தை எழுதிய லூக்கா இதன் ஆக்கியோனாக நிச்சயிக்கப்பட்ட சான்றுகளால் கருதப் படுகிறார்.

- ரோமர்

பவுல் கொரிந்துவிலே இருந்தபோது ரோமிலே இருந்த கிறிஸ்தவர்களுக்கு, அதைப் பார்வையிடச் செல்வோம் என்று

அறிந்திருந்தபடியால் இந்த நிருபத்தை எழுதினார். இந்த நிருப மானது பவுல் தான் தேவன் மீது வைத்திருந்த விசுவாசத்தை விவரிக்கின்ற ஆய்வுக் கட்டுரையைப் போன்று உள்ளது.

கிறிஸ்தவம் மனிதனிடத்தில் நீதியை உருவாக்கும்படி செயல்படுத்தப்படும் தெய்வீகத் திட்டமாக இருக்கிறது. இயேசு மனிதர்கள் பாவிகளாக இருக்கையில் அவர்களுக்காக சிலு வையில் மரித்தார். தேவன் அவர்களைக் கொண்டு வந்த புதிய வாழ்க்கையில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதன் முக்கிய கருத்துக்களை சுருக்கமாக விவரிக்கிறது.

- கொரிந்தியர் 1, 2

பவுல் அடுத்த இரு நிருபங்களை கொரிந்துவிலே இருக்கும் கிறிஸ்தவர்கள் பயங்கரமான தீய பாவங்களில் ஈடுபட்டிருப்பதை கேள்விப்பட்டபோது எழுதினார். அவர்களின் கேடான வழிகளுக்காக அவர்களைக் கடிந்து கொண்டார். அவர்கள் எவ்வாறு பாவம் செய்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார். அவர்களின் கேடான பழக்கங்களை விட்டு விடுமாறு வற்புறுத்தினார். கிறிஸ்து உபதேசித்த சுயநலமின் மை, பரிசுத்தம் ஆகியவற்றிற்கு ஏற்ப நடக்குமாறு வற்புறுத்தி னார். அவர்கள் கேட்ட அநேக கேள்விகளுக்கு விடையளிக்க வும் செய்தார்.

இரண்டாவது நிருபத்தில் அவரது வேண்டுகோள்க ளுக்கு செவிமடுத்ததற்கு நன்றி கூறுகிறார். இயேசு தன்னை பின்பற்றுவோர்கள் அவர் எதிர்பார்த்த வாழ்வினை வாழும்படி கூறினார். கிறிஸ்தவ வாழ்வினை வாழ்வதில் உள்ள கஷ்டங் களை இதற்கு முன்னர் அவர்கள் முறையிட்டபோது இயேசு வின் சுவிசேஷத்தை தான் போதித்ததால் அடைந்த அநேகப் பாடுகளை தன்னை மாதிரியாக வைத்து விளக்கினார். மற்றவர் களை இயேசுவை பின்பற்றும்படி போதிப்பதன் மூலம் ஒருவர் தன் ஆத்துமாவை எவ்வாறு உயர்த்தமுடியும் என விவரித்தார்.

• கலாத்தியர்

இந்நிருபம் எழுதும் முன்னர் பவுல் கலாத்தியா சென்றிருந்தார். நோய்வாய்ப்பட்டதின் நிமித்தம் அங்கே தடுத்து நிறுத்தப்பட்டார். அங்கே நீண்டகாலம் தங்கியபடியால் கலாத்தியர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தினார். ஆனால் கலாத்தியாவை விட்டு பவுல் சென்றபின்னர் கள்ளப் போதகர்கள் வந்தனர். பவுலை ஒரு சாதாரணமான மதம்மாறியவர் என்று வெளிப்படையாக குற்றம் சுமத்தினர். இந்த போதகர்கள் கலாத்தியரை மோசேயின் பிரமாணங்களை கடைப்பிடித்தால் மாத்திரம் உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ முடியும் எனக் கூறினார்.

இந்த தர்க்கத்திற்கு பதிலாக கலாத்தியர்களைத் தெளிவுபடுத்த பவுல் இந்த நிருபத்தை எழுதினார். மோசேயின் பிரமாணம் தேவனால் அருளப்பட்டது என்ற போதிலும் இயேசுவின் மேல் வைக்கும் நம்பிக்கை அப்பிரமாணத்தை ஒதுக்கிவிட்டு அதற்கு பதிலாக கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று வலியுறுத்தினார். தேவனுடைய அன்பிலும் மன்னித்தலிலும் இயேசு போதித்ததைப்போன்று நம்பிக்கை வைக்குமாறு கூறினார்.

• எபேசியர்

எபேசுவிலே பவுல் ஒரு சபையை நிறுவினார். ஒரு நிறைவான சிறந்த சபை எத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் செயல்படவேண்டுமென்று எபேசு சபைக்கு விவரித்து எழுதி, சபை எதை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்பதைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதையும் விளக்கினார்.

ஒரு நிறைவான சபையின் கனவுகள் எவ்வாறு நிறைவேறும் என்பது அனைத்து கிறிஸ்தவர்களின் கடமை என விளக்கினார். இது கிறிஸ்தவர்களின் ஒற்றுமையினால் மாத்திரமே சாத்தியமாகும். சமுதாயத்தைக் குறித்தும் உலகினைக் குறித்தும் கிறிஸ்தவ சபையின் வீட்டாரின் ஒற்றுமையைக் கொண்டும் இது சாத்தியமாகும். இந்த ஒற்றுமையினால் ஒன்றாக்கப்பட்ட

சபையின் வலிமையால் கிறிஸ்தவர்கள் எங்கும் சந்திக்கின்ற பொல்லாப்புகளை எதிர்த்து நிற்க முடியும்.

- பிலிப்பியர்

பவுல் சிறையில் இருக்கும் போது இந்த நிருபத்தை எழுதினார். எபேசியருக்கும் சிறையில் இருக்கும்போது எழுதினார். பவுல் பிலிப்பு பட்டணத்திற்கு தன்னுடைய பயண வழியில் சென்றிருந்தார். அங்கு அவர் தங்கியிருக்கையில் பிலிப்பியர் காட்டிய அன்பிற்கு நன்றியறிவிப்பதற்காக இந்த கடிதத்தை எழுதினார். சுவிசேஷத்திற்கு யார் எதிரிகள் என்பதை விளக்கி பிலிப்பியர்களை எச்சரித்தார். அவர்கள் கிறிஸ்தவ வாழ்வில் தேர்ச்சிப்பெற அவர்கள் செய்ய வேண்டுமென்பதை செய்வார்கள் என நம்பிக்கைத் தெரிவித்து தமது நிருபத்தை நிறைவு செய்தார்.

- கொலோசெயர்

கொலோசெ பட்டணத்தில் பவுல் இருந்ததற்கு எவ்வித சான்றும் இல்லை எனினும் அங்குள்ள கிறிஸ்தவர்கள் மீது தமக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டினை உறுதிப்படுத்தி இந்த நிருபத்தை எழுதினார். இயேசுவின் மீது கொண்ட விசுவாசத்தை அசைக்கும்படி உருவாகும் கள்ள உபதேசத்திற்கும், போதிக்கப்படும் தத்துவங்களுக்கும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கூறினார்.

சடங்காச்சாரமான விதிகளைப் பின்பற்றுவதாலும், தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை விட்டு வேறு எந்த வழியிலும் இரட்சிப்படைய முயலுதல் ஆபத்தானது என கொலோசெயருக்கு கூறினார். கிறிஸ்து ஒருவரே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருக்கிறார் என்றும் அவர் மூலமாக மாத்திரமே மனிதன் இரட்சிப்படையக்கூடும் என்று வலியுறுத்தினார். அவர்கள் தங்கள் பாவவழிகளை விட்டு கிறிஸ்துவுடன் ஒன்றாய் இருந்ததாலும் ஐக்கியம் கொள்வதா

லுமே அவர்களை புதிய ஜனங்களாக மாற்ற இயலும் என்று எடுத்துரைத்தார்.

- **தெசலோனிக்கேயர் 1, 2**

தெசலோனிகேயா பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதிய முதல் நிருபம் அவர் அங்கு உபதேசித்த குறுகிய காலத்திற்குப்பின் எழுதப்பட்டது. இந்த நிருபத்தில் அவர்களின் அன்பின் செயல்களுக்கு நன்றி தெரிவிக்கிறார். தெசலோனிக்கேய கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்ட புது வாழ்வின் ஐசுவரியத்தை நினைப்பூட்டுகிறார். மேலும் இப்புதுவாழ்வு நிலைத்திருப்பதற்கு செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து அவர்களுக்கு புத்தி சொல்லியுள்ளார்.

தெசலோனிக்கேயர்கள், கிறிஸ்து சீக்கிரம் இப்பூமிக்கு வருகிறார் என்று சொல்லப்படுகிறதைக் கேட்டு மிகுந்த மனக் கலக்கம் அடைந்ததாக அறிந்தார். ஆகவே தான் அவர்களுக்கு இரண்டாவது நிருபத்தை எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கிறிஸ்தவ விசுவாசிகள் அநியாயம் செய்வோரிடமிருந்து வேறு பிரிக்கப்பட்டு அவர்களை சோதித்தறிந்து சீர்படுத்தும் வரை அவருடைய வருகை தாமதிக்கலாம் என்றும் எனினும் அவர்கள் விரைவில் சீர்பட வேண்டிய அவசியத்தைக் குறித்தும் எச்சரித்து எழுதுகிறார். சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறித்தனமாக ஜீவிப்போரை தேவனுடைய வருகைக்காக மிகக் கடினமாகவும், பொறுமையோடு, விசுவாசத்தோடுக் கிரியை செய்ய வேண்டுமென்று கடுமையாக எச்சரித்து எழுதியுள்ளார்.

- **தீமோத்தேயு 1, 2**

தீமோத்தேயு, பவுலுடைய அநேக சுவிசேஷம் பிரமாணங்களில் கலந்து கொண்ட நண்பன். இந்த இரண்டு நிருபங்களும் மற்ற நிருபங்களைப்போல அல்லாமல் தீமோத்தேயுவுக்கு தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டவைகளாகும், மற்றவைகள் பல்வேறு கிறிஸ்தவ சபைக்கு எழுதப்பட்டவைகளாகும். பவுலு

டைய முதலாவது நிருபத்தில் சில சபைகளில் போதிக்கப்பட்ட தவறான உபதேசங்களைக் குறித்து வாதிட்டு எழுதுகிறார். இந்த நிலவரத்தைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு சபையின் ஊழியக்காரர்களும் மற்றும் சபையின் உத்தியோகஸ்தர்களும் மிகுந்த கவனத்தோடு தெரிந்தெடுக்கப்படவும் அவர்கள் எவ் வாறு போதிக்க வேண்டும் என்ற முறைமைகளையும் அவர்க ளுக்கு ஆலோசனை கொடுக்கிறார். பவுல், தீமோத்தேயுவை தனக்குப்பின் இவ்வூழியத்தின் பொறுப்பாளராக இருக்கவேண் டும் என்ற கண்ணோட்டத்தில் தீமோத்தேயுவைப் பார்க்கிறார்.

ஆகவே அவருடைய இரண்டாவது நிருபத்தில் ஒரு ஊழியக்காரனாக மக்களுக்கு தேவனுடைய வார்த்தையைக் கொண்டு செல்வதற்கு எப்படிப்பட்டச் செயல்கள் அவசியம் என்று அறிவுரைகள் கூறுகிறார். தீமோத்தேயு சந்திக்கப்போகிற ஊழியம் எளிதானதல்ல, கடினமானதுதான். எனினும் மக்களு டைய இரட்சிப்புக்காக அவன் மிகுந்த பெலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படியானால் தான் அவன் செய்யும் ஊழியத்தில் வெற்றியைக் காணமுடியும்.

- தீத்து

தீத்துவும், தீமோத்தேயுவைப் போலவே பவுலுடைய நம்பகமான நண்பன். இந்த நிருபத்தை தீத்துவுக்கு எழுதிய நோக்கமே பவுல் அரைகுறையாக விட்டுச்செல்லுகிற ஊழியத் தை அவன் முற்றுப்பெறச் செய்யவேண்டுமென்று அறிவுரை கூறுகிறார். உடனடியாகச் செய்யவேண்டிய வேலை என்னவெ னில் கிரேத்தா சபையை எப்படி கட்டி எழுப்புவது, அவர்களு டைய தேவை என்ன, என்பதை அறிந்து செயல்பட பவுல் தீத்துவுக்கு விவரித்துச் சொல்லியுள்ளார். மேலும் தீத்து அங்கு ள்ள சில எதிர்ப்புகளுக்கு மத்தியில் தன்னுடைய நடக்கை யிலும் தேவபக்தியிலும் எவ்வாறு தெளிந்தபுத்தியோடு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். அதே தெளிந்த புத்தியை மற்றவர்களும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக பிரசங் கிக்க தீத்துவுக்கு ஆலோசனை கூறுகிறார்.

- பிலேமோன்

பவுலுடைய இந்த நிருபம் பிலேமோனுக்கு அவனிடத்தில் அடிமையாயிருந்து வேலை செய்த ஒநேசிமுக்காக மன்றாடி எழுதிய நிருபமாகும். ஒநேசிமு தன்னுடைய எஜமானாகிய பிலேமோனுக்கு விரோதமாகக் குற்றம் செய்துவிட்டு ஓடிப்போனவன். அவனைப் பவுல் சந்தித்தார். அவனை மனந்திரும்ப வழி நடத்தி பவுல் தன்னோடு சேர்த்துக் கொண்டார். இப்பொழுது இந்நிருபத்தை ஒநேசிமுவின் கையிலே கொடுத்தனுப்பி பிலேமோனை ஒநேசிமுவை அடிமையாக அல்ல அன்புள்ள சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுள்ளார்.

- எபிரெயர்

எபிரெய மதம் பழைய ஏற்பாட்டின் அஸ்திபாரத்தில் உருவானதாகும். ஆகவே இந்த நிருபத்தின் மூலமாக அந்தக் கருத்துக்களைப் போதித்து சபையாரை ஊக்குவிக்கும் வகையில் இந்த நிருபம் எழுதப்பட்டுள்ளது. இந்த நிருபத்தின் ஆக்கியோன் யார் என்பது தெரியவில்லை. எனினும் நிருபத்தின் வாசகர்களுக்கு பூர்வகாலத்தையும் தற்போதைய காலத்தையும் இணைக்கும் வகையில் மிகத் தெளிவாக குறிப்பிடுகிறார்.

பூர்வ காலத்தில் தேவன், தீர்க்கதரிசிகள் மூலம் தன்னை வெளிப்படுத்தினார். மற்றும் மோசே மூலம் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். ஆனால் தற்காலத்தில் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலம் ஆச்சரியமான வகையில் இடைபடுகிறார். இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசிகளை விட, மோசேயைவிட, தேவ தூதர்களை விட மேலானவராகையால் இயேசுவை விசுவாசித்து அவரது உபதேசங்களைக் கேட்டு தேவனோடு நெருங்கி வாழும் சிலாக்கியத்திற்கு வழிநடத்துகிறார்.

மேலும் இந்நிருபத்தின் ஆக்கியோன் தேவன் பாவங்களை மன்னிக்கிறவராயிருக்கிறார் என்ற நிச்சயம் கிறிஸ்தவர்களுக்கு இருக்கிறபடியால் தங்கள் ஜீவியத்தை தைரியத்தோடு

எதிர்கொள்கின்றனர். அதுவே அவர்களுக்கு நிச்சயமும் தைரியமும் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. இந்த நிச்சயம் இருக்கிறபடியால் அவர்கள் பெரிய விசுவாசத்தோடு தேவனை அணுகுகிறார்கள். இறுதியாக இந்த நிருபத்தை ஆக்கியோன் கிறிஸ்தவர்கள் தேவனுக்கு புத்தியுள்ள ஆராதனை செய்யும்போது செய்ய வேண்டிய கடமைகளை பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

- **யாக்கோபு**

பாரம்பரியக் கருத்தின்படி இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு இந்த நிருபத்தை எழுதியுள்ளதாக அறிகிறோம். பவுல் குறிப்பிட்ட சபையாருக்கு எழுதிய நிருபங்களைப்போல் அல்லாமல் இது பொதுவாக கிறிஸ்தவர்களுக்கென்று எழுதப் பட்டுள்ளது. யாக்கோபு கிறிஸ்தவர்களுடைய நடக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி புத்தி சொல்லுகிறார். மற்றவர்கள் மீது குற்றம் கண்டுபிடிப்பது, ஆணையிடுவது, சகிப்புத்தன்மையின்மை, பொறாமை, சுயநலம், பேராசை, ஆணவம் போன்ற சுபாவங்களை அகற்றி விடுதலை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனையாக சொல்லுகிறார். ஆராதிப்பதற்கும், நோயிலிருந்து விடுதலை பெறவும் ஜெபம் செய்ய வேண்டும் என்பதை உற்சாகப்படுத்தியும் வார்த்தை களால் அல்ல செயலால் அன்பு கூறவும் புத்தி சொல்லுகிறார்.

- **பேதுரு 1, 2**

பேதுரு, இயேசுவின் 12 அப்போஸ்தலர்களுள் ஒருவர். இந்த நிருபங்களை அவர் தான் எழுதியுள்ளார். நாடு கடத்தப் பட்டு, மிகக் கொடூரமாக நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தாருக்குத் தான் இந்த முதல் நிருபத்தை எழுதியுள்ளார். பாடுகளை சகிக்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லும் போது இயேசு எவ்வளவாய் பாடுபட்டார் என்பதை அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். பொறுமையின் மூலமாகவும் பரிசுத்தத்தின் மூலமாகவும் இயேசு தம்மைக் கொடுமைப்படுத்தியவர்களுக்கு முன்பாக எப்படி நின்று சகித்தாரோ அதேபோல அவர்களும் சகிக்க வேண்டும் என்று புத்தி சொன்னார். ஏனெனில் ஆபத்து

களையும் கடின நடத்துதலையும் சந்தித்தால் இயேசுவைப் போல் தேவனிடத்திலிருந்து மகிமையைப் பெற்றுக்கொள்ள லாம். ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். ஒருவரி லொருவர் அன்பு கூற வேண்டும். ஒன்றாய் இணைந்து ஜெபிக்க வேண்டும். அப்படிச்செய்தால் இயேசுவின் மூலமாகத் தேவனு டைய பெலன் நம்மோடு தங்கியிருக்கும்.

இரண்டாவது நிருபம் கள்ளப்போதகர்களால் பாதிக்கப் பட்டிருக்கும் சபையின் நிலவரங்களைக் குறிப்பிடுகிறார். இயேசு சீக்கிரம் வருகிறேன் என்று சொன்னவர் இன்னும் வரவில்லை யே என்றும் ஆகவே அதை நம்புவது வீணான காரியம் என்ற போதனை மக்களை பெருத்த ஏமாற்றத்திற்குள் வழிநடத்திச் சென்றது. பேதுரு இந்த நிலவரத்திலிருந்த கிறிஸ்தவர்களைப் பார்த்து இப்படிப்பட்டப் போதனைகளுக்கு செவிகொடுக்க வேண்டாம் என்றும் புதிய வானம், புதிய பூமி இவைகளைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மாறாதவைகள். அவைகள் தாமதமானாலும் நிச்சயமாக நிறைவேறும் காலத்தி ற்காக காத்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இந்நிருபத்தில் பேதுரு வலியுறுத்துகிறார். இதை ஏற்றுக் கொண்டு காத்திருக்கும்போது நாம் நற்குணசாலிகளாக மாறு வோம். மெய்க்கிறிஸ்தவரின் சமாதான வாழ்வை அடைந்து கொள்ள முடியும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

- **யோவான் 1, 2, 3**

அநேக வேதவல்லுநர்கள், நான்காவது சுவிசேஷத்தை எழுதிய அப்போஸ்தலனாகிய யோவானே இந்த மூன்று நிருபங் களையும் எழுதியுள்ளார் என்பதை ஒருமித்து ஏற்றுக்கொள்கி ன்றனர். தேவன் தம்மக்களை நேசித்தது போல ஒருவரையொ ருவர் நேசிக்க வேண்டும் என்பதே இந்த மூன்று நிருபங்களின் மையக்கருத்தாக இருக்கிறது.

முதலாவது நிருபத்தில் கிறிஸ்தவ ஐக்கியத்தைக் குறித்தும் சகோதர அன்பைக் குறித்தும் அதன் நற்பண்புக ளைக் குறித்தும் யோவான் எழுதியுள்ளார்.

இரண்டாவது நிருபம் ஒரு அம்மையாருக்கு எழுதப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தாலும் "தெரிந்துகொள்ளப்பட்டவளாகிய அம்மாளுக்கு" என்று குறிப்பிட்டிருக்கிறபடியால் உருவகமாக சபைக்கு எழுதப்பட்டதாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. மேலும் அவிசுவாசிகளையும் அந்நிய உபதேசங்களையும் கொண்டு வருகிறவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்றும் குறிப்பிடுகிறபடியால் இது சபையைக் குறிப்பதாக இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

மூன்றாவது நிருபம் காயுவு என்பவருக்கு எழுதப்பட்டதாக உள்ளது. அவன் தன்னோடுள்ள கிறிஸ்தவர்களுக்குக் காட்டும் விருந்தோம்பலைக் குறித்து யோவான் பாராட்டிய காரியம் குறிக்கப்பட்டுள்ளது.

- யூதா

நிருபங்களுள் இது கடைசி நிருபமாகும். இயேசுவின் சகோதரனாகிய யூதா இந்நிருபத்தை எழுதியிருப்பதாக வேத வல்லுநர்கள் கருதுகிறார்கள், எல்லா கிறிஸ்தவர்களுக்கும் சேர்த்து எழுதப்பட்டிருக்கும் இந்நிருபத்தில், துன்மார்க்கமான நடக்கைகள், தவறான கருத்துக்கள் சபைக்குள் தலை தூக்குகிறதைச் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறார். கிறிஸ்தவர்களை சத்தியத்திற்குப் பாதுகாவலாளராக இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறார். துன்மார்க்கத்திற்கு வழுவிச் சென்றோரையும் பரிவோடு அணுகி அவர்களுக்கு உதவிசெய்து மீண்டும் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரவேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

- **வெளிப்படுத்தின விசேஷம்**

புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற தீர்க்கதரிசனங்கள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. "அப்போகலிப்ஸ்" என்ற கிரேக்க பதத்தின் அர்த்தத்தின் அடிப்படையில் "வெளிப்படுத்தல்" என்று இப்புத்தகம் பெயர் பெற்றுள்ளது. வெளிப்படுத்தல் என்றால் தீர்க்கதரிசனம் மூலமாக அல்லது திடீரென்று பெற்றுக்கொள்ளும் தேவ வெளிப்படுத்தலாகும்.

அநேக வேத வல்லுநர்கள் இப்புத்தகத்தில் சொல்லப் பட்டவையாவும் நான்காவது சுவிசேஷத்தையும் மூன்று நிருபங் களையும் எழுதிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டவை என்று கருதுகின்றனர். ஆகவே தான் இப்புத்தகம் "யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்" என்று சொல்லப்படுகிறது.

இந்த புத்தகம் முன்பு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங் களில் தொகுப்பாக உள்ளது. இரட்சகராகிய இயேசு கிறிஸ்து வின் வருகை, பூமியில் தேவனுடைய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப் படுதல், இயேசுவின் இரண்டாம் புதிய பூமி ஸ்தாபிக்கப்படுதல் ஆகிய வைகள் இதில் அடங்கியுள்ளன. வருகைக்கான தீர்க்க தரிசன நிறைவேறுதலின் சாத்தியங்கள், புதிய வானம், இப்புத்த கத்தின் தொடக்கப் பகுதிக்கும் இறுதி பகுதிக்கும் இடையில் 7 தரிசனங்கள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த தரிசனங்கள் அடையாளங்களாகவும் உருவகமாகவும் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் அநேகம் நேரடியாக, எளிதில் விளங்கிக்கொள்ள முடியாதவைகளாக உள்ளன.

இப்புத்தகத்தை ஆக்கியோனின் முக்கியமான செய்தி என்னவெனில் இயேசு கிறிஸ்து மரித்தார், உயிர்த்தெழுந்தார், என்றும் சதாகாலமும் ஜீவனோடிருக்கிறார். ஆகவே இயேசு உலகத்திலுள்ள சகல தீமையான வல்லமைகளுக்கும் மேலான வல்லமையும் பெலனும் உள்ளவராயிருக்கிறார். இப்புத்தகம் தொடக்கத்தில் சொன்னபடியே இறுதியிலும் அவர் சீக்கிரம் மீண்டும் வருகிறார் என்ற நிச்சயத்தையும், எல்லா சத்துருக்க ளுக்கும் மேலாக வெற்றியடைவார் என்ற உறுதியையும் தருகி றது.

XX. **வேதாகமத்தின் 25 பயன்கள்**

வேதவசனங்களை நாம் வாசிப்பதால், நேசித்து தியானி ப்பதால், அவைகளின்படி நடப்பதால் ஏற்படும் ஏராளமான பயன்களில் மிக முக்கிய 25 பயன்களை மட்டும் ஒன்றன் பின் ஒன்றாக வரிசைபடுத்துகிறேன்.

வேதாகமத்தை வாசிக்கும் நாம் இவைகளை நன்கு அறிந்திருத்தல் அவசியமானதாகும்.

1) பாதைக்கு வெளிச்சம் தருகிறது (சங்.119:105)

2) அறிவை தருகிறது (நீதி.19:27)

3) ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது (சங்.19:7)

4) ஆவிக்குரிய வளர்ச்சியை தருகிறது (1.பேது 2:3)

5) ஆறுதலை தருகிறது (சங்.119:49,50)

6) இருதயத்திற்கு மகிழ்ச்சியை தருகிறது (எரே.15:16)

7) இருதயத்தை சந்தோஷிபிக்கிறது (சங்.19:8)

8) இருளான வாழ்வை பிரகாசிக்க செய்கிறது (பிலி.2:14)

9) சீஷர்களை உருவாக்குகிறது (அப்.6:7)

10) சமாதானத்தை கொடுக்கிறது (சங்.119:165)

11) ஞானமுள்ளவனாக்குகிறது (சங்.119:100)

12) தேவனுக்கு பயப்படுதலை போதிக்கிறது (சங்.119:38)

13) நற்குணசாலிகளாக்குகிறது (அப்.17:11)

14) நன்மைச் செய்ய கூடியது (மீகா.2:7)

15) நித்திய ஜீவனை கொடுக்கிறது (யோவா.5:39)

16) நோய்களை குணமாக்குகிறது (சங்.107:20)

17) அசுத்த ஆவிகளை துரத்துகிறது (மத்.8:16)

18) பாவங்களை கழுவி பரிசுத்தமாக்குகிறது (சங்.119:9)

19) பாவத்திற்கு விலக்கி காக்கிறது (சங்.119:11)

20) பிசாசை ஜெயிக்க உதவுகிறது (வெளி.12:11)

21) புத்திமானாய் மாற்றுகிறது (யோசு.1:7,8)

22) பேதைகளை உணர்வுள்ளவர்களாக்குகிறது (சங்.119:130)

23) பொறுமையை உண்டாக்குகிறது (ரோம.15:4)

24) மனமகிழ்ச்சியை தருகிறது (சங்.119:77)

25) மனக்கண்களை தெளிவிக்கிறது (சங்.19:8)

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது. (வெளி.1:3)

XXI. வேதாகமத்தின் 30 சிறப்புக்கள்

1) நாவுக்கு இனிமை வாய்க்கு மதுரம் (சங்.119:103)

2) பொன்னிலும் மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத் தக்கவை (சங்.19:10)

3) தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளித்தேனிலும் மதுரமுள்ளவை (சங்.19:10)

4) குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமானவை (சங்.19:7)

5) வெறுமையாய் திரும்பாமல் கர்த்தர் விரும்புகிறதை செய்யக்கூடியவை (ஏசா.55:11)

6) தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவை (நீதி.30:5)

7) வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் ஒழிந்து போகாதவை (மத்.4:35)

8) நீதியும் மகா உண்மையுமானவை (சங்.119:138)

9) செவ்வையும் சத்தியமுமானவை (பி.12:10)

10) சத்தியமும் உண்மையுமானவை (வெளி.22:6)

11) உத்தமமானவை (சங்.33:4)

12) அதிசயமானவை (சங்.119:129)

13) நீதியானவை (நீதி.8:8)

14) என்றென்றைக்கும் நிலைநிற்கக்கூடியவை (ஏசா.40:8)

15) தாற்றுக்கோல்கள் போலவும் அறையப்பட்ட ஆணிகள் போலவும் (பிர.12:11)

16) பூச்சக்கரத்து கடைசிவரை செல்லக்கூடியவை (சங்.19:4)

17) கடைசிநாளில் நியாயந்தீர்க்கக் கூடியவை (யோவா.12:48)

18) ஆவியாயும் ஜீவனுமாயும் இருப்பவை (யோவா.6:63)

9) அடையாளங்களினால் உறுதிப்படுத்தப்பட்டவை (மாற்.16:20)

20) விதைக்கு ஒப்பானவை (லூக்.8:11)

21) வளர்ந்து பெருகக்கூடியவை (அப்.12:24)

22) விருத்தியடைந்து மேற்கொள்ள கூடியவை (அப்.19:20)

23) பரவி மகிமைப்படக் கூடியவை (2 தெச.3:1)

24) பரிசுத்தமாக்க கூடியவை (1 தீமோ.4:5)

25) ஞானத்தை போதிக்க கூடியவை (1 கொரி12:8)

26) இரட்சிக்கும் வல்லமையுடையவை (யாக்.1:21)

27) சர்வத்தையும் தாங்கக் கூடியவை (எபி.1:3)

28) ஜெநிப்பிக்கக் கூடியவை (யாக்.1:18)

29) கட்டப்படக்கூடாதவை (2 தீமோ.2:9)

30) ஜீவனும் வல்லமையுமுள்ளவை (எபி.4:12)

இத்தனை சிறப்பம்சங்களை கொண்ட பரிசுத்த வேதாக மத்தை தான் நம்முடை கரங்களில், அதுவும் நமது மொழியில் பெற்றிருக்கிறோம் என்பதை நினைக்கும் போது மனம் சிலிக்கிற தல்லவா?

XXII. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதன் சான்றுகள்

வேதாகமத்தில் தேவனுடை வார்த்தை இருக்கிறது என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். அது வேதாகமத்திற்கு முரணா ன கருத்தாகும். "வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தை இல்லை. முழு வேதாகமமும் தேவனுடைய வார்த்தையாகவே இருக்கிறது." இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை புரிந்து கொ ள்ள முடிகிறதா? 2தீமோ.3:16-ல் அறிவிக்கப்பட்டபடி, வேதாக

மம் தேவனுடைய வார்த்தை என்பதற்கான சில அக மற்றும் புறச்சான்றுகளை இந்த பகுதியில் நாம் கற்றுக்கொள்வோம்.

1) தெய்வீக அதிகாரம்

வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் ஒரு தீர்க்கதரிசன அல்லது தெய்வீக அதிகாரத்தின் அறிவிப்பைப் பெற்றிருக்கிறது. "கர்த்தர் கூறுகிறார்" அல்லது "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி" போன்ற சொற்றொடர்களைப் பல இடங்களில் காணலாம். தேவன் தம்முடைய மக்களின் சரித்திரத்தில் நடப்பித்த கிரியைகளைக் கூறுவதிலும் இந்த தெய்வீக அதிகாரம் வெளிப்படுகிறது.

"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயிருப்பதால் அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைபடிப் பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ.3:16). தேவனால் பிறப்பிக்கப்பட்ட நிறைவான போதனை, தன்னுடைய தெய்வீக, ஆற்றல் மிக்க வல்லமையின் மூலமாக நம்மைக் கட்டியெழுப்பி, அறிவுறுத்தி விடுவிக்கிறது (2 தீமோ.3:15; 1 பேது 1:23; யோவா.8:32). ஆனால் தவறான போதனையோ நம்மை அதைரியப்படுத்தி, வீழ்த்தி, அடிமைத்தனத்திற்கு வழி நடத்தும்.

வேதாகமத்தைத் தவிர இதர புத்தகங்கள் தேவனால் அருளப்பட்டதென்று சொல்ல முடியாது. இன்று புதிய சத்தியங்களை யாருக்கும் தேவன் வெளிப்படுத்துவது இல்லை. ஏற்கனவே வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள சத்தியங்கள் மூலம் ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தி தருகிறார். புதிய ஏற்பாட்டின் இறுதி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம் எழுதி முடிந்ததும் தேவன் சபைக்கு கொடுக்கும் வெளிப்படுத்தல்கள் முற்றுப் பெற்றது. 66 புத்தகங்களில் ஒன்று வேறு ஒன்றைவிட அதிகமான ஆவியானவரின் ஏவுதல் உடையது என்று சொல்ல இடமில்லை. எல்லா புத்தகங்களிலும் ஆவியானவரின் நிறைவு காணப்படுகிறது. "தேவன்" யேகோவா என்ற வார்த்தையே இல்லாத

எஸ்தரின் புத்தகம் மற்றப் புத்தகங்களைப்போல ஆவியின் நிறைவுடையதாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.

2) நிறைவேறிய தீர்க்கதரிசனம்

வேதபுத்தகத்தில் கடந்தகால வரலாறு மட்டுமல்ல, எதிர்காலத்தில் என்ன நடைபெறப்போகிறது என்பதைப் பற்றி யும் எழுதப்பட்டிருக்கிறது. சிறந்த அறிவியல் சாதனங்களை வைத்து ஆய்வு செய்து, அடுத்த 24 மணி நேரத்தில் மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்தால், பல நேரங்களில் அது அப்படியே நடைபெறுவதில்லை. மழை பெய்யும் என்று அறிவித்தால், வெயில் அடிப்பதை நாம் பார்த் திருக்கிறோம். வெயில் அடிக்கும் என்று அறிவித்தால் திடீரென் று மழை பெய்வதை நாம் பார்த்திருக்கிறோம். அடுத்த 24 மணி நேரத்தில் என்ன நிகழும் என்று நாம்மால் சரியாக நிதானிக்க முடியவில்லை. அப்படியானால், எதிர்காலத்தில் என்ன நடக்க போகிறது என்பதைப் பற்றி சொல்லும் ஒரு புத்தகத்தின் நம்பகத்தன்மையானது, கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவ ங்கள், எவ்வளவு சரியாக அந்த புத்தகத்தால் முன்னறிவிக்க ப்பட்டது என்பதை பொறுத்து அமைகிறது.

உதாரணமாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பை பற்றி, அவர் பிறப்பதற்கு சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்னதாகவே முன்னறிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் குறிப்பிட்ட அதே கால கட்டத்தில் இயேசு கிறிஸ்து பிறந்தார். மேலும், எந்தெந்த போரில் எந்தெந்த நாடுகள் வெற்றி பெறும் என்று முன்னறிவிக் கப்பட்டதோ, அது துல்லியமாக அப்படியே நடந்தேறியது. நாம் வாழுகிற இந்த காலக்கட்டதில் என்ன நடைபெறும் என்று வேத புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அது இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. இனி என்னென்ன நடைபெறப்போகிறது என்று சொல்லப்பட்டிருகிறதோ, அதுவும் அப்படியே நடைபெறப் போகிறது!

தேவன் எதிர்காலத்தில் கொண்டுவரும் காரியங்களைப் பற்றி மனிதர்களிடம் பேசினார். அவற்றில் சில ஏற்கனவே நிறை

வேறிவிட்டன. மற்றவை இன்னும் இல்லை. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையைப் பற்றிய 300-க்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்கள் உள்ளன. இவையாவும் நிகழ்ந்த பிறகு எழுதப்படவில்லை ஆனால் முன் னரே எழுதப்பட்டவை. இன்று இவைகள் கண்முன்னே நிறை வேறி வருவதை காண முடிகிறது.

அப்படியானால் இது யூகத்தில் எழுதப்பட்டது அல்ல என்பதும், இது தேவனுடைய வார்த்தை என்பதும் இதன்வாயி லாக புலனாகிறது.

3) வேதத்தின் ஒற்றுமை

வேதாகமம் ஏறக்குறைய 40 மனித எழுத்தாளர்களால் சுமார் 1,600 ஆண்டுகளில் எழுதப்பட்டது. இந்த மனிதர்கள் மிகவும் மாறுபட்டவர்கள். மோசே ஒரு அரசியல் தலைவர்; யோசுவா ஒரு இராணுவத் தலைவர்; தாவீது ஒரு மேய்ப்பன்; சாலமோன் ஒரு ராஜா; ஆமோஸ் ஒரு மேய்ப்பன் மற்றும் பழம் பொறுக்குபவர்; தானியேல் ஒரு பிரதமர்; மத்தேயு வரி வசூலிப் பவர்; லூக்கா ஒரு மருத்துவர்; பவுல் ஒரு ரபி; பேதுரு ஒரு மீனவர் என பல தரப்பட்ட துறைகளை சேர்ந்தவர்களை பரிசுத்த ஆவியானவர் புத்தகம் எழுத பயன்படுத்தியதை பார்க்கிறோம்.

மேலும் வேதாகமம் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதப் பட்டது. இது ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய 3 வெவ்வேறு கண்டங்களில் எழுதப்பட்டது. ஆயினும் வேதத் தின் சிறந்த கருப்பொருள்கள் அனைத்து எழுத்துக்களிலும் பராமரிக்கப்படுகின்றன. வேதாகமம் தன்னில்தானே முரண்படுவ தில்லை. பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை எழுதுவதை மேற்பார்வையிடுகிறார். மற்றும் இவையாவும் நிறைவேற்ற முடி யும் என்பது தேவனைத் தவிர வேறு எவரும் இருப்பதற்கு வழியில்லை. இதன் வாயிலாக இது தேவனுடைய வார்த்தை தான் என்பது மீண்டும் உறுதி செய்யப்படுகிறது.

4) வேதாகமத்தின் நடுநிலைத்தன்மை

வேதாகமம் அதன் நாயகர்களை அவர்களின் தவறுகள் மற்றும் பலவீனங்கள் அனைத்தையும் உண்மையாக உள்ளது போலவே முன் வைக்கிறது. மேலும் மற்ற மதங்கள் தங்கள் நாயகர்களை புகழ்த்தி மகிமைப்படுத்துவது போல் செய்யாது. வேதாகமத்தைப் படிக்கும்போது, அது விவரிக்கும் நபர்களுக்கு பிரச்சினைகள் இருப்பதையும், நம்மைப்போலவே தவறு செய்வ தையும் ஒருவர் உணர்கிறார். வேதாகமத்தின் நாயகர்களை சிறந்தவர்களாக மாற்றியது அல்லது காண்பிப்பது அது அவர்கள் தேவனை விசுவாசித்து நம்பியிருந்தார்கள் என்பதனால் ஆகும். அதற்கு தாவீது ஒரு நல்ல உதாரணம், அவர் "கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷன்" என்று விவரிக்கப்படுகிறார் (1 சாமு.13:14). ஆனாலும், தாவீது விபச்சாரம் செய்தார் (2 சாமு.11:1-5) மற்றும் கொலைபாதகம் செய்தார் (2 சாமு.11:14-26). இந்த தகவலை வேதாகமத்திலிருந்து எளிதாகத் தவிர்த்தி ருக்கலாம். ஆனால் சத்தியத்தின் தேவன் அதையும் உள்ளடக் கியிருந்தார். மேலும் ஆபிரகாம், மோசே, யாக்கோபு, சிம்சோன், பேதுரு போன்றோர் வாழ்வில் அவர்கள் செய்த நற்கிரியைக ளை மட்டுமல்லாது, அவர்களது தவறான அல்லது எதிர்மறை யான கிரியைகளும் அதனால் அவர்கள் சந்தித்த விளைவுக ளையும் ஒளிவுமறைவின்றி எடுத்துரைக்கிறது. இந்த நடுநிலைத் தன்மை தேவனுடைய வார்த்தையை உறுதி செய்கிறது.

5) உலகளாவிய அங்கீகாரம்

ஒரு புத்தகமானது மக்களின் அங்கீகாரம், கலாச்சார மற்றும் சமூக அந்தஸ்தை பெற வேண்டும். இதனை அனைத்து புத்தகங்களும் பெறுவது இல்லை. ஆனால் வேதாகமமோ கண்டம் விட்டு கண்டம் உலகளாவிய அங்கீகாரத்தை பெற்று ள்ளது. சிறுவர், வாலிபர், பெரியவர் என அனைத்து வயதையு டையவர்களுக்கும் வேதாகமம் ஏற்றதாய் அமைகிறது. மேலும் அரசர்கள் முதல் படித்தவர்கள், பாமரர்கள் என அனைத்து தரப்பு மக்களாலும் வேதாகமம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மொழி இனத்தை சார்ந்த மக்களால் எவ்வித தொய்வுமின்றி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நவீன நாகரீகம் வளரும் போது சில புத்தகங்கள் இக்காலத்திற்கு ஒத்துவராது என புறக்கணிக்கிறோம். ஆனால் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட வேதாகமம் இன்றளவும், இன்னும் சொல்லப்போனால் இன்னும் ஆயிரம் தலைமுறையானாலும் வேதாகமம் மக்களின் அங்கீகாரத்தை பெறும் என்பதில் சந்தேகமே இல்லை. இது தேவனுடைய வார்த்தை என்பதினாலேயே இது சாத்தியமாகிறது.

6) தொல்பொருள் ஆய்வு கண்டுபிடிப்புகள்

தொல்பொருள் ஆய்வின் கண்டுபிடிப்புகள் வேதத்தில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றை ஆதரிக்கின்றன. வேதபுத்தகத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் நடைபெற்ற மையப்பகுதியான இன்றைய இஸ்ரவேல், எகிப்து, ஈரான் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைக்கப் பெற்றிருக்கிற சான்றுகள் வேதபுத்தகத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்களை உறுதிப்படுத்துபவைகளாகவே உள்ளன. இயேசு கிறிஸ்துவின் கால கட்டத்தில் அவர் வாழ்ந்த இஸ்ரவேல் நாட்டில், எந்தெந்த பெயர்களில் அங்குள்ள கிராமங்கள், பட்டணங்கள் அழைக்கப்பட்டனவோ, அதே பெயரே இன்றும் அந்த பகுதிகளில் வழங்கப்படுகிறது.

வேதம் பொய்யானது என்று சொல்வது எளிது. ஆனால் உண்மைக்குப் புறம்பானது என்று நிரூபிப்பது சாத்தியமற்றது. உண்மையில் அது ஒருபோதும் செய்யப்படவில்லை. ஆபிரகாம் காலம் முதல் இயேசு கிறிஸ்துவின் காலம் வரை என்னென்ன சம்பவங்கள் நடைபெற்றதாக வேதாகமம் கூறுகிறதோ அத்தனையையும் நிரூபிக்கும் வண்ணம் தொல்லியல் துறை முடிவுகள் வந்துகொண்டே இருக்கிறது. இந்நூலை வாசிக்கும் இந்நேரத்தில் கூட வேதாகமத்தை மெய்ப்பிக்கும் தகவல்கள் கிடைத்துகொண்டே இருக்கிறது என்றால் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதினாலேயே என்றால் மிகையாகாது.

7) நம்பகமான சாட்சிகளின் சாட்சியம்

தேவன் பொய் கூறுபவரல்ல, தேவனால் அளிக்கப்பட்ட எந்தப்புத்தகத்திலும் பொய்யோ அல்லது முரண்பாடோ கிடையாது. தேவனுடைய உந்துதலினால் எழுதப்பட்ட புத்தகங்கள் ஒன்றோடொன்று ஒருங்கிணைந்தவையாக உள்ளன. பெரேயா பட்டணத்தார் "மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள்" (அப்.17:11).

பவுலின் உபதேசம் பழைய ஏற்பாட்டிலுள்ள தேவனுடைய முந்தின வெளிப்பாட்டை ஒத்திருக்கிறதா என்பதை அவர்கள் ஞானமாக சோதித்துப்பார்த்தார்கள். சம காலத்தில் வாழ்ந்தவர்களால் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பது நம்பகமான சாட்சிகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது. வேதாகம நிகழ்வுகளை கண்மூடித்தனமாக அப்படியே நம்ப வேண்டியதில்லை. அப்படி கண்மூடித்தனமாக நம்பினாலும் தவறில்லை. காரணம் வேதாகமத்தை தைரியமாக சோதனைக்கு அனுமதிக்கலாம். காரணம் இது பல முறை பலரால் உறுதிசெய்யப்பட்டுள்ள தேவனுடை வார்த்தையாகும்.

8) வரலாறு ஆமோதிக்கிறது

வேதபுத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள், ஒரு கட்டுக்கதையோ அல்லது கற்பனை காவியமோ அல்ல! வேத புத்தகத்தையும் உலக வரலாற்றையும் நீங்கள் தனியாகப் பிரிக்க முடியாது! வரலாறு என்று சொல்லும் பொழுது, அது கடந்த காலத்தில் நடைபெற்ற உண்மை சம்பவங்களையே குறிக்கும். உலக வரலாற்றில் அவர்கள் பதிவு செய்து வைத்திருக்கிற சம்பவங்களும், வேதபுத்தகத்தில் உள்ள சம்பவங்களும் முழுமையாக பொருந்துவதாகவே இருக்கிறது! உதாரணமாக, வேதபுத்தகத்தில் கூறப்பட்டுள்ள சாலமோன், தாவீது மற்றும் நேபுகாத்நேசார் போன்ற அரசர்களைப் பற்றி நீங்கள் உங்கள் பள்ளி வரலாற்றுப் புத்தகங்களில் படித்திருப்பீர்கள்!

வேதாகமத்தில் கட்டுக்கதைகளோ, புராண கதைகளோ இடம்பெறவில்லை.

முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யூத வரலாற்றா சிரியர் டைட்டஸ் ஃப்ளேவியஸ் ஜோசிப்பஸின் எழுத்துக்களும் ஆதாரமாக உள்ளன, வேதத்துடன் ஒத்துப்போகும் சில நிகழ்வு களை ஜோசிப்பஸ் பதிவு செய்கிறார். கொடுக்கப்பட்ட ஆதாரங் களைக் கருத்தில் கொண்டு, வேதாகமத்தை தேவனிடமிருந்து வந்தது என்பதை நாம் முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம் (2 தீமோ.3:16).

எசேக்கியேல் 26-ம் அதிகாரத்தில், தீரு நகரம் எவ்வாறு அழிக்கப்பட வேண்டும், அது எவ்வாறு தகர்க்கப்படும், அதன் குப்பைகள் எவ்வாறு கடலில் வீசப்படும் என்பதை நாம் வியக்கத்தக்க நிலையில் விரிவாகக் காணலாம். மகா அலெக் சாண்டர் அந்தப் பகுதியில் அணிவகுத்துச் சென்ற போது, கடற்கரைக்கு அருகிலுள்ள ஒரு தீவில் உள்ள ஒரு கோபுரத் தில் மக்கள் கூட்டம் இருந்தது. அவரால் கடலைக் கடக்க முடியவில்லை, அதனால் கோபுரத்தில் இருப்பவர்களை எதிர்த் துப் போராட முடியவில்லை. அவர்களுக்கு காத்திருப்பதற்குப் பதிலாக, பெருமைமிக்க வெற்றியாளராகிய அலெக்சாண்டர் கோபுரத்திற்குச் செல்ல தரைப்பாலம் அமைப்பதற்காக தனது இராணுவத்தைக் கொண்டு கடலில் கற்களை வீசினார். அதன் வேலை முடிந்து அவரது இராணுவம் கடலைக் கடந்து கோட் டையில் இருந்தவர்களை வீழ்த்தியது. ஆனால் அவருக்கு இவ் வளவு கல் எங்கிருந்து வந்தது? தரைப்பாலத்திற்குப் பயன் படுத்தப்பட்ட பாறைகள் தீரு நகரத்தின் எஞ்சிய இடிபாடுக ளாகும். அதன் கற்கள் கடலில் வீசப்பட்டன!

கிறிஸ்துவைப் பற்றி பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன (270-க்கு மேல்) அவை அனைத்தையும் பட்டியலிட சில திரை களுக்கு மேல் இடம் பிடிக்கும். மேலும், இயேசுவிற்கு அவர் பிறந்த இடம் அல்லது பிறந்த நேரம் போன்ற பலவற்றின் மீது எந்தக் கட்டுப்பாடும் இல்லை. மேலும், வேதாகமத்தை தேவனு டைய வார்த்தையாக உறுதிப்படுத்திய இயேசு, அவரது உயிர்

த்தெழுதலின் மூலம் அவரது நம்பகத்தன்மையையும் தெய்வீக த்தையும் நிரூபித்தார் (ஒரு வரலாறு உண்மையானது எனில் எளிதில் புறக்கணிக்க முடியாது). கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்து வுக்குப் பின் என உலக வரலாறே இயேசுவின் வரலாற்றை கொண்டு தான் பிரிக்கப்பட்டுள்ளதென்றால் வேதாகம வரலாற்றி னை மெய்பிக்க இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

9) அறிவியல் ஆமோதிக்கிறது

கடந்த காலத்தில் ஒவ்வொரு முறையும் வேதாகமம் தற்போதைய அறிவியல் கோட்பாட்டிற்கு முரணாக இருந்த போதும், பின்னர் அறிவியல் கோட்பாடு தவறானது என்று நிரூபி க்கப்பட்டது. ஒரு நல்ல உதாரணம் ஏசா.40:22. பூமி தட்டையாக இருப்பதாக அறிவியல் அறிவித்த எல்லா நேரங்களிலும் "பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்" என்று வேதாகமம் கூறி யது. இன்றைய ஆய்வாளர்கள் பூமி உருண்டை தான் என்பதை மெய்பித்துள்ளனர். பரிசுத்த வேதாகமத்தின் கூற்றினை கண்டு வியப்படைகின்றனர்.

வேதாகமத்தை ஒரு அறிவியல் கண்ணோட்டத்தில் காண வேண்டுமானால் கீழ்கண்டவாறு பிரிக்கலாம்.

- மானுடவியல் துறை (யோபு.30:5-6)
- வானியல் துறை
  (ஆதி.22:17; யோபு.26:7; எரே.31:35; 33:22; 1 கொரி.15:41)
- உயிரியல் துறை
  (ஆதி.1:11-12,21,25; 2:7; 3:19; லேவி.17:11)
- புவியியல் துறை (ஏசா.40:22; எரே.31:37)
- நீரியல் துறை (ஆதி.7:11; யோபு.26:8; 36:27-29; 37:11; 38:16; சங்.135:7; பிரச.1:7; ஏசா.55:10; எரே.10:13)

- ❖ வானிலை துறை (யோபு.28:26; பிர.1:6)

- ❖ இயற்பியல் துறை
  (மத்.24:30; 2 பேது.3:10; வெளி.11:9-11)

உலகம் வான ஆராய்ச்சியாளர்கள் என்ற Cray-3D சூப்பர் கம்ப்யூட்டரை உபயோகித்து வானமண்டலத்தின் துவக் கத்தை ஆராய முற்பட்டபோது "வெறுமையினின்று, ஒழுங்கின் மையினின்றும்" தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித் தார் என்ற வேதாகமத்தின் கூற்று உண்மையென்று கண்டறிந் தார்கள். பல நூற்றாண்டுகளாக நாம் விசுவாசித்து வரும் இந்த உண்மையை விஞ்ஞானம் இப்போதுதான் கண்டுபிடித்துள்ளது.

சிருஷ்டிக்கப்பட்டதை விஞ்ஞானம் இப்போது ஒத்துக் கொள்கிறது. மெசப்பொத்தோமியாவிலிருந்து நாகரிகம் தோன் றியதையும், இயேசுவின் மரணம் வரை உள்ள சகல சம்பவங் களையும் உலக சரித்திரம் ஒத்துக்கொள்ளுகிறது. அதன்பின் இன்றுவரை நடந்தவைகளைச் சபையின் சரித்திரமும், உலக சரித்திரமும் ஒத்துக்கொள்ளுகின்றன. இவ்வாறிருக்க வேதாக மம் கூறும் "உலகத்தின் முடிவும்" சம்பவிக்கத்தான் போகிறது என்பதில் என்ன சந்தேகம்?

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் எல்லா காலத்துக்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தக் கூடிய தாக இன்றும் அமைந்துள்ளது. சில நூறு ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட தற்போதைய விஞ்ஞான அணுகுமுறை அனைத்தும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந் துள்ளது. மேலும் சில உதாரணங்களை வசன ஆதாரங்க ளுடன் கொடுக்கிறேன்.

- ❖ ஆப்ரேஷன் - ஆதி.2:21
- ❖ கடிகாரம் - 2 இரா.20:11
- ❖ அணைக்கட்டு - யோபு.28:10,11

- ❖ மழை பரிமாற்றம் - யோபு. 36:27
- ❖ பூமி உருண்டை - ஏசா.40:22
- ❖ ராக்கெட் - ஒப.1:4

10) அழிக்கமுடியாத ஸ்திரத்தன்மை

நமது வேதாகமம் எழுதப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை ஏராளமான ராஜாக்களையும், ராஜ்ஜியங்களையும் கண்டுள்ளது. எத்தனையோ ராஜாக்கள் சபதமெடுத்து வேதாகமத்தை அழிக்க துடித்தனர். கிழித்தும், எரித்தும் பார்த்தனர். ஆனால் என்ன ஆச்சரியம் பாருங்கள். வேதாகமத்தை அழிக்க நினைத்தவர்கள் சிதைந்து போனார்கள். ஆனால் வேதாகமமோ தலைநிமிர்ந்து நிற்கிறது. மதவாத சக்திகள் வேதாகமங்களை கிழித்து எறிந்து குப்பையில் போடவே, அந்த வழியாக வந்த ஒருவன் தற்கொலை செய்யும் எண்ணத்தோடு நடந்து வருகையில், தூரத்தில் கிழித்து எறியப்பட்டிருந்த ஒரு வேதாகமத்தின் ஒரு பக்கம் காற்றில் பறந்து அவன் முகத்தில் மோதவே, அதை வாசித்து மனம் மாறிய சம்பவங்களும் இங்கு நடந்துள்ளது. காரணம் வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் ஜீவனுள்ளவைகள்.

பிரான்ஸ் தேசத்தில் வால்டர் என்ற ஓர் நாத்திக தத்துவவாதி ஒருவன் இருந்தான். அவன் கடவுள் இல்லை என்று கூறியதோடு வேதாகமத்தை ஒழித்துக்கட்டவும் முயற்சிகள் எடுத்தான். "வேதாகமம் ஓர் புரட்டுப் புத்தகம்" இதை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும். இது மனிதனின் கண்களை குருடாக்குகிறது. இன்னும் நூறு ஆண்டுகளுக்குள் உலக பழக்கத்திலிருந்து வேதாகமத்தை அழித்து, ஒழித்து செல்லாக் காசாக மாற்றிவிடுவேன் என்றான். எல்லாரும் கல்வி கற்று அறிவடைந்துவிடுவார்கள். வேதாகமத்தை ஒருவரும் வாசிக்க மாட்டார்கள். வேதாகமத்தை பார்க்க வேண்டுமானால் பண்டைய கால மியூசியத்திற்கு தான் சென்று பார்க்க வேண்டும், கிறிஸ்தவ மார்க்கமே இருக்காது என்று வானத்தை பார்த்து சவால்

கூறினான். இவன் இப்படி கூறிய ஆண்டு கி.பி 1750. ஆனால் கி.பி 1778-ல் வால்டர் இறந்து போனான்.

அவன் இறந்து சுமார் 50 ஆண்டுகளுக்குள் ஜெனிவா வோதாகம சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. வால்டரின் நாஸ்திக புஸ்தகங்கள் அச்சிடப்பட்ட அதே அச்சகத்தில் வேதாகமங்கள் ஆயிரக்கணக்கில் அச்சிடப்பட்டன. வால்டர் வசித்த வீட்டிலே யே இந்த வேதாகமங்கள் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டன. வால்டர் போய் சேர்ந்துவிட்டான். ஆனால் இன்றும் உலகில் மிகச்சிறந்த புஸ்தகமாக வினியோகமாவது வேதாகமமே.

வேதாகம நூல்கள் அனைத்தையும் சேகரித்து அழித்து விடவும், கிறிஸ்தவ ஆராதனைகளை உடனே நிறுத்திவிடவும், ரோமப்பேரரசனான டயக்ளீசியன் கி.பி.303-ல் ஒரு கட்டளை பிறப்பித்தான். கிறிஸ்தவ ஆலயங்கள் இடித்து தரைமட்டமாக் கப்பட்டன. வேதாகம நகல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கிறிஸ் தவ அதிகாரிகளாக இருந்தவர்களின் உயர் பதவிகள் பறிக்கப் பட்டன. கிறிஸ்தவர்கள் சாதாரண குடிமகனுக்கிருந்த உரிமை களையும் இழந்தார்கள். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். கிறிஸ்தவமும் வேதாகமமும் ரோம் நகரில் இனி தலை தூக்கவே முடியாது என சபதமெடுத்தான்.

ஆனால் 25 ஆண்டுகளுக்குப்பின் கான்ஸ்டான்டைன் ரோமப் பேரரசன் இயேசுவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவனா னான். வேதாகமத்தின் 50 நகல்களை அரசாங்க செலவில் உடனே ஆயத்தப்படுத்தும்படி கட்டளை பிறப்பித்தான். ரோமின் அதிகாரப்பூர்வ அரசு மார்க்கமாக கிறிஸ்தவத்தை அறிவித்தா ன். மன்னன் எவ்வழியோ அவ்வழியே நாங்களும் என்ற கொள் கையின்படி, முழு ரோம் நகரும் கிறிஸ்தவமயமாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பல சேதங்களையும் போராட்டங்களையும் கடந்தும், காலத்தால் அழியாமல் மக்களுடன் இன்றளவும் கலந்திருக்க ஒரே காரணம் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதினா லேயே ஆகும்.

11) அதிக மொழிபெயர்ப்புகளும் & விநியோகமும்

உலகத்திலேயே அதிகமான மொழியில் மொழிபெயர்க் கப்பட்டு, அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிற ஒரே புத்தகம் வேதாகமமே. உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் அவர் கள் பேசுகின்ற எல்லா பிரதான மொழிகளிலும் வெளிவந்து வாசிக்கப்படும் ஒரே புத்தகம் வேதாகமமே.

இன்று ஒவ்வொரு நிமிடமும் நிமிடத்திற்கு 58 வேதாக மங்கள் விற்கப்படுகின்றன. அல்லது இலவசமாக கொடுக்கப் படுகின்றன. உலகமெங்கும் ஒரு நாளைக்கு சுமார் 1,68,000 வேதாகமங்கள் இலவசமாகவோ அல்லது விலைக்கிரயமாக வோ விநியோகஞ்செய்யப்படுகிறது.

உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க் கப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமம். கடந்த 2019 அக்டோபர் மாத கணக்கின்படி, முழு வேதாகமமும் 698 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு மட்டும் மேலும் 1,548 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இது தவிர வேதாகம பகுதிகள் சுமார் 1,138 மொழிக ளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்படி சுமார் 3,324 மொழிக ளில் வேதாகமத்தின் ஏதோ ஒரு பகுதி இன்று மொழிபெயர்க் கப்பட்டுள்ளது.

எவ்வித எதிர்பார்ப்புகளோ அல்லது கட்டாயமோ இல் லாமல் வேதாகம மொழி அறிஞர்கள் பலர் காடுகளிலும் மலை வாழ் மக்களிடையேயும் தங்கி அங்குள்ளவர்கள் பேசும் சொந்த மொழியினை பல சிரமங்களிடையே கற்றுக்கொண்டு அவர்கள் தாய் மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்து கொடுக்கின் றனர்.

சில இடங்களில் பேச்சு வழக்கு மொழி மட்டுமே உண்டு. அவர்களுக்கும் வேதாகமம் போய் சேர வேண்டுமே

என்பதற்காக, அவர்கள் பேச்சு மொழிக்கு இலக்கணம் வகுத்து, எழுத்து மொழியாக்கி வேதாகம மொழிபெயர்ப்பு பணியினை செய்கிறார்கள்.

பார்வையற்றவர்கள் எளிதில் வாசிக்க ப்பிரைலி முறை வேதாகமங்களை தயாரித்து இலவசமாக வழங்குகிறார்கள். எழுத படிக்க தெரியாதவர்களுக்கு ஆடியோ பைபிள் தயாரிக் கப்பட்டு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு பல வர்ணப்பட வேதாகமம் வழங்கப்படுகிறது.

கடந்த 2021-ம் ஆண்டு சாம் சாலமோன் பிரபு என்பவர் தமிழ் மொழி வேதாகமத்தை ஆங்கில எழுத்துருவில் (தங்கிலீஸ் பைபிள்) முழு வேதாகமத்தையும் எழுதி, அச்சிட்டு வெளியிட் டுள்ளார். மேலும் வேதாகமத்தை எளிதில் பயன்படுத்த ஏராள மான பைபிள் அப்பிளிகேஷன்ஸ் வெளியிடப்பட்டுள்ளது. இது போன்ற வேதாகம விநியோகம் சார்ந்த செயல்பாடுகள் முழு உலகிலும் அனுதினமும் எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி ஏராளம் நடைபெற்று வருகிறது.

பல தங்கள் தங்கள் குடும்பத்தின் சார்பாக, தங்கள் திருச்சபையின் சார்பாக ஏராளமான வேதாகமங்களை பணம் செலுத்தி பெற்று, இலவசமாக விநியோகம் செய்கின்றனர். இவைகளுக்கெல்லாம் காரணமென்ன? தங்கள் திராணியை மீறிய செயலை ஏன் செய்ய துணிகிறார்கள் என்றால் இந்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதினாலேயே ஆகும்.

12) வாழ்வை மாற்றும் புத்தகம்

அநேக வருடங்களுக்கு முன் இராணுவ தலைவன் ஒருவன் தென் பசிபிக் தீவுகளில் ஒன்றில் தன் கப்பலை விட்டு இறங்கினான். இத்தீவின் மக்கள் முன்னால் நரமாமிசத்தை உண்பவர்களாயிருந்தார்கள் என்றும் இப்போது பிறரை நேசிக்கி றவர்களாயும், வேலைகளில் உற்சாகம் உள்ளவர்களாயும் மாறியிருக்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறான்.

இராணுவ தலைவன் தீவின் முதல்வரோடு பேசிக் கொண்டிருக்கும்போது அவன் கையில் ஒரு பெரிய வேதாகமம் இருப்பதை கண்டான், இராணுவ தலைவன் சிரித்துக்கொண்டு தீவின் முதல்வனோடு இப்படி பேசினான்.

"உண்மையாகவே நீர் அந்த பழைய புத்தகத்தை நம்ப வேண்டியதே இல்லை. அது காலம் கடந்து போனது, ஒருவருக் கும் நன்மை செய்வதும் இல்லை'" என்றான். முதல்வர் பக்கத் திலிருந்த இராணுவர்களை சற்று பார்த்து கொண்டு ராணுவ தலைவனின் பக்கமாய் திரும்பி, மெதுவாக சொன்னார். 'தலை வரே, இந்த புத்தகத்தினால் உனக்கு நன்மைதான் உண்டு என்று சொல்லலாம். இது உமக்குச் செய்யும் நன்மையை நீர் அறியாமலிருக்கிறீர். இந்த புத்தகம் எங்களுடைய வாழ்க்கை யை மாற்றியிருக்காவிட்டால் நீர் இப்போது எங்களுடைய சமையல் பானையில் இருந்திருப்பீர்'" என்றான்.

வேதாகமம் ஒரு சமூகத்தையே மாற்றியுள்ளதை இந்த சம்பவம் நிரூபிக்கிறது. வாசிக்கும் ஒவ்வொருவரின் வாழ்க்கை யையும் புதுப்படைப்பாக மாற்றும் வல்லமை வேதாகமத்திற்கு உண்டு என்பதற்கு நீங்களும் நானும் உயிருள்ள சாட்சிகளாக இருக்கிறோம். நம்மை போல பல கோடிக்கணக்காணோருடைய வாழ்வை இன்றும் இனிமையாக மாற்றிக்கொண்ட இருக்கிறது.

கொடூர பாவிகள், திருடர்கள், விபச்சாரக்காரர்கள், குடி காரர்கள், லஞ்சம் பெறுகிறவர்கள், ஈவு இரக்கமின்றி வாழ்கிற வர்கள், கொலைகாரர்கள் என பல தரப்பட்ட மக்களை, இந்த பரிசுத்த வேதாகமம் அவர்கள் மனதினை புதிதாக்கி, குடும்பத் திற்கு நல்ல தலைவனாகவும், சமூகத்திற்கு முன்மாதிரியான நல்ல குடிமகனாகவும் மாற்றுகிறது.

இதற்கு பல கோடி மக்களை உலகமெங்கும் ஆதாரங் களாக நிறுத்த முடியும். இது தேவனுடைய வார்த்தையாக இருப்பதினாலேயே இந்த ஜீவனுள்ள வார்த்தைகள் கிரியை செய்து மாற்றங்களை நிகழ்த்துகிறது.

XXIII. வேதாகமத்தின் 7 காலங்கள்

- அறியாமையின் காலம்

மனிதர்கள்: ஆதாம், ஏவாள். (ஆதி.2:1-25)
கட்டளை: ஏதேன் தோட்டத்தில் ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியை புசிக்கக்கூடாது.

- மனசாட்சியின் காலம்

மனிதர்கள்: உலக மக்கள் அனைவரும்.
கட்டளை: மனசாட்சியின் படி வாழ்தல். (ஆதி.3:22-9:17).

- மனித அரசாட்சியின் காலம்

மனிதர்கள்: உலக மக்கள் அனைவரும்.
கட்டளை: நாட்டின் சட்டங்களுக்கும், மனசாட்சிக்கும் கீழ்படிதல். (ஆதி.9:17-முதல்)

- நியாயப்பிரமாண காலம்

மனிதர்கள்: இஸ்ரவேலர்.
கட்டளை: நியாயபிரமாணத்தின்படி வாழ்தல். (யாத்.20:1 முதல்)

- சபையின் காலம்/கிருபையின் காலம்

மனிதர்கள்: இரட்சிக்கப்படுவோர் (அப் 2 முதல்)
கட்டளை: விசுவாச பிரமாணத்தின்படி வாழ்தல், ஆவியானவரால் நடத்தப்பட்டு வாழ்தல்.

- உபத்திரவ காலம்

இரகசிய வருகையின் போது கைவிடப்பட்டவர்கள்.
கட்டளை: அந்தி கிறிஸ்துவின் முத்திரையை ஏற்றுக் கொள்ளக்கூடாது. (வெளி.4:1-20:1 வரை).

- 1000 வருட அரசாட்சியின் காலம்:

அனுமதிக்கப்பட்டோர், பரிசுத்தர்களால் ஆளப்படுபவர்கள்.
கட்டளை: புதிய சட்டங்களுக்கு கீழ்படிதல். (வெளி.20:1-15).

XXIV. வேதாகமம் தொடர்பான பொன்மொழிகள்

- இங்கிலாந்தின் வெற்றிக்குக் காரணம் வேதாகமமே.
  - விக்டோரியா மகாராணி

- உலகத்தில் ஒரு சிறந்த பொருள் உண்டென்றால் அது வேதாகமே. - ஐந்தாம் ஜார்ஜ்

- எத்திசையில் செல்வது என்று நான் குழப்பமடையும் பொழுதெல்லாம் புதிய ஏற்பாடே எனக்கு வழிகாட்டி யது.
  - மகாத்மா காந்தி

- புதிய ஏற்பாடே உலகத்தின் சிறந்த புத்தகமாக என்றும் திகழும். - சார்லஸ் டிக்கன்ஸ்

- 100 முறை முழங்காலில் நின்று வேதத்தை வாசித்தபோது, வேதத்தில் அதிசயங்களையே காண்கிறேன்.
  - ஜார்ஜ் முல்லர்

- பரிசுத்த வேதாகமத்தின் இரண்டு அட்டைகளுக்கும் நடுவே மனிதனுடைய எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு.
  - ரோனால்ட் ரீகன் (அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி)

- பைபிளும் இயற்கையும் கடவுளின் சொல்லால் உருவா னவை. பைபிள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலில் எழுதப்பட்டது. - கலிலேயோ (கி.பி. 1461 - 1564 வரை வாழ்ந்த பௌதீக மேதை)

- பரிசுத்த வேதாகமம் தத்துவ ரீதியானது. அது இயற்கை விதிகளுக்கு ஒத்தது. - ராபாட் பாயில் (விஞ்ஞானிகளின் தந்தை)

❖ இந்த சுவிசேஷத்தை உலகில் எந்த சக்தியாலும் அழிக்க முடியாது. - சர். ஐசக் நியுட்டன்

❖ நான் எழுதின இறைவாக்கியம் இயேசு காவியமே.
- கவிஞர் கண்ணதாசன்

❖ வேதமே வேதத்திற்கு இணையற்ற வியாக்கியானம்
- டி.எல் மூடி

❖ பைபிள் இல்லாத நாள், அது பாலான நாள்
- டி.எல் மூடி

❖ ஒவ்வொரு நாளும் ஐந்து சங்கீதங்களை வாசித்து வந்தேன். அது தேவனுடன் எப்படி சேர்ந்து போவது என்று எனக்குப் போதிக்கிறது. நான் ஒவ்வொரு நாளும் நீதிமொழிகளில் ஒரு அதிகாரத்தை படித்து வந்தேன், அது என் சக மனிதனுடன் எவ்வாறு சேர்ந்து போவது என்று எனக்கு கற்றுக்கொடுக்கிறது. - பில்லி கிரஹாம்

❖ நீங்கள் பைபிளை கணக்கிற்காக படிக்காமல், உங்க ளை தரமாக்கதக்க படியுங்கள். - ஆல்ட்ரின் ரோஜர்ஸ்

❖ வேதத்தை முன்னணியில் வைத்தால், உன் வாழ்வில் பின்னடைவே இல்லை - போதகர். சார்லஸ்

❖ தினமும் ஒரு வேத வசனத்தை ஜெபத்துடன், உன் Online Status-ல் வைத்துபார். உன் வாழ்வின் Offline Status மாற துவங்கும். - போதகர். வித்ய பிரகாஷ்.

❖ சரீரத்திற்கு இரை தேடும் முன், வேதாகமத்தில் இறை (இரை) தேடிவிடுங்கள் - போதகர். வித்ய பிரகாஷ்.

❖ தினமும் கண்ணாடியில் உன் முகத்தை காணும் முன் வேதபுத்தகமாகிய கண்ணாடியில் உன் அகத்தை பார்த்து விடு - போதகர். தேவபிச்சை

❖ இருள் சூழ்ந்த உலகில் தடுமாற்றமின்றி நடக்க வேதமென் னும் ஒளிவிளக்கை கையில் ஏந்துங்கள்.
- கனம் ஸ்டீபன் ஆயர்

❖ பல நூறு தடவை பைபிளை வாசித்தாலும், புதிதாக வாசிப்பது போன்ற உணர்வோடு தான் தினமும் வேதத்தை திறக்கிறேன். - போதகர். மேத்யூ

❖ வேதத்தை வாசியுங்கள், அது நல்லது. வேதத்தை தியானி யுங்கள் அது மிகவும் நல்லது, வேதத்தினை கைக்கொள் ளுங்கள், அது மிக மிக நல்லது. - ஸ்பர்ஜன்

❖ வேதத்தில் கடினமான பகுதிகளை தவிர்ப்போமானால், நமது ஆவிக்குரிய வளர்ச்சி முழுமையடையாது.
- ரெய்னார்ட் போங்கே

❖ பேப்பரிலிருக்கும் வேத வார்த்தைகளை, விசுவாசத்துடன் என் இதயத்தில் கொண்டு செல்லும்போது, அது எனக்குள் செயல்பட துவங்குகிறது. - மார்ட்டின் லூதர்

❖ புதிய ஏற்பாடு கூறும் வார்த்தைகளிலிருந்து என்னுடைய சூழ்நிலைகளுக்கு தேவையான பெலனை பெற்றுக் கொள்கிறேன். - மகாத்மா காந்தி (வேதம் அறிய வேதம்)

❖ வேதாகமம் இல்லாமல் உலகை சரியாக ஆள முடியாது - ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன்

❖ வேத வாக்கியங்கள் மிக உன்னதமானதாகவே இருக்கி றது. - விஞ்ஞானி ஐசக் நியூட்டன்

- வேதம் இல்லாதிருந்தால் நாம் நாகரீகமடைந்திருக்க முடியாது - எச். ஜி. வெல்ஸ் (பிரபல சரித்திர ஆசிரியர்)

- இத்தனை நாளும் மானிடன் வாழ்வது இயேசுவின் வார்த்தையினாலே. - கவிஞர் கண்ணதாசன்

- வேதத்தை நான் படிக்க முற்படுகிறேன். ஆனால் வேதம் என்னை படித்துவிடுகிறது. - ராபர்ட் ஹீக்

- வேதத்தை நீ சுமந்தால் சத்திய வேதம் உன்னை சுமக்கும் - யாரோ

- மாபெரும் தலைவர்களை உருவாக்கிக் கொடுத்தது. அடிமைகளின் விடுதலைக்கு வித்திட்டது. அறிவுத் தளத்தை அமைத்துக் கொடுத்தது. மாபெரும் இலக்கியங்களின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்ந்தது. - பென்செருபாபேல்.

- தூய வேதாகமமும் மனித மனங்களில் மாபெரும் மாற்றங்களை விதைத்த ஒரு மகத்தான புத்தகம்
  - பென்செருபாபேல்

- வேதாகமம் ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டோருக்குமான ஒரு மகாசாசனம்: உலகின் மாபெரும் மக்கள்நாயக நூல்! - தியோடர் ரூஸ்வெல்ட்

- இது ஒரு மதப்புத்தகம் தானே என்று அலட்சியப்படுத்திவிட முடியாது. இது கூறும் வரலாறுகள் பல. இது விவரிக்கும் நிகழ்ச்சிகள் எண்ணிலடங்கா. அறிமுகப்படுத்தும் தலைவர்கள் எழுச்சி தருபவர்கள். இது உரைக்கும் தரிசனங்கள் ஆச்சரியத்தில் ஆழ்த்துவன. இதன் இலக்கிய உத்திகளும் நயங்களும் பரவசப்படுத்துவன. இது கூறும் அறங்கள் மனித சமுதாயத்தை வளர்ப்பன, காப்பன. - செருபாபேல்.

XXV. தமிழில் பரிசுத்த வேதாகமம் பிறந்த வரலாறு

(History of the Holy Bible written in Tamil)

இந்தியாவில் இலக்கிய வரலாற்றில் தமிழ் மொழிக்கு இரண்டு தனிச்சிறப்பும் மேன்மையும் உண்டு. அதில் ஒன்று இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழியில் தான் முதன் முதலில் புத்தகம் அச்சிடப்பட்டது. இது தமிழுக்கு ஒரு தனிச்சிறப்பு. இன்றைய தூத்துக்குடி மாவட்டம் புன்னைக்காயல் என்ற கடற்கரை கிராமம் தான் அன்றைய போர்ச்சுகீசியர்களின் தலைமையகமாக செயல்பட்டது. 1586-ல் இயேசு சபையை சார்ந்த அருட்பணியாளர் ஹென்றிக் அடிகளாரால் தமிழக எல்லைக்குள் முதன்முதலில் பல புகழ்வாய்ந்த பெருமைகளை உள்ளடக்கிய தீவு கிராமமான புன்னைக்காயலில் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. இந்த அச்சுக்கூடத்தில் “Flos Sanctorum" (அடியார் வரலாறு) என்ற 670 பக்கங்கள் கொண்ட நூல் கிராம மக்களின் பொருளன உதவியானால் அச்சிடப்பட்டது. தமிழ் எழுத்துருக்களில், தமிழக எல்லைக்குள் அச்சேறிய முதல் நூல் இதுவே ஆகும். இந்நூல் வெளியிட்ட பின்பு தான் தமிழர்கள் முதன் முதலாவது காகிதத்தை கண்களால் பார்த்து வியந்துள்ளார்கள். தமிழ் மொழியில் நான்கு நூல்களை அச்சிட்ட ஹென்றிக் அடிகளாரை “அச்சுக்கலையின் தந்தை” என்று அழைக்கின்றனர்.

தமிழ் மொழி பரிசுத்த வேதாகமம் மிக எளிதாக நமக்கு கிடைத்து விடவில்லை. அதற்கு பின் ஏராளமான வலிகளும், பட்டினியும், அவமானங்களும் இருந்துள்ளது. முதல் தமிழ் வேதாகமம் அச்சிட்ட வரலாற்றை சற்று விபரமாக அறிந்து கொள்வோம். மேலைநாட்டு மிஷனெரிகள் இந்தியா வந்தபோது தமிழ் மொழியில் வேதத்தை மொழிபெயர்க்க வேண்டும் என்ற தீராத வேட்கை தீவிரமாக இருந்தது எனினும் அவர்களில் பலர் தமிழ் மொழியில் வேதத்தை மொழிபெயர்க்க துணிந்து முன்வர இயலவில்லை. அதற்கான மிக முக்கிய காரணங்களை வரிசைபடுத்துகிறேன்.

❖ வேதாகமத்தின் மூல மொழியாகிய எபிரெயம், கிரேக்கம் போன்ற மொழி புலமை இல்லாமை.

❖ தமிழில் மொழியில் இத்தகைய பெரும் புத்த கத்தை மொழிபெயர்ப்பு செய்ய வேண்டுமாயின் தமிழ் மொழியில் புலமை பெற்றிருக்க வேண் டும். இத்தகைய வாய்ப்பு பலருக்கு கிடைக்க வில்லை.

❖ அன்றைய தமிழ் சமூகத்தில் பெரும்பாலான குரு குல ஆசிரியர்கள், வெள்ளை தோல் மக்களை தீட்டானவர்களாக எண்ணியபடியால், அயல் நாட்டவர்களுக்கு தம் மொழியை கற்றுக்கொடுக்க முன் வரவில்லை.

❖ தமிழ் மொழில் பேச்சு நடை மற்றும் எழுத்து நடை இருப்பதால் இவ்விரண்டையும் பிரித்து கையாளுவது மிஷனெரிகளுக்கு பெரும் சவாலாக இருந்தது.

❖ தமிழ் மொழியின் வார்த்தை பிரயோகங்கள் ஒவ்வொரு நிரப்பரப்பிலும் மாறி மாறி பயன்படுத் தப்படுவது அவர்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. உதாரணத்திற்கு சில இடங்க ளில் கயிறுக்கு மாற்றாக கவுறு என்றும், கம்புக் கு மாற்றாக கொம்பு என்றும், கைதட்டு என்பத ற்கு கைகொட்டு என்றும், இன்னமும் சில இடங் களில் விடுதலை என்பதற்கு விமோச்சனம் என் றும், ஊறுகாய் என்பதற்கு அச்சார் என்றும், மேற்சட்டை என்பதற்கு கமுசு என்றும், அரைக் கால் உடுப்பு என்பதற்கு கலுசம் என்றும் இன் னமும் பல பதங்கள் முழுமையாக மாற்றப் பட்டு பயனபடுத்தப்பட்டன. இவைகளை புரிந்து கொள்வது இன்றைய தமிழர்களுக்கே சவா

லாக இருக்கும்போது, அன்றைய மிஷனெரிக ளுக்கு இது மாபெரும் சவால் தான்.

- தமிழகத்தில் வாழ்ந்த பலதரப்பு மக்களின் தமிழ் உச்சரிப்புகள், மக்களின் பேச்சு வழக்கு சார்ந்த பல கேள்விகளை உருவாக்கியது. ஒரே தமிழ் தான் ஆனால் ஒவ்வொரு பிரதேசங் களிலும் அம்மொழியை உச்சரிக்கும் முறை மாறியிருப்பதை கண்டு வியந்தனர். கொழும்பு தமிழ், மதராஸ் தமிழ், கோவை தமிழ், மதுரை தமிழ், திருநெல்வேலி தமிழ், நாகர்கோவில் தமிழ் என இருப்பதால் தான் எந்த பேச்சு வழக் கை பின்பவற்றுவது என்ற கேள்வி உருவா னது.

- தமிழ் மொழியோடு சமஸ்கிருதம் கலந்திருந் ததால் இரண்டையும் வித்தியாசப்படுத்தி வேத த்தை மொழிபெயர்ப்பது அதிக சிரமத்தை கொடுத்தது.

- தங்கள் சொந்த தேசத்திலிருந்து அதிக எடை யுள்ள மற்றும் அளவில் பெரிதான அச்சு இயந் திரங்களை தமிழகம் கொண்டு வருவதும், அதை இயக்குவதும், தமிழ் அச்சு எழுத்துருக் களை ஒவ்வொரு எழுத்துக்கும் உருவாக்குவது மிக மிக கடினமான செயலாக காணப்பட்டது.

- காகிதங்கள், அச்சு இயந்திரங்கள் வாங்க அதிக அளவிலான பணத்தேவைகள் காணப்பட்டது.

- தமிழ் மண்ணின் தட்ப வெப்ப நிலை மாற்றங் கள் மேலைநாட்டு மிஷனெரிகளுக்கு எதிராக காணப்பட்டது. உயிரை பணயம் வைத்து பணி யாற்றுவது போன்ற சூழ்நிலை தான் அவர்க

ளுக்கும், அவர்களோடு வந்தவர்களுக்கும் காணப்பட்டது. உணவு முறை, கலாச்சாரம், இயற்கையின் பருவ மாற்றங்கள் அவர்களை உருகுலைய வைத்தது.

மேற்கண்ட நடைமுறை பிரச்சனைகளின் ஆழத்தை நம்மால் புரிந்து கொள்ள இயலுகிறது. இத்தகைய பெரும் சவால்களின் நடுவில் சில மிஷனெரிகள் தங்கள் ஜீவனை பணையம் வைத்து வேதாகமத்தை மொழிபெயர்க்கும் உன்னத பணியை செய்ய தங்களை அர்ப்பணித்திருந்தனர். தமிழ் வேதாகமத்தை கையில் சுமக்கும் ஒவ்வொருவரும் இத்தகைய மகான்களை அறிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும்.

1) சீகன்பால்க் மொழிபெயர்ப்பு

சீகன் பால்க்

தமிழ் மொழியில் முதல் முறையாக வேதாகமத்தை மொழிபெயர்த்து வெளியிட்டவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பர்த்தலோமேயு சீகன் பால்க் (Bartholomlaus Ziegenbalg) என்பவராவார். 1628-ம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள புல்சினிட்ஸ் எனுமிடத்தில் பிறந்த இவர், தனது 24-வது வயதில் தமிழ் நாட்டுக்கு ஒரு மிஷனெரியாகப் பணிபுரிய வந்தார். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து அநாதையாகிய இவர், தனது 16 ஆவது வயதில் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றதோடு, “ஐரோப்பாவில் நூறு பேரை இயேசுவுக்குள் கொண்டு வருவதை விட, புறமதத்தவர் வாழும் நாட்டில் ஒரு ஆத்துமாவை ஆதாயப்படுத்துவது மேலானது” எனும் “ஓபட் பிரைட் தௌபட்” என்பவரது பிரசங்க வார்த்தைகள் காரணமாக மிஷனரியாகப் பணிபுரிய வேண்டும் எனும் வாஞ்சை கொண்டு, 1706-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் தேதி தென்னிந்தியாவிலுள்ள இன்றைய மயிலாடு

துறை மாவட்டம் தரங்கம்பாடி எனுமிடத்திற்குத் தன் நண்பரான புளூட்சோ என்பவருடன் வந்து சேர்ந்தார்.

அக்காலத்தில், தரங்கம்பாடியில் டென்மார்க்கைச் சேர்ந்த வியாபாரிகளும் அரசு அதிகாரிகளும் பெருமளவில் இருந்தனர். டென்மார்க்கின் அரசன், தன் நாட்டவர் வாழுமிடங் களில் கிறிஸ்தவத்தைப் பரப்பவேண்டும் என்பதற்காகவே ஜெர்மனியரான சீகன்பால்க்கையும், புளூட்சோவையும் இந்தியா வுக்கு அனுப்பியிருந்தான்.

சீகன்பால்க்கும் புளூட்சோவும் அரசு அனுமதியுடன் வந்திருந்த போதிலும் அச்சமயம் தரங்கம்பாடியிலிருந்த டென் மார்க் அதிகாரிகள், மிஷனரிகள் தமது குடியிருப்புப் பிரதேசத் துக்கு வருவதை விரும்பவில்லை. மிஷனரிகள் தமது உல்லாச வாழ்வுக்கு எதிராகப் பிரசங்கம் செய்வார்கள் என்பதினால், அவர்கள் சீகன்பால்க்குக்கும் புளூட்சோவுக்கும் உரிய வரவேற் பைக் கொடுக்கவில்லை. இவர்கள் வந்த கப்பலிலிருந்த அனைவரும் கரைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டபோதிலும், இவர்களிருவரும் சிலநாட்கள் கப்பலிலேயே இருக்க வேண்டிய தாயிற்று.

பின்னர் தமிழ் மக்களது உதவியுடன் இருவரும் கரை சேர்ந்தனர். எனினும், இவர்கள் கரைக்கு வந்தவுடன் நகருக் குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை கடற்கரையிலேயே நிற்க வேண்டியதாயிருந்தது. சீகன்பால்க்கும் புளூட்சோவும் அப்போஸ் தலருடைய நடபடிகள் புத்தகத்தை வாசித்தவாறே கடற்கரை யில் இருந்தனர். இவர்களுக்கு குடிப்பதற்குக்கூட தண்ணீர் கொடுக்கப்படவில்லை. எனினும், இவர்கள் டென்மார்க் அரசின் கட்டளைப்படி வந்திருந்தமையினால் கடைசியில் நகருக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தரங்கம்பாடியிலிருந்த டென்மார்க் அதிகாரிகள் சீகன் பால்க்குக்கும் அவரது நண்பருக்கும் எவ்வித உதவியும்

செய்யாதபோதிலும், தேவன் அற்புதமான முறையில் அச்சமயம் அங்கிருந்த ஒரு ஜெர்மன் நாட்டவர் மூலம் இவர்களுக்கு உதவினார். சீகன்பால்க் தரங்கம்பாடியில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். சீகன் பால்க்கும் புளூட்சோவும் பாடசாலைப் பிள்ளைகளுடன் தரையில் உட்கார்ந்து, விரலினால் தமிழ் எழுத்துக்களை மணல் தரையில் எழுதுவதன் மூலமாக தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினர். இவர்களுக்கு முதலியப்பன் என்பவர் தமிழ்மொழியைக் கற்றுக்கொடுத்தார்.

சீகன்பால்க் ஒவ்வொரு நாளும் காலை 7 மணி முதல் 8 மணி வரை முதல் நாளில் தான் கற்ற தமிழ்ச்சொற்களை மனப்பாடமாய்ச் சொல்வார். 8 மணி முதல் 1 மணிவரையும், பின்னர் மாலை 3 மணி முதல் 5 மணிவரையும் தமிழ்ச் சுவடிகளைப் படிப்பார். மறுபடியும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை யாராவது ஒருவரைத் தமிழ்ப் புத்தகங்களை வாசிக்கச் சொல்லிவிட்டு அதைக் கவனித்துக் கேட்பார். இவ்விதமாக 8 மாதங்களில் சீகன் பால்க் தமிழில் எழுதவும் பேசவும் கற்றுக் கொண்டார். சீகன்பால்க் தமிழ் நாட்டில் இருந்த காலத்தில் மொத்தம் 119 தமிழ் நூல்களைக் கற்றுள்ளார். இப்புத்தகங்கள் மூலமாக மட்டுமல்ல, தமிழ் மக்களுடன் பேசுவதன் மூல மாகவும் தமிழைத் தன்னுடைய சொந்த மொழிபோல் அறிந்திருந்தார்.

சீகன்பால்க் ஆரம்பத்தில் ஒரு சில பிரசங்கங்களையும், லூத்தரன் சபையின் உபதேசங்களையும், ஒரு சில துண்டுப் பிரசுரங்களையும் தமிழில் எழுதினார். எனினும், அவரது இலட் சியமாக இருந்தது தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பேயாகும். தரங்கம்பாடியில் போர்த்துக்கேய மொழியைப் பேசும் பலர் அக்காலத்தில் இருந்தமையினால், சீகன்பால்க்கோடு வந்த அவரது நண்பர் புளூட்சோ போர்ச்சுக்கீசிய மொழியைப் படிப்பதிலேயே அதிக கவனம் செலுத்தியமையினால், சீகன் பால்க் தனித்தே மொழிபெயர்ப்பு வேலைகளைச் செய்ய வேண்டியதாயிருந்தது. சீகன்பால்க் இப்பெரிய பணியை ஆரம்பிப்பதற்கு முன்பு ஊக்கமாய் ஜெபித்து, உற்சாகத்தை

யும் தேவவழி நடத்துதலையும் பெற்று, 1708-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். புதிய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்பு வேலைகள் 1711-ம் ஆண்டு மார்ச் மாதம் பூர்த்தி யடைந்தன.

பல நாட்கள் உணவின்றி சிறைவாசத்தில் இருக்க வேண்டிய தருணங்களில் கூட மொழிபெயர்ப்பு வேலைகளைச் செய்தார். சாப்பாட்டிற்கு பதிலாக, எழுத காகிதம் தாருங்கள் என சிறைக்காவலர்களிடம் கேட்டு பெற்றுக் கொண்டார்.

FACSIMILE (REDUCED) OF THE TITLE-PAGE TO THE FIRST TAMIL NEW TESTAMENT, PUBLISHED AT TRANQUEBAR IN 1715

(A page from Ziegenbalg's New Testament)

சீகன்பால்கு வெளியிட்ட புதிய ஏற்பாட்டின் ஒரு பக்கம்

சீகன்பால்க்கின் மொழிபெயர்ப்பு வேலைகளைப் பற்றி கேள்விப்பட்ட இங்கிலாந்திலிருந்த கிறிஸ்து மார்க்க கல்வி அபிவிருத்திச் சங்கம், ஒரு அச்சு இயந்திரத்தை அவருக்குப் பரிசாக அனுப்பியது. 1713-ம் ஆண்டு, சீகன்பால்க் தனது புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பை அச்சிடும் பணிகளை ஆரம்பித் தார். 1714-ம் ஆண்டு, சுவிசேஷங்களும் அப்போஸ்தலர்

நடபடிகளும் வெளியிடப்பட்டன. 1715-ல், புதிய ஏற்பாட்டின் மீதமுள்ள பகுதிகள் அச்சிடப்பட்டன.

சீகன்பால்க், ஸ்கிமிட் என்பவரின் மூல மொழி வேதாகமத்தையும், ஜெரோமின் லத்தீன் மொழிபெயர்ப்பு, மார்ட்டின் லூத்தர், ஓபன்பார்க் என்போரது ஜெர்மன் மொழிபெயர்ப்புகளையும் உபயோகித்து வேதாகமத்தை தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இதற்குமுன் வேதாகமம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிராதமையினால், கிறிஸ்தவ மார்க்கக் கருத்துக்களைத் தமிழில் எவ்வாறு எழுதுவது என்பது சீகன் பால்க்கிற்கு பெரும் சிக்கலாயிருந்தது. இவ்விஷயத்தில், இயேசு சபை குருவானவர் ஹென்றிக் அடிகளார் தமிழில் வெளியிட்டிருந்த ஒருசில புத்தகங்களே சீகன் பால்க்கிற்கு பெரிதும் உதவின. அவர், அக்கால ரோம சபை மிஷனரிகளைப் போலவே கடவுளுக்கு 'சருவேசுவரன்' எனும் பதத்தை உபயோகித்தார். தமிழில் முதன் முதலில் வேதாகமத்தை மொழிபெயர்த்த சீகன்பால்க் 1719-ல் மரணமடைந்தார். அச்சமயம், அவர் பழைய ஏற்பாட்டில் யோசுவாவின் புத்தகம் வரைக்கும் மொழிபெயர்த்திருந்தார். முழுமையடைந்த பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை கண்களால் காணும் முன்னே அவர் மரணத்தை சந்திக்க நேர்ந்தது.

பெஞ்சமின் சூள்ட்ஸ்

சீகன்பால்க் மரணமடைந்த வருடம் தரங்கம்பாடிக்கு மிஷனரியாக வந்த பெஞ்சமின் சூள்ட்ஸ் என்பவர், 1723-ல் பழைய ஏற்பாட்டின் மிகுதிப் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். 1725-ல் பெஞ்சமின் சூள்ட்ஸின் மொழிபெயர்ப்பு வேலைகள் பூர்த்தியடைந்தன. இவரது முயற்சி காரணமாக 1723-ல் ஆதியாகமம் முதல் நியாயாதிபதிகள் வரையிலான புத்தகங்களும், 1724-ல் சங்கீதப் புத்தகமும், 1726-ல் ரூத் முதல் உன்னதப்பாட்டு வரையிலான (சங்கீதம் தவிர்த்து) புத்தகங்களும், 1727-ல்

ஏனையவையும் அச்சிடப்பட்டன. அதனை தொடர்ந்து 40 வருடங்களாக, தமிழ் கிறிஸ்தவர்கள் சீகன்பால்க், சூள்ட்ஸ் என்போர் மொழிபெயர்த்த இவ்வேதாகமத்தையே உபயோகித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2) பெப்ரீஷியஸ் மொழிபெயர்ப்பு

பிலிப் பெப்ரீஷியஸ்

சீகன்பால்க், சூள்ட்ஸ் மொழிபெயர்த்த வேதாகமத்தின் எழுத்து மற்றும் மொழிநடை திருப்திகரமற்றது எனும் கருத்து மக்கள் மத்தியில் அதிகரித்தமையினால், அதைத் திருத்தி மொழிபெயர்க்க வேண்டியது அவசியம் என பலர் கருதினர். இதனால் ஜோஹான் பிலிப் பெப்ரீஷியஸ் என்பவர், சீகன் பால்க்கின் வேதாகமத்தைத் திருத்தி மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பெப்ரீஷியஸ், 1740-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவிலுள்ள கடலூருக்கு மிஷனரியாகப் பணியாற்ற வந்தவராவார். 1742-ல், சென்னைக்குச் சென்ற இவர், மரிக்கும் வரை அங்கிருந்து இறைபணியாற்றினார். இவர் தன் ஊழியகாலத்தில் பலவிதமான பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்ததோடு, வயோதிப காலத்தில் பலதடவைகள் சிறைப்பட்டுமுள்ளார். மேலும், இவருடைய காலத்தில் ஏற்பட்ட பல யுத்தங்கள், பஞ்சம் என்பன இவரை வெகுவாகப் பாதித்தது. இவர் தனது துயர காலத்தில் பல கிறிஸ்தவப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் தயாரித்த 9000 தமிழ் சொற்கள் கொண்ட ஆங்கில-தமிழ் அகராதி பிரபல்யமானதொன்றாகும்.

வேதாகமத்தின் மூலமொழிகளில் பட்டம் பெற்றிருந்த பெப்ரீஷியஸ் இந்தியாவுக்கு வந்து 7 மாதங்களிலேயே தமிழ் மொழியைக் கற்றுத்தேர்ந்து தமிழில் பிரசங்கிக்கக்கூடியவரானார். பெப்ரீஷியஸ் 1752-ல் புதிய ஏற்பாட்டைத் தமிழில்

மொழிபெயர்க்கத் தொடங்கினார். இவர் முழங்காலிலிருந்து வேதாகமத்தை மொழி பெயர்த்ததாகச் சரித்திர குறிப்புகள் கூறுகிறது. சீகன்பால்க் இரு வருடங்களில் செய்த வேலையை பெப்ரீஷியஸ், இருபது வருடங்களாக மிகுந்த கவனத்துடனும் அதிக நுணுக்கமாகவும் நிதானமாகவும் செய்தார். பெப்ரீஷியஸ் தனது மொழிபெயர்ப்பைப் பலதரப்பட்ட மக்களுக்கும் வாசித்துக் காண்பித்து, அது அனைவருக்கும் விளங்குகிறதா என்பதையும், மொழிபெயர்ப்புப் பற்றிய மக்களது கருத்துக்களையும் அறிந்து கொண்டார். இவரது புதிய ஏற்பாடு 1772-ல் தரங்கம் பாடியில் இருந்த கிறிஸ்து மார்க்க அபிவிருத்திச் சங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு வேலைகள் முடிவடைந்தவுடன், பெப்ரீஷியஸ் பழைய ஏற்பாட்டையும் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்ததில் பெப்ரீஷியசுக்குக் கிடைத்த அனுபவம், பழைய ஏற்பாட்டைச் சிறப்பான முறையில் மொழிபெயர்க்க அவருக்கு உதவியது. அத்தோடு பெப்ரீஷியஸ் வேதாகமத்தின் மூல மொழிகளை நன்கறிந்திருந்தமையினால், அவரது மொழிபெயர்ப்பு மூலமொழியோடு இணங்கும் மொழிபெயர்ப்பாய் இருந்தது. அத்தோடு, பெப்ரீஷியசின் தமிழ்மொழிநடை சீகன்பால்க்கினுடையதைவிட சிறப்பானதாக இருந்தது. எனினும், சொற்களைப் பொறுத்தவரை பெப்ரீஷியஸ் சீகன் பால்க்கின் மொழிபெயர்ப்பிலுள்ள பதங்களையே உபயோகித்துள்ளார்.

சீகன்பால்க் கடவுளுக்கு உபயோகித்த சருவேசுவரன் எனும் பதத்திற்குப் பதிலாக பெப்ரீஷியஸ், “பராபரன்” எனும் பதத்தைத் தன்னுடைய மொழிபெயர்ப்பில் உபயோகித்திருந்தார். இது, அக்காலத்தில் பொதுவழக்கில் இருந்த ஒரு பதம் அல்ல. தாயுமானவர் எனும் சைவ சமயப் புலவரது பாடல்களிலேயே இப்பதம் உபயோகிக்கப்பட்டிருந்தது.

இவர், பராபரக் கண்ணிகள் என்ற 389 பாடல்களைப் பாடியவராவார். இப்பாடல்களில் இந்துசமயக் கருத்துக்கள்

அதிகம் புகுத்தப்படவில்லை. எனினும் இவை பக்தி மிகுந்த பாடல்களாகும். இப்பாடல்கள் ஒவ்வொன்றும் பராபரமே என முற்றுப்பெற்றன. இப்பதம், இந்துமதத் தெய்வமான சிவபெருமானுடன் அதிகமாகச் சேர்த்து உபயோகிக்கப்படாதமையினால், கடவுளைக் குறிக்க பொதுவான பெயராக இருக்கக்கூடியது என தரங்கம்பாடியிலிருந்த ஏர்னஸ்ட் வோல்ட்டர் எனும் மிஷனெரி கண்டு கொண்டார். இதனால், தரங்கம்பாடியிலிருந்த மிஷனரிகள் கடவுளைக் குறிக்க பராபரன் எனும் பதத்தையே உபயோகித்தனர்.

மேலும், அக்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்த ரோமன் கத்தோலிக்க மிஷனரியான கான்ஸ்டன்டைன் பெஸ்கி, சீகன் பால்க்கின் வேதாகம மொழிபெயர்ப்பு தரம் குறைவானது என ஏளனம் செய்தமையினால், தங்களை ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, தரங்கம்பாடியிலிருந்த புரட்டஸ்தாந்து சபை மிஷனரிகள், ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள் உபயோகித்த சருவேசுவரன் எனும் பதத்தை விடுத்து பராபரன் எனும் பதத்தை உபயோகிக்கத் தொடங்கியதாகவும் சொல்லப்படுகின்றது. பெப்ரீஷியசும் இப் பதத்தையே தனது மொழி பெயர்ப்பில் உபயோகித்திருந்தார்.

பெப்ரீஷியஸ் மொழிபெயர்த்த பழைய ஏற்பாடு, பகுதி பகுதியாகவே வெளியிடப்பட்டது. 1777-ல், ஆதியாகமம் முதல் நியாயாதிபதிகள் வரையிலும், 1782-ல், ரூத் முதல் யோபு வரையிலும், 1791-ல் சங்கீதங்கள் முதல் உன்னதப்பாட்டு வரையிலும் அச்சிடப்பட்டன. அவ்வருடம் பெப்ரீஷியஸ் மரணமடைந்தார். பழைய ஏற்பாட்டில் அவர் மொழிபெயர்த்திருந்த தீர்க்கதரிசனப் புத்தகங்கள் 1796-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. பெப்ரீஷியஸ் தமிழ் மொழிபெயர்ப்பு 1813-ல் வில்லியம் கேரியினாலும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. தமிழில் வெளிவந்துள்ள வேதாகமங்களில் பெப்ரீஷியஸ் மொழி பெயர்ப்பே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. பிற்காலத்தைய திருத்தப் பதிப்புகளுக்கெல்லாம் இம்மொழிபெயர்ப்பே அடிப்படையாக அமைந்தது.

பெப்ரீஷியஸ், சீகன்பால்க்கின் மொழிபெயர்ப்பில் காணப்பட்ட குறைகளையெல்லாம் நீக்கி, சிறப்பாக வேதாகமத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். பிற்காலத்தில் இம்மொழிபெயர்ப்பு சில திருத்தங்களுக்குட்பட்ட போதிலும், அதன் உள்ளடக்கம் இன்று வரை மாற்றமடையாமலேயே உள்ளது. இம்மொழிபெயர்ப்பில் வடமொழிச் சொற்கள் அதிகம் என்பதே இதற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஒரே ஒரு குற்றச்சாட்டாகும். இதைத்தவிர, இது "பொன்மொழிபெயர்ப்பு" என பலராலும் புகழப்பட்டுள்ளது. பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பு இன்று உபயோகத்தில் இல்லாதபோதிலும், இதற்குப் பின்னர் வெளிவந்த மொழிபெயர்ப்புகளில் புகுந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. பிற்கால மொழிபெயர்ப்புகள் பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பின் திருத்தப்பதிப்புகளாகவே இருக்கின்றன. 19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தென்னிந்தியாவில் பணியாற்றிய மிஷனெரிச் சங்கங்கள் ஒவ்வொன்றும், பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பைச் சிறிது திருத்தி, மொழிபெயர்த்து உபயோகித்தன.

3) ரேனியஸ் மொழிபெயர்ப்பு

சார்லஸ் ரேனியஸ்

1820-ம் ஆண்டு சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட வேதாகமச்சங்கமானது, பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பைத் திருத்தி மொழிபெயர்க்கத்தீர்மானித்தது. பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பு வெளிவந்து 50 வருடங்களாகி விட்டமையினால் அதன் மொழிநடை மாற்றப்பட வேண்டியதன் அவசியத்தை சென்னை தமிழ் வேதாகமச் சங்கம் உணர்ந்தமையே இதற்கான காரணமாகும். மேலும், அக்காலத்தில் தமிழ்நாட்டில் பணியாற்றிய மிஷனெரி சங்கங்கள் ஒவ்வொன்றும், தத்தமது விருப்பப்படி பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பைத் திருத்திவந்தமையினால், சகல கிறிஸ்தவர்களும் உபயோகிக்கக் கூடிய தனி ஒரு மொழிபெயர்ப்பு இருக்க வேண்டும் என எண்ணிய

சென்னை வேதாகமச் சங்கம், அத்தகு ஒரு மொழிபெயர்ப்பைத் தயாரிக்கும் பொறுப்பை சார்லஸ் ரேனியஸ் என்பவரிடம் ஒப்படைத்தது.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த சார்லஸ் ரேனியஸ், 1814-ம் ஆண்டு ஜுலை மாதம் 4-ம் தேதி இந்தியாவுக்கு வந்து, மிஷனெரி சங்கத்தில் சேர்ந்து பணிபுரியத் தொடங்கினார். இவர் தமிழ் மொழியைத் திறம்பட கற்க விரும்பியவராய், திருப்பாற் கடல நாதன் கவிராயர் எனும் கல்விமானிடம் 14 வருடங்களாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். தமிழ் மொழியில் சிறப்பான முறையில் பிரசங்கிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்த ரேனியஸ், பல தமிழ் நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் மொழியில் முதன் முதலில் பூமி சாஸ்திரப் பாடப்புத்தகம் இவராலேயே எழுதப்பட்டது. இவர் தமிழ் இலக்கணத்தினை முறைப்படுத்தி நூல் எழுதியுள்ளார்.

மேலும், வசனத்தமிழை முதன் முதலாகச் சந்தி பிரித்து எளிமையாக்கியவரும் இவரேயாவார். சுவிசேஷம் அறிவிப்பதிலும், பாடசாலைகளையும் சபைகளையும் ஸ்தாபிக்கும் முயற்சியிலும் இவரது பணி மிகவும் பாராட்டத்தக்கது. இவர் அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் 300 சபைகளுக்கு மேல் ஸ்தாபித்துள்ளார். தமிழகத்தின் வனாந்திரம் என அழைக்கப்படும் தேரி மணலில் சுற்றியலைந்து கிராமம் கிராமமாய், அதேநேரம் கிரமமாய் ஊழியம் செய்திருக்கிறார். இவர் கால் படாத கிராமங்களே இல்லை என்று கூறுமளவிற்கு இவரது பணி அமைந்திருந்தது.

இவர் பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பின் மொழிநடையைத் திருத்தினார். இவரால் திருத்தப்பட்ட சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் நடபடிகளும் 1827-லும், புதிய ஏற்பாடு முழுவதும் 1833-லும் வெளியிடப்பட்டது. 1840-ல் இவரது புதிய ஏற்பாடும் பெப்ரீஷியசின் பழைய ஏற்பாடும் ஒன்றாக வெளியிடப்பட்டது. பெப்ரீஷியசைப் போலவே ரேனியசும் கடவுளுக்குப் பராபரன் எனும் பதத்தை உபயோகித்துள்ள போதிலும், அவர்

சில இடங்களில், 'தேவன்' எனும் பதத்தையும் குறிப்பிட்டுள் ளார். பெப்ரீஷியசின் மொழி பெயர்ப்பிலிருந்த சில இலக்கணப் பிழைகளையும் ரேனியஸ் திருத்தியுள்ளார்.


THE

HOLY BIBLE,

CONTAINING THE

OLD AND NEW TESTAMENTS.

IN THE TAMIL LANGUAGE.

சத்தியவேதம்.

பழையஏற்பாடும் புதியஏற்பாடும்

MADRAS:

1840.

1840-ம் ஆண்டு பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடு இணைந்து வெளியிடப்பட்ட சத்திய வேதம்

குறிப்பாக, அஃறிணைப் பன்மை எழுவாய்க்கு, ஒருமைப் பயனிலையே பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பில் உபயோகிக்கப் பட்டிருந்தது. இதற்குக் காரணம், சாதாரண பேச்சு வழக்கில் இவ்விதம் பன்மை எழுவாய், ஒருமைப் பயனிலையுடன் உபயோகிக்கப்பட்டமையேயாகும். உதாரணமாக, விதைப்பவ னுடைய உவமையில் விதைகள் விழுந்தது, பறவைகள் பட்சித்தது, அவை முளைத்தது, என்றே பெப்ரீஷியசின் மொழி பெயர்ப்பில் எழுதப்பட்டிருந்தது. ரேனியஸ் இவ்வாக்கியத்தை இலக்கண முறைப்படி, விதைகள் விழுந்தன, பறவைகள் பட்சித்தன, அவை முளைத்தன என திருத்தினார். பெப்ரீஷி யசின் மொழிபெயர்ப்பில் இதைப் போன்ற பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பிலிருந்த சில வார்த்தைகளையும் ரேனியஸ் மாற்றியுள்ளார். உதாரணமாக, இந்த லோகம் என்பதை “இவ்வுலகம்” என்றும், வெளிச்சம் என்பதை “ஒளி” என்றும், வானராச்சியம் என்பதை “பரலோக ராச்சியம்” என்றும், பாஷா என்பதை “பஸ்கா” என்றும், சிநேகம் என்பதை “அன்பு” என்றும் ரேனியஸ் மாற்றினார்.



THE POCKET TAMIL TESTAMENT.

உலக இரட்சகராகிய

இயேசுக்கிறிஸ்துநாதர் அருளிச்செய்த

புதிய ஏற்பாடு.

இது

மூலவாக்கியம் இரேனியுசையரால்

கிரேக்க பாஷையிலிருந்து

தமிழிலே திருப்பப்பட்டும்,

சென்னைப்பட்டணத்திலுள்ள

சத்தியவேத சங்கத்தாரால் பரிசோதித்து

இங்கிலீஷ் ஒத்துவாக்கிய பைபிலின்படி

ஏற்படுத்தப்பட்டுமிருக்கிறது.

MADRAS:
PUBLISHED BY THE MADRAS AUXILIARY BIBLE SOCIETY.
Printed at the American Mission Press.

ரேனியஸ் ஐயரால் கிரேக்க மொழியிலிருந்து தமிழில் திருப்பப்பட்ட சிறிய அளவிளான புதிய ஏற்பாட்டின் அட்டைப்பகுதி

மேலும் 1 கொரி.13:1-ல் ஓசை தரும் கிண்கிணி என்றிருந்ததை “ஓசையிடுகிற கைத்தாளம்” என்றும், அப்போ.1:3-ல் உயிரோடிருக்கிறவராகப் பிரசன்னப்படுத்தினார் என்பதை, “உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்” என்றும், 2 தீமோ.4:7-ல், விசுவாசத்தைக் கைக்கொண்டேன் என்றிருந்ததை “விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்” என்றும், எபி.12:1-ல், சாட்சிகளின் இத்தனை பெரிய மேகம் என்றிருந்ததை “மேகம் போல் இத்தனை திரளான சாட்சிகள்” என்றும் திருத்தினார். இதிலிருந்து ரேனியசின் திருத்தங்கள் எத்தகையவை என்பதை அறியக் கூடியதாயுள்ளது.

இதைப்போன்று, பெப்ரீஷியசின் மொழி நடையில் ரேனியஸ் பல திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளார். இவர் பெப்ரீஷியசின் பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் முதல் நியாயா திபதிகள் வரையிலான புத்தகங்களையும், சங்கீதங்கள், ஏசாயா, தானியேல் எனும் புத்தகங்களையும் திருத்தியுள்ளார். ரேனியஸ் மொழிபெயர்ப்பு இலக்கணத்தில் ஆர்வமிக்கவர்க ளாய் இருந்தவர்களினாலேயே பாராட்டப்பட்டது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இவருடைய மொழிபெயர்ப்பை ஏற்றுக்கொள்ள வில்லை.

4) பேர்சிவெல் மொழிபெயர்ப்பு:


பீட்டர் பேர்சிவெல்

ரேனியசினுடைய மொழிபெயர்ப்பு வெளிவந்த பின்னர், சில சபைகள் அம் மொழிபெயர்ப்பின் வசனநடை சிறந்ததெ னக் கருதி அதை உபயோகிக்கத் தொட ங்கினாலும் பெரும்பாலான சபைகள், அது மூலமொழியை விட்டு விலகிச் சென்றுள்ளது எனக்கூறி அந்த மொழி பெயர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அச் சபைகள், பெப்ரீஷியசின் மொழிபெயர்ப் பையே தொடர்ந்தும் உபயோகித்து வந்த போதிலும், அதன் வசனநடை அவர்களுக் கு அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால், இவ்விரு மொழிபெயர்ப்புகளிலும் உள்ள குறைகள் நீக்கப்பட்ட தாகவும், அதேசமயம் இரண்டினதும் சிறப்பம்சங்கள் ஒருங்கே காணப்படுவதுமான ஒரு புதிய மொழிபெயர்ப்பு தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் அனைத்து சபையினராலும் உணரப் பட்டது.

அச்சமயம், இத்தகைய ஒரு மொழிபெயர்ப்பைத் தாம் செய்து தருவதாக வட இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய மிஷனரிகள் சென்னை வேதாகமச் சங்கத்துக்குத் தெரிவித்தனர். இதனால் யாழ்ப்பாணத்தில் வேதாகம மொழி

பெயர்ப்புப் பணிகளைச் செய்வதற்கு ஒரு குழு உருவாக்கப் பட்டது. பீட்டர் பேர்சிவெல் எனும் மிஷனெரி இக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஆதியாகமம்.

The 1850 Percival Bible

பீட்டர் பேர்சிவெல் மெதடிஸ்ட் மிஷனைச் சேர்ந்தவரா வார். 1826-ல் யாழ்ப்பாணத்துக்கு வந்த இவர், தயாரித்த ஆங்கில தமிழ் அகராதி மிகவும் பிரபல்யமானது. யாழ்ப்பாண மொழிபெயர்ப்புக் குபவில் மெதடிஸ்ட் மற்றும் அமெரிக்கன் மிஷன்களைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகித்தனர். இவர்களுக்கு வேதாகம மொழிபெயர்ப்பில் உதவி செய்தவர் தமிழ்ப்புலவர் ஆறுமுக நாவலராவார். உண்மையில், பேர்சிவெல் மொழிபெய ர்ப்பின் தமிழ் நடை ஆறுமுக நாவலருடையதாகவே இருந்தது. இம்மொழிபெயர்ப்பின் வேலைகள் 1846-ல் ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்திலிருந்த மிஷனரிகள் தமது மொழிபெயர் ப்பின் பிரதிகளை சென்னைக்கு அனுப்பியபோது, அது மூல

மொழியின் சரியான மொழிபெயர்ப்பு அல்ல என்றும், யாழ்ப்பாணத் தமிழ் இந்தியாவுக்கு ஒத்து வராது என்றும் சென்னை வேதாகமச் சங்கம் தெரிவித்தது. எனினும், இக் குற்றச்சாட்டுகளை யாழ்ப்பாணத்திலிருந்த மிஷனரிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆறுமுக நாவலருடைய தமிழ்நடை உயர்வானதாக இருப்பதினாலேயே சென்னை வேதாகமச் சங்கம் இவ்வாறு கூறுவதாக அவர்கள் வாதிட்டனர். 1848-ல் யாழ்ப்பாண வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு வேலைகள் பூர்த்தியடைந்தன. இம்மொழிபெயர்ப்பிலேயே கடவுளுக்குத் "தேவன்" எனும் பதம் அறிமுகப்படுத்தப்பட்டது. ரேனியஸ் இப்பதத்தை ஒரு சில இடங்களில் பயன்படுத்தியிருந்தபோதிலும், அவர் பராபரன் எனக் குறிப்பிட்டிருந்த இடங்களிலெல்லாம் பேர்சிவெல் குழுவினர் தேவன் எனும் பதத்தை உபயோகித்தனர். தேவன் எனும் பதம் அக்காலத்தில் பன்மையில் உள்ள தெய்வங்களைக் குறிக்கும் பதமாயிருந்தது.

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு சிறப்பான மொழிநடையில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த போதிலும், தென்னிந்தியாவிலிருந்த மிஷனெரிகள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அதில் சமஸ்கிருத வார்த்தைகள் அதிகம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்றும், அது தனி ஒரு மனிதனுடைய மொழி பெயர்ப்புப்போலத் தென்படுகிறது என்றும் குற்றஞ்சாட்டினர். இம்மொழிபெயர்ப்பு, சாதாரண பாமர மக்களால் விளங்கிக் கொள்ளப்பட முடியாத மொழிநடையில் உள்ளதென்றும் கருதப்பட்டது. இதனால் சென்னை வேதாகமச்சங்கம் இம்மொழிபெயர்ப்பை நிராகரித்து விட்டது.

5) ஹென்றி பவர் மொழிபெயர்ப்பு

தமிழ் கிறிஸ்தவ வேதாகம மொழிபெயர்ப்புகளில் சீகன் பால்க் மொழிபெயர்ப்பு, பப்ரிசியுசின் மொழிபெயர்ப்பு, இரேனியுஸ் மொழிபெயர்ப்பு, பெர்சிவல் மொழிபெயர்ப்பு" என பல

ஹென்றி பவர்

இருக்கின்றன. சீகன்பால்க் மொழிபெயர்ப்பு வழக்கொழிந்து மறக்கப்பட்டுப் போனதாலும், பப்ரிசியுசின் மொழிபெயர்ப்பிலும், இரேனியுஸ் மொழிபெயர்ப்பிலும் குறைபாடுகள் இருந்த காரணத்தாலும், சென்னை வேதாகமச்சங்கம், எல்லா சபைகளும் ஏற்றுக் கொள்ளும் விதமாக ஒரு புதிய தமிழ் மொழிபெயர்ப்பை உருவாக்கும் எண்ணத்தில், ஹென்றி பவர் ஐயர் என்பவரைத் தலைமை மொழி பெயர்ப்பாளராகவும், அவருக்கு உதவியாக மற்ற சபைகளைச் சேர்ந்த ஏழு பேரைக் கொண்ட ஒரு குழுவையும் நியமித்தது. இந்தக் குழுவில், டாக்டர் கால்டுவெல், சார்ஜென்ட் ஐயர், திரேசி ஐயர், திரு. முத்தையா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இன்று தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் வேதாகமம் ஹென்றி பவரின் மொழிபெயர்ப்பு தான். இது "பவர் மொழிபெயர்ப்பு, ஐக்கிய மொழி பெயர்ப்பு" என்று அழைக்கப்படுகிறது.

சகல சபைகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமான ஒரு புதிய மொழிபெயர்ப்பைத் தயாரிக்க வேண்டுமென சென்னை வேதாகமச் சங்கம் 1853-ல் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அக்காலத்தில், அதுவரை மொழிபெயர்க்கப்பட்டிருந்த 4 மொழி பெயர்ப்புகள் மக்கள் மத்தியில் இருந்தன. ஒவ்வொரு மிஷன் சங்கமும் தமக்கு விருப்பமான மொழிபெயர்ப்பை உபயோகித்து வந்தது. அந்நிலை மாறி, அனைவரும் ஒரு மொழிபெயர்ப்பை உபயோகிக்க வேண்டும் என்பதே வேதாகமச் சங்கத்தினது தீர்மானத்திற்கான காரணமாயிருந்தது.

இதனால், 1857-ல், ஹென்றி பவர் என்பவருடைய தலைமையில் ஒரு புதிய வேதாகம மொழிபெயர்ப்புக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவில், தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றும் அனைத்து மிஷனெரி சங்கங்களினது பிரதிநிதிகளும் இருக்க வேண்டும் என கூறப்பட்டபோதிலும்,

தமது மொழிபெயர்ப்பு நிராகரிக்கப்பட்டமையினால், யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த மிஷனரிகள் இம்மொழி பெயர்ப்புக்குழுவில் இருக்க விரும்பவில்லை.

புதிய வேதாகம மொழிபெயர்ப்புக் குழுவுக்குத் தலைவராக இருந்த ஹென்றி பவர் என்பவர், 1833ஆம் ஆண்டிலிருந்து லண்டன் மிஷனரி சங்கத்தின் சார்பில் இந்தியாவில் பணியாற்றியவராவார். இவர், கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ், கன்னடம், இந்துஸ்தானி எனும் மொழிகளை அறிந்திருந்தார். இவர் தமிழில் சில புத்தகங்களையும் எழுதியுள்ளார். இவர் 1858-ம் ஆண்டு வேதாகம மொழிபெயர்ப்பு வேலைகளை ஆரம்பித்தார். இவரது மொழி பெயர்ப்புக் குழுவில் இருந்தவர்கள், மூலமொழி வேதாகமங்களையும், ஏற்கனவே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த வேதாகமங்களையும் ஆராய்ந்து பார்த்து ஒரு புதிய மொழி பெயர்ப்பைத் தயாரித்தனர். இதன் பிரதிகள் பலரிடம் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டு, அவர்களது விமர்சனங்களைக் கருத்திற்கொண்டு தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும், இம் மொழிபெயர்ப்பு 1611-ம் ஆண்டு இங்கிலாந்தில் வெளிவந்த ஜேம்ஸ் அரசனது பதிப்பு வேதாகமத்தையே அடிப்படையாய்க் கொண்டிருந்தது.

ஹென்றி பவரின் குழுவினரது மொழி பெயர்ப்புப்பணிகளின் காரணமாக 1863-ல் புதிய ஏற்பாடும் 1868-ல் பழைய ஏற்பாடும் வெளிவந்தது. ஆரம்பத்தில், யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்கள் இப்புதிய மொழிபெயர்ப்பை ஏற்கவில்லை. அதேசமயம் அவர்கள், தமது மொழிபெயர்ப்பு இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் கூறவில்லை.

ஹென்றி பவரின் குழுவினரது மொழிபெயர்ப்புப் பணிகளின் காரணமாக 1863-ல் புதிய ஏற்பாடும் 1868-ல் பழைய ஏற்பாடும் வெளிவந்தது. ஆரம்பத்தில், யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்கள் இப்புதிய மொழிபெயர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதே சமயம் அவர்கள், தமது மொழிபெயர்ப்பு இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறவில்லை.

மாறாக, புதிய மொழிபெயர்ப்பு இன்னும் திருத்தப்பட வேண்டும் என்று தெரிவித்ததோடு, அதற்கான காரணங்களை யும் சுட்டிக்காட்டினர். அதேசமயம், புதிய மொழிபெயர்ப்பு மூலமொழியைத் தழுவியதாயிருக்கையில் தமது மொழிபெயர் ப்பு தமிழ் நடையில் சிறந்ததாயிருக்கின்றமையினால், இவ்விர ண்டையும் ஒருங்கே கொண்ட ஒரு மொழிபெயர்ப்பைத் தயாரிக்க யாழ்ப்பாணத்திலிருந்த மிஷனரிகள் தீர்மானித்தனர். எனினும், அச்சமயம் இன்னுமொரு புதிய மொழிபெயர்ப்பைச் செய்ய சென்னை வேதாகமச் சங்கம் விரும்பாததினால், யாழ்ப்பாண மிஷனெரிகளின் ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு ஹென் றி பவரின் மொழிபெயர்ப்பைத் திருத்த தீர்மானித்தது. மூலமொ ழியில் உள்ள ஒரு வார்த்தையைப் பலவாறு தமிழில் எழுதக் கூடிய தாயிருப்பினும் அழகிய சொற்களை உபயோகிப்பதே நல்லது என யாழ்ப்பாணத்திலிருந்த மிஷனரிகள் கூறினர்.

1869-ல் இரு நாட்டினது மிஷனரிகளும் ஹென்றி பவரின் வீட்டில் கூடி அவரது மொழிபெயர்ப்பைத் திருத்தினர். மத்தேயு சுவிசேஷத்தில் மட்டும் 468 திருத்தங்கள் செய்யப் பட்டன. இதுபோல ஏனைய புத்தகங்களிலும் அநேக திருத்தங் கள் செய்யப்பட்டன. அதுவரை காலமும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பெப்ரீஷியசின் மொழி பெயர்ப்பையே உபயோ கித்து வந்தமையினால், ஹென்றி பவரின் திருத்தப் பதிப்பு பெப்ரீஷியசினுடைய மொழி நடையையே பின்பற்றியது. எனினும், தேவை ஏற்படும்போது ரேனியஸ் மற்றும் பேர்சிவெல் என்போருடைய மொழிபெயர்ப்புகளில் இருந்தும் சொற்கள் எடுக்கப்பட்டன.

ஹென்றி பவரின் திருத்தப்பட்ட வேதாகமம் 1871-ல் சென்னையில் அச்சிடப்பட்டது. லூத்தரன் சபையைத் தவிர மற்ற அனைத்து சபைகளையும் சேர்ந்தவர்கள் இத்திருத்த மொழி பெயர்ப்புக் குழுவில் இருந்தமையினால், திருத்த

மொழிபெயர்ப்பு, ஐக்கியப் பதிப்பு அல்லது ஒன்றிணைப்புப் பதிப்பு என அழைக்கப்படுகின்றது. லூத்தரன் சபையினர் மட்டும், பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பை தொடர்ந்து உபயோகித்து வந்தனர்.

ஹென்றி பவரின் தலைமையின் கீழ் மொழிபெயர்க்கப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்த மிஷனெரிகளின் ஆலோசனையின்படி திருத்தப்பட்ட ஐக்கியப் பதிப்பு வேதாகமமே இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் உபயோகிக்கும் வேதாகமமாகும். வேதாகமம் முதன் முதலில் 1714-ல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. எனினும், நாம் இன்று 1871-ல் வெளிவந்த திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பையே உபயோகிப்பது அநேக கிறிஸ்தவர்கள் அறியாத ஒரு உண்மையாகும்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள், தாம் உபயோகிக்கும் வேதாகமமே முதன் முதலில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதென்றும், இதை எவ்வகையிலும் திருத்த முயல்வது தேவனுடைய வார்த்தையை மாற்றுவது எனும் கருத்துடையவர்களாக இருக்கின்றனர். ஆயினும், நாம் உபயோகிக்கும் வேதாகமம் பல தடவைகள் திருப்பி மொழிபெயர்க்கப்பட்டும் திருத்தப்பட்டும் இருப்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். மேலும் இத்தகைய திருத்தங்களுக்கு காரணம் என்ன என்பதையும் நாம் புரிந்திருக்க வேண்டும்.

இங்கே திருத்தம் என்பது வேதாகம உபதேசத்திலோ, மூல வேதாகமம் கூறும் கருத்திலோ ஏற்படவில்லை. மாறாக திருத்தம் என்பது தமிழ் இலக்கண பிழைகளிலும், மொழிநடையிலும், மொழிபெயர்ப்பிலும் மட்டுமே நிகழ்ந்துள்ளது என்பதை 100% உறுதியிட்டு நம்மால் கூற முடியும்.

ஹென்றி பவரின் மொழிபெயர்ப்பிலும், அதைத் திருத்தும் பணியிலும் எல்லா மிஷனெரி சங்கங்களையும் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருந்தமையினால், திருத்த மொழிபெயர்ப்பு வெளிவந்த பின்னர் எல்லோரும் அதையே உபயோகிக்கத் தொடங்கினர்.

மேலும் வேதாகம மொழிபெயர்ப்பு பற்றி அக்காலத்தில் முரண் பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களை இம் மொழி பெயர்ப்பு திருப்திப்படுத்துவதாய் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, இம்மொழிபெயர்ப்புக் குழுவுக்குத் தலைமை தாங்கிய ஹென்றி பவர், தமது மொழிபெயர்ப்பு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் மொழிபெயர்ப்பாக இருப்பதற்காக, மொழிபெய ர்ப்பு பற்றி எவர் எதைச்சொன்னாலும் அதையெல்லாம் கவனித் துக் கேட்டு எல்லோரிடமும் ஆலோசனைகளைப் பெற்று வேதா கமத்தை மொழி பெயர்த்துள்ளார்.

முதலில், தான் மொழிபெயர்த்த வேதாகமத்தைத் திரு த்த வேண்டும் என யாழ்ப்பாணத்திலிருந்த மிஷனெரிகள் கூறிய போது, அவர்களது ஆலோசனையின்படி தனது மொழிபெயர்ப் பைத் திருத்தினார். இம்மொழிபெயர்ப்பு வெளிவந்த பின்னர் வேதாகமச் சங்கம் வேறு எந்த ஒரு மொழிபெயர்ப்பையும் அச்சிடாததினால், நாளடைவில் இதுமட்டுமே தமிழ் மொழியில் இருக்கும் வேதாகமம் எனும் கருத்து தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்பட்டுவிட்டது.

6) லார்சன் மொழிபெயர்ப்பு

ஹென்றி பவரின் திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பு வெளி வந்து 50 வருடங்களாவதற்குள் அதை மறுபடியும் திருத்தி மொழிபெயர்க்க வேண்டும் எனும் எண்ணம் ஏற்படத் தொடங் கியது. இதற்கு முக்கிய காரணம், அதுவரை காலமும் மூலப் பிரதியாக உபயோகிக்கப்பட்டுவந்த வேதப் பிரதிகளை விட பழைமையானதும் நம்பகமானதுமான இரு வேதப்பிரதிகள் கண்டுபிடிக்கப்பட்டமையேயாகும். கி.பி.4-ம் நூற்றாண்டில் வல்கேட் என அழைக்கப்படும் ஜெரோமின் லத்தீன் மொழிபெ யர்ப்பு வேதாகமம் வெளிவந்தபின், அதையே ரோம சபை உபயோகித்து வந்தது. கி.பி. 1453-ல் கான்ஸ்டன்டிநோபிள் எனும் நகரைத் துருக்கியர்கள் கைப்பற்றியபோது, கிரேக்க மொழியை அறிந்திருந்த பல பண்டிதர்கள் ஐரோப்பாவில் குடி யேறத் தொடங்கினர்.

இதனால் 15-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கிரேக்க மொழியறிவு அதிகரித்தபோது, லத்தீன் வேதாகமம் மொழி பெயர்க்கப்படுவதற்குமுன் உபயோகத்தில் இருந்த பல கிரேக்க புதிய ஏற்பாட்டுப் பிரதிகளையும் மக்கள் உபயோகிக் கத் தொடங்கினர். எனினும், இவற்றில் பல வித்தியாசமான வாக்கிய அமைப்புகள் இருந்தமையினால், இரஸ்மஸ் என்பவர், தனக்கு கிடைத்த 20 கிரேக்க வேதப்பிரதிகளை அடிப்படை யாய்க் கொண்டு ஒரு புதிய கிரேக்க வேதப்பிரதியைத் தயாரித் தார். இதுவே, அதன்பின் அங்கீகரிக்கப்பட்ட மூலப்பிரதியாக எல்லா மொழி பெயர்ப்பாளர்களினாலும் கருதப்பட்டது. இதிலி ருந்தே 250 வருடங்களாக ஆங்கில உலகை ஆக்கிரமித்திருந்த ஜேம்ஸ் அரசனின் பதிப்பு வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டி ருந்தது. ஹென்றி பவரின் திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பு இவ் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவிய மொழிபெயர்ப்பாகவே இருந்தது.

ஹென்றி பவரின் திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பு வெளி வந்தபின், வேதாகமத்தின் இரு முக்கியமான கிரேக்க மூலப் பிரதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று 1859-ல் சீனாய் மலையிலுள்ள புனித கத்தரின் துறவுமடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இது கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவடியாகும். அதேசமயம் வத்திக்கான் நூலகத்திலிருந்த வேத ச்சுவடியும் கி.பி. நான்காம் நூற்றாண்டில் பிரதி பண்ணப்பட்ட தாகும். இச்சுவடி 15-ம் நூற்றாண்டிலிருந்தே அறியப்பட்டிருந் தாலும், 1843-லேயே இதை உபயோகிப்பதற்கு ரோம சபை அனுமதியளித்தது. இவ்விரு வேதச் சுவடிகளையும் ஆராய்ச்சி செய்த பண்டிதர்கள், அதுவரை காலமும் மூலப்பிரதியாக உபயோகிக்கப்பட்டு வந்த அங்கீகரிக்கப்பட்ட வேதப்பிரதியை விட, இவையிரண்டும் சிறப்பானதாகவும் நம்பகமானதாகவும் இருப்பதைக் கண்டுகொண்டனர்.

இதன்பின்னர், 16-ம் நூற்றாண்டில் இரஸ்மஸ் தயாரித்த மூலப்பிரதியை ஆராய்ச்சியாளர்கள் நம்பகமானதாகக் கருதவி ல்லை. இதிலிருந்து, அதுவரை காலமும் மொழிபெயர்க்கப்பட்ட

வேதாகமங்கள் எல்லாம் பிழையானவை என நாம் எண்ணலாகாது. கிரேக்க மொழி கையெழுத்துப் பிரதிகளில் சில வித்தியாசமான வாக்கிய அமைப்புகள் ஏற்பட்டிருந்தன. இது பிரதி பண்ணியவர்களினால் ஏற்பட்ட தவறாகும். எனவே, கிடைக்கக்கூடிய எல்லா பிரதிகளையும் ஆராய்ந்து பார்த்து எது நம்பகமானது என்பதைக் கண்டுகொள்ள வேண்டும்.

19-ம் நூற்றாண்டில், சீனாய் மற்றும் வத்திக்கான் சுவடிகளே நம்பகமானவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அதற்கும் முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த கிரேக்க பிரதியை அடிப்படையாய்க் கொண்டு மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமங்கள் திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது. ஹென்றி பவரின் திருத்தப்பட்ட வேதாகமம் வெளிவந்த காலத்தில், 1611-ம் ஆண்டு வெளிவந்த ஜேம்ஸ் அரசனின் பதிப்பு வேதாகமம் ஆங்கில உலகில் தனது முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. இதனால் அதை அடிப்படையாய்க்கொண்டு மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் வேதாகமம் திருத்தப்பட வேண்டும் எனும் கருத்து உருவானது.

ஹென்றி பவரின் மொழிபெயர்ப்பில் சில பிழைகள் இருப்பதனால் அது திருத்தப்படவேண்டும் என சென்னைக் கிறிஸ்தவப் பிரதிநிதிச் சங்கம் 1915-ல் தெரிவித்தது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட கிரேக்க வேதப் பிரதியை 50 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்த வேதப்பண்டிதர்கள், அதைவிட சீனாய் மற்றும் வத்திக்கான் சுவடிகளே நம்பகமானவை என்பதை அறியத்தந்தமையினால், தற்சமயம் பல கையெழுத்துப் பிரதிகளை ஆராய்ந்த நெஸ்லே என்பவர் தயாரித்த கிரேக்கப் பிரதியை அடிப்படையாய்க் கொண்டதாக தமிழ் மொழிபெயர்ப்பு இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. அத்தோடு, வேதாகமத்தில் பவுல் போன்றவர்களை அவன் என்று மரியாதைக் குறைவாக அழைக்கக்கூடாது என்றும் இச்சங்கம் தெரிவித்தது. இக்கருத்துக்கள் அனைத்தும் இச்சங்கத்தினால் சென்னை வேதாகமச் சங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

எல்.பி.லார்சன்

கிறிஸ்தவப் பிரதிநிதிச்சங்கத்தின் கருத்துக்களை ஆராய் ந்த சென்னை வேதாகமச் சங்கம், லூத்தரன் சபை ஹென்றி பவரின் திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பை ஏற்றுக்கொள்ளாதமை யினால், அவர்களும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேதாகமத் தைத் திருத்த வேண்டுமென 1917-ல் தீர்மானித்து அதற் கென ஒரு குழுவை நியமித்தது. 1920-ல், புதிய ஏற்பாட்டில் திருத்தப்படவேண்டிய பகுதிகள் எவை என்பதை இக்குழு வேதாகமச் சங்கத்திற்கு எடுத்துக்காட்டியது. எல்.பி. லார்சன் என்பவர் இக்குழுவுக்குத் தலைவராக இருந்தார். டென்மார்க் தேசத்தைச் சேர்ந்த இவர், 1889-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து, மாணவர்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். 1910-ல் பெங்களூரில் புதிதாக ஒரு இறையியல் கல்லூரி ஆரம் பிக்கப்பட்டபோது எல்.பி.லார்சன் அதன் தலைவராக நியமிக்கப் பட்டார்.

தமிழ் மொழியில் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்த இவர், 1924-ல் வேதாகம மொழிபெயர்ப்பு வேலைகளை ஆரம்பித்தார். 1925-ம் ஆண்டு மத்தேயு சுவிசேஷமும் பின்னர் மாற்கு, யோவா ன் சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் நடபடிகளும் வெளியிடப் பட்டன.

திருத்தப்பட்ட இப்பதிப்பு சிலருக்கு அதிருப்தியை ஏற்ப டுத்தியது. இம்மொழிபெயர்ப்பில் தேவன் என்பதற்குப் பதிலாகக் கடவுள் எனும் வார்த்தையை லார்சன் உபயோகித்திருந்தார். லூத்தரன் சபை தேவன் எனும் பதத்தை விரும்பாதமையினால் கடவுள் எனும் பதம் அவர்களைத் திருப்திப்படுத்தும் என வேதாகமச் சங்கம் எண்ணியது. அதேசமயம், தேவன் என்ற சொல் மூலப்பதத்தின் சரியான மொழிபெயர்ப்பல்ல என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது. 1927-ம் ஆண்டு, லார்சன் குழுவினரால் திருத்தப்பட்ட புதிய ஏற்பாடு வெளிவந்தது.

1927-ம் ஆண்டு, லார்சன் குழுவினரால் திருத்தப்பட்ட புதிய ஏற்பாடு வெளிவந்தது. லார்சனின் மொழிபெயர்ப்பு மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெறவில்லை. இதற்கு முக்கிய காரணம், இம்மொழிபெயர்ப்புக்கெதிராக அந்நாட்களில் மாதம் தோறும் வெளியிடப்பட்ட "நல்ல சமாரியன்" எனும் பத்திரிகை யில் வெளிவந்த கட்டுரைகளேயாகும். இக்கட்டுரைகளில் சுட்டிக்காட்டப்பட்ட நியாயங்களைத் தொகுத்து, "புதிய தமிழ் மொழி பெயர்ப்பு அச்சிடாமலும் அதை உபயோகிக்காமலும் விடுவதற்கு ஒரு மனு" எனும் தலைப்பில் ஒரு ஆங்கில நூல் 1939-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதில், லார்சன் குழுவினர் வேதாகமத்தின் பல வசனங்களை மாற்றியுள்ளனர்; அதில் பல வசனங்கள் விடப்பட்டுள்ளதோடு பல புதிய வசனங்கள் புகுத்தப்பட்டுள்ளன என்றும், மொழிபெயர்ப்புக் குழுவில் கிறிஸ் துவின் தேவத்துவத்தை மறுதலித்த ஒருவர் இருக்கிறார் என்றும், இது 1611-ல் வெளிவந்த ஜேம்ஸ் அரசனின் பதிப்பு வேதாகமத்தைத் தழுவி மொழிபெயர்க்கப்படவில்லை என்றும், புதிய மொழிபெயர்ப்பில் இந்தியாவில் உபயோகிக்கப்படாத யாழ்ப்பாணத் தமிழ் கலந்திருக்கிறது என்றும், அம்மொழிபெயர் ப்புக்கு அடிப்படையாய் இருந்த சீனாய் மற்றும் வத்திக்கான் சுவடிகள் ஆதாரமற்றவை என்றும் சொல்லப்பட்டிருந்தது. மக்கள், லார்சன் மொழிபெயர்ப்பை வாசித்திராதபடியால், நல்ல சமாரியன் சுட்டிக்காட்டியவை உண்மை என நம்பினர். எனினும், லார்சன் மொழிபெயர்ப்பில் வாக்கிய அமைப்புகளே மாற்றப்பட் டிருக்கின்றன. அவை, வசனத்தின் கருத்தை மாற்றவில்லை என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும்.

லார்சன் குழுவினரது மொழி பெயர்ப்பில் யாழ்ப்பாணத் தமிழ் உள்ளது எனும் குற்றச்சாட்டு அர்த்தமற்றது. ஹென்றி பவரின் மொழிபெயர்ப்பு, யாழ்ப்பாணத்திலிருந்த மிஷனெரிகளி ன் ஆலோசனைப்படி திருத்தப்பட்டபோதே யாழ்ப்பாணத் தமிழ், வேதாகமத்தில் புகுந்தது. ஆனால், லார்சன் மொழிபெயர்ப்பில் யாழ்ப்பாணத் தமிழ் புகுவதற்கு இடமிருக்கவில்லை. அவரது மொழிபெயர்ப்பு தமக்குப் பழக்கமற்ற நல்ல தமிழ் நடையாய் இருந்தமையே, அது யாழ்ப்பாணத் தமிழ் என்று சொல்லப்பட்ட

தற்கான காரணமாகும். கிறிஸ்தவர்கள், தாம் அதுவரை உப யோகித்து வந்த மொழிபெயர்ப்பில் பழக்கப்பட்டுவிட்டதால், அதைவிட சிறந்த தமிழை இவ்வாறு குறை கூறினர். மொழி நடை திருத்தப்படும்போது, வசனத்தின் கருத்து மாற்றப்பட்டிருந் தால் மட்டுமே நாம் ஒரு மொழிபெயர்ப்பை நிராகரிக்கவேண்டும். லார்சனின் மொழிபெயர்ப்பு வேதவசனங்களின் கருத்தை மாற்ற வில்லை. அப்படியிருந்தும், வேதத்தை மாற்றிவிட்டார்கள் எனும் பிரச்சாரம் அம்மொழிபெயர்ப்பைப் பிரபல்யமற்றதாக்கி விட்டது. 1936-ம் ஆண்டு, லார்சன் குழுவினர் மொழிபெயர்த்த பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டுடன் சேர்த்து முழுவேதாகமமாக வெளியிடப்பட்டது.

லார்சன் குழுவினரது மொழிபெயர்ப்பை மக்கள் ஏற்றுக் கொள்ளாதமைக்கு இன்னுமொரு காரணம், மக்கள் ஹென்றி பவரின் திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பில் பழகிப்போனமையேயா கும். லூத்தரன் சபையைத் தவிர மற்ற அனைத்து சபையின ரும் இம்மொழிபெயர்ப்பையே உபயோகித்து வந்தமையினால், அதுவே மக்கள் அறிந்திருந்த ஒரே ஒரு மொழிபெயர்ப்பாயிருந் தது. நாளடைவில், வேதாகமம் அதற்கும் முன்பே மொழிபெயர் க்கப்பட்டுத் திருத்தப்பட்டது என்பதை மக்கள் மறந்துபோயினர். தாம் உபயோகித்த வேதாகமத்தின் வசனங்களையே கிறிஸ்த வர்கள் மனனம் செய்து வந்தமையினால், அதன் மொழிநடை யை மாற்ற எவரும் விரும்பவில்லை.

ஹென்றி பவர் வேதாகமத்தை மொழிபெயர்த்தபோது, அதுவரை மக்கள் உபயோகித்து வந்த மொழிபெயர்ப்பின் வசனநடை மக்களை எவ்வாறு கவர்ந்துள்ளது என்பதை அறிந் து, வேதாகம மொழிநடை திருத்தப்பட்டுள்ளது என்பதை மக்க ள் உணர்ந்திடாத வண்ணம் புதிய மொழிபெயர்ப்பை செய்த மையினால், எல்லோரும் அவருடைய புதிய மொழி பெயர்ப்பை ஏற்றுக்கொண்டனர். லார்சன் குழுவினர் இதைக் கருத்திற்கொ ள்ளாதமையினால் அவர்களது மொழிபெயர்ப்பு மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

7) மோனஹன் மொழிபெயர்ப்பு

லார்சன் மொழிபெயர்ப்பு நிராகரிக்கப்பட்டதன் பின் அதை மறுபடியுமாகத் திருத்தி மொழிபெயர்க்க வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் உருவாகத் தொடங்கியது. நல்ல சமாரியன் குழுவினர், ஹென்றி பவரின் மொழிபெயர்ப்பையே தொடர்ந்து உபயோகிக்க வேண்டும் எனக் கூறி வந்தனர். எனினும் அம் மொழிபெயர்ப்பு, 16-ம் நூற்றாண்டில் அங்கீகரிக்கப்பட்ட கிரேக்கப் பிரதியை அடிப்படையாய்க் கொண்டிருந்தமையினால் திருப்திகரமான மொழிபெயர்ப்பு அல்ல என்பதே வேத பண்டிதர்களின் கருத்தாயிருந்தது. லார்சன் மொழிபெயர்ப்பு பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்படாதிருப்பினும் அது, மிகவும் நம்பகமான சீனாய் மற்றும் வத்திக்கான் சுவடிகளை ஆதாரமாய்க் கொண்டிருந்தமையினால், அதுவே மூலமொழிக்கு ஏற்றமொழிபெயர்ப்பு என்பதை மூலமொழியை அறிந்திருந்த அனைவரும் நன்கறிந்திருந்தனர். எனவே, நம்பகமான பிரதிகளை அடிப்படையாய்க்கொண்டு மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தை ஏற்றுக் கொள்ளாமல், ஆதாரக் குறைவான மூலப்பிரதியை அடிப்படையாய்க் கொண்டு மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தை உபயோகிப்பது நல்லதல்ல என பலர் கருதத் தொடங்கினர். ஆனால், லார்சன் குழுவினரது மொழிபெயர்ப்பை மக்கள் ஏற்றுக்கொள்ளாதமையினால், அதை மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதமாகத் திருத்தி மொழிபெயர்க்க வேண்டுமென்று 1939-ல் சென்னை வேதாகமச் சங்கம் தீர்மானித்தது.

லார்சன் மொழிபெயர்ப்பு, ஹென்றி பவரின் மொழிநடையில் திருத்தப்பட வேண்டும் என வேதாகமச் சங்கம் கூறியது. ஹென்றி பவரும் இதேவிதமாகவே தனது மொழிபெயர்ப்பைத் திருத்தியிருந்தார். அவருடைய காலத்தில் மக்கள் பெப்ரீஷியசின் மொழிநடையில் பழகிப்போயிருந்தமையினால், ஹென்றிபவர் அம்மொழிநடையை மாற்றவில்லை. புதிய திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பை மக்கள் வாசித்தபோது, தாம் பெப்ரீஷியசின் மொழிபெயர்ப்பையே வாசிக்கின்றோம் எனும் உணர்வு ஏற்படும் வண்ணம் ஹென்றி பவரின் மொழிபெயர்ப்பு அமைந்திருந்தது. இத

னாலேயே லார்சன் மொழி பெயர்ப்பு, ஹென்றி பவரின் மொழி நடையில் திருத்தப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.



சி.எச்.மோனஹன்

அத்தோடு, லார்சன் மொழிபெயர்ப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜெகோவா எனும் பதத்தை, பழைய மொழிபெயர்ப்பிலுள்ளது போன்று கர்த்தர் என்றே மாற்ற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் புதிய மொழிபெயர்ப்புக் குழுவுக்குப் பொறுப்பாக சி. எச். மோனஹன் என்பவர் நியமிக்கப்பட்டார். அயர்லாந்தை சேர்ந்த இவர் 1893-ம் ஆண்டு இந்தியாவுக்கு மிஷனரியாக வந்தவராவார். தான் அது வரை பணியாற்றிய மிஷனிலிருந்து 1940 -ல் ஓய்வு பெற்ற போது, இவர் வேதாகம மொழி பெயர்ப்பு வேலைகளை ஆரம்பித்தார்.

மோனஹன் குழுவினரது மொழி பெயர்ப்புப்பணி காரணமாக 1942-ல் புதிய ஏற்பாடு வெளிவந்தது. இது நெஸ்லே என்பவர் தயாரித்த கிரேக்கப் பிரதியை அடிப்படையாய்க் கொண்டிருந்தது. இப்பிரதியில், ஆரம்பத்தில் அப்போஸ்தலர்கள் எழுதியவை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

மோனஹன் குழுவினரது மொழிபெயர்ப்புப்பணி காரணமாக 1942-ல் புதிய ஏற்பாடு வெளிவந்தது. இது நெஸ்லே என்பவர் தயாரித்த கிரேக்கப் பிரதியை அடிப்படையாய்க் கொண்டிருந்தது. இப்பிரதியில், ஆரம்பத்தில் அப்போஸ்தலர்கள் எழுதியவை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அதே சமயம் லார்சன், பெப்ரீஷியஸ் ஹென்றி பவர் என்போருடைய தமிழ் மொழிபெயர்ப்புகளையும், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு மொழிபெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப்பார்த்து மோனஹன் குழுவினர் தமது பணியைச் செய்தனர். இவர்கள் தமது மொழிபெயர்ப்பு சாதார

ண கிராமவாசிக்கும் விளங்கக்கூடிய வண்ணம் இலகுவான மொழியில் இருக்கவேண்டும் என்பதிலும், கிறிஸ்தவர்கள் அது வரை காலமும் உபயோகித்துப் பழகிய வார்த்தைகளை மாற்றக்கூடாது என்பதிலும் அதிக அக்கறையுடையவர்களாக இருந்தனர்.

அதேசமயம், முழுமுதற் கடவுளுக்குத் தேவன் எனும் பதத்தைவிட கடவுள் என்ற பதமே சரியானது என்பதனால், அதையே மோனஹன் குழுவினர் உபயோகித்தனர். மொழிபெயர்ப்பு வேலைகள் நடந்துகொண்டிருக்கும்போது அதற்கெதிராகச் சிலர் தமது கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். இதனால், இவற்றுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலையில் இக்குழுவினர் இருந்தனர். புதிய மொழிபெயர்ப்புக்கெதிராகச் சொல்லப்பட்ட கருத்துக்களும், அதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் அளித்த பதில்களும் இந்தியக் கிறிஸ்தவ தேசாபிமானி எனும் பெயர் கொண்ட ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிடப்பட்டன. புதிய மொழிபெயர்ப்பு, 1611-ம் ஆண்டில் வெளிவந்த ஜேம்ஸ் அரசனது பதிப்பு வேதாகமம் உபயோகித்த கிரேக்கப் பிரதியை அடிப்படையாய்க் கொண்டிராததமையினால், அது சரியான மொழிபெயர்ப்பல்ல என்பதே இம்மொழிபெயர்ப்புக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட முக்கியமான குற்றச்சாட்டாகும். மொழிபெயர்ப்புக் குழுவினர், அக்கிரேக்கப் பிரதியைவிட அதற்கும் முன்பிருந்த கிரேக்கப் பிரதிகளே நம்பகமானவை என்பதைச் சுட்டிக்காட்டி வந்தனர்.

1949-ல், மோனஹன் குழுவினரது பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு வெளி வந்தது. 1954-ல் புதிய ஏற்பாடு திருத்தப்பட்டு வெளியிடப்பட்டது. லார்சன் மொழிபெயர்ப்புக்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்பு மோனஹன் மொழிபெயர்ப்புக்கு ஏற்படாத போதிலும், மக்கள் தொடர்ந்தும் ஹென்றி பவரின் திருத்தப்பட்ட ஐக்கிய பதிப்பையே உபயோகித்து வந்தனர். மொழிபெயர்ப்புகளுக்கிடையே இருக்கும் வித்தியாசங்கள் குறைவாகவே இருக்கின்ற போதிலும், மக்கள் தாம் உபயோகித்துப் பழகிய மொழிபெயர்ப்பிலேயே திருப்தியடைந்து விட்டனர். அவர்கள் மூல

மொழியின் சரியான அர்த்தத்தைத் தரும் ஒரு மொழிபெயர்ப்பு அவசியம் என்பதை உணரவில்லை. மோனஹன் குழுவினர் அதிக கவனத்துடன் தமது மொழிபெயர்ப்பு வேலைகளைச் செய்தபோதிலும், அவர்களுடைய வேதாகமத்தில் ஆங்காங்கே சில அச்சுப்பிழைகளும், வேறுவகையான பிழைகளும் இருந்தன. எனவே, அவற்றைத் திருத்துவதற்கு 1961-ல் ராஜரீகம் என்பவரது தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடும் சங்கீதங்களும் 1979-ல் வெளி வந்தன. இது இலக்கணப் பிழைகள் அற்றதாகவும், எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் சிறிய வசனங்களைக் கொண்டதாக வும் இருந்தது. மேலும், வடமொழிச் சொற்கள் நீக்கப்பட்டு தனித்தமிழில் இம்மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருந்தது. இதுவும் பெரும்பாலான கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆரம்பகால ரோமன் கத்தோலிக்க மிஷனரிகள் ஒருசில வேதப் பகுதிகளை மட்டுமே தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். 1857-ம் ஆண்டே ரோமன் கத்தோலிக்கச் சபையினரால் மொழி பெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாடு பாண்டிச்சேரியில் வெளிவந்தது. இது, வெளிநாட்டு மிஷன்களுக்கான பாரீஸ் சங்கத்தைச் சேர்ந்த மிஷனரிகளினால் மொழிபெயர்க்கப்பட்டது. 1890-ல், இயேசு சங்கத்தைச் சேர்ந்த ஜே.பி.டிரின்சல் என்பவரினால் மொழிபெயர் க்கப்பட்ட புதிய ஏற்பாடு வெளிவந்தது. 1904-ம் ஆண்டு பாண்டிச் சேரியிலிருந்த ரோமன் கத்தோலிக்க மிஷன் அச்சகத்தில் பழைய ஏற்பாடு தமிழில் பிரசுரிக்கப்பட்டது. 1960-ல், முழு வேதாகமமும் ஒன்றாக வெளியிடப்பட்டது. 1970-ல், இக்கால மொழி நடைக்கு ஏற்றவிதமாக ரோமன் கத்தோலிக்கச் சபையி னர் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

1974-ல், இந்திய வேதாகமச் சங்கம், ரோம சபையுடன் இணைந்து பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியை ஆரம்பித்தது. 1977-ல் இந்திய சுவிசேஷ ஊழிய நூல் நிலையத்தினர் “ஜீவனுள்ள மீட்பின் செய்தி - ஒரு தெளிவுரை” எனும் தலைப்பில் புதிய ஏற்பாட்டின் இலகு மொழிநடையிலான மொழிபெயர்ப்பை வெளியிட்டனர். இது, ஆங்கிலத்தில் வெளி

வந்த "லிவிங் பைபிள்" எனும் வேதாகமத்தின் தமிழாக்கமாகும். இம்மொழிபெயர்ப்பு இலங்கைத் தமிழர்க்கு ஏற்றதல்ல எனக் கருதிய இலங்கையிலுள்ள லிவிங் பைபிள் ஸ்தாபனத்தினர் லிவிங் பைபிளை மறுபடியுமாக மொழிபெயர்த்து 1981-ல் "வாழும் இறைவாக்கு" எனும் பெயரில் வெளியிட்டுள்ளனர்.

இக்காலத் தமிழ் நடையில் வேதாகமம் இருந்தாலேயே மக்களால் தேவனுடைய வார்த்தையை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும் எனும் எண்ணத்தில் புதிய மொழிபெயர்ப்பு கள் வெளிவந்தாலும், நம்மில் பெரும்பாலான தமிழ் கிறிஸ்தவர் கள் ஹென்றி பவரின் திருத்தப்பட்ட மொழிபெயர்ப்பையே இன்றுவரை உபயோகித்து வருகிறோம்.

திருத்தங்கள் மொழிபெயர்ப்பிலும், இலக்கண நடையி லும் மட்டுமே நிகழ்ந்துள்ளது. வேதாகமத்தின் உபதேசத்திலோ, மூலக்கருத்துக்களிலோ அல்ல என்பதை மீண்டும் தெரியப்படுத்தி இவ்வரலாற்றினை முடிக்க விரும்புகிறேன்.

சீகன்பால்க் முதற்கொண்டு நூற்றுக்கணக்காணோரை தேவன் தமது தமிழ் வேதாகம மொழிபெயர்பு வேலைக்காக பயன்படுத்தினார். ஒவ்வொரு முறையும் வேத புத்தகத்தை கையில் எடுக்கும் போதெல்லாம் இத்தகைய மகாண்களின் தியாகமுள்ள நல்வாழ்விற்காக நாம் தேவனுக்கு மனதார நன்றி கூறுவோம். இக்காலத்திலும் பல்வேறு மொழிகளில் வேதாகமத் தை மொழிபெயர்க்கும் வேதபண்டிதர்களை தேவன் பயன்படுத் தவும், இன்னமும் பரிசுத்த வேதாகமத்தை தங்கள் தாய் மொழியில் கிடைக்கப் பெறாத பல ஆயிரக்கணக்கான இன மக்களுக்கு விரைவில் வேதாகமம் கிடைக்க கருத்தாய் ஜெபி த்து ஜெயம் காண்போம்.

சத்திய வேதம் பக்தரின் கீதம்

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்

எத்தனை துன்பம் துயரம் வந்து
பக்தனை தேற்றிடும் ஔஷதம்

நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்த பசும்பொன் தெளிந்திடும் தேன்
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்துமா உயிரடையும்

பேதைகளிடம் ஞானம் அருளும்
தேவ புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும்

வேதப் பிரியர் தேவப் புதல்வர்
சேதமடையா நடத்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார்

உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங் கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும்

கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன்மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இரு புறமும் கருக்குள்ளதே

வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்லவம்
பரவசம் நிதம் அருளும்

- சாராள் நவரோஜி

துணை நூற்பட்டியல்

- ✓ வசந்தகுமார், எம். எஸ். (2018) புனித வேதாகமத்தின் வரலாறு, சத்தியவசனம், இந்தியா

- ✓ டேவிட் பிரபாகர், ப (2002) கிறித்தவத் தமிழ் நடையியல் நோக்கு; உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 13

- ✓ வேதாகமப் புத்தகங்களின் சுருக்கம்: புதிய ஏற்பாட்டின் கால முறையிலான வரலாற்றுச் சுருக்கம் (2016) வேர்டு ஆ.ஃ.ப் கிரைஸ்ட், சென்னை

- ✓ ஜான் ஜெயானந்தம், ந (2017) வேதாகமத்தின் வரலாறும் தமிழ் மொழிபெயர்ப்புகளும்; மோரியா மினிஸ்ட்ரீஸ்

- ✓ வின்யார்ட் ஸ்டாலின், ஜே (2022) விவிலிய கிரேக்க மொழி பயிற்சி புத்தகம், நோசன் பிரஸ் வெளியீடு

- ✓ டேனியல், அ. (1989) வேதாகமத் தமிழ் மொழிபெயர்ப்பில் லூத்தரன் சபையாரின் பங்கு, ஆற்காடு லூத்தரன் சபை வெளியீடு, கடலூர்

- ✓ சபாபதி குலேந்திரன், (1967) கிறிஸ்தவ வேதாகமத்தின் வரலாறு, இந்திய வேதாகம சங்கம், பெங்களூர்

- ✓ எரோணிமுசு. கு (1995) பொது விவிலியம்: ஓர் அறிமுகம், அருள் வாக்கு மன்றம் - தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சி - 1.

- ✓ பென்செருபாபேல் வலைத்தளம்

- ✓ பால் ராஜ் துரை, யு (2015) வேதமா? விஞ்ஞானமா? எஸ் தாயப்பன் வெளியீடு, சென்னை

- ✓ நெய்தல் அண்டோ, யூ (2010) தமிழகத்தின் முதல் அச்சுக் கூடம், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்

- ✓ மயிலை சீனி வேங்கடசாமி (2022) கிறித்துவமும் தமிழும்; அலைகள் வெளியீட்டகம்

- ✓ பென்செருபாபேல் வலைத்தளம்

- ✓ வில்லியம் மெக்டொனால்டு (2013) விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை, மோரியா வெளியீட்டகம்

- ✓ ராஜாமணி, பி.எஸ், வேதாகமம் நமக்கு எப்படி கிடைத்தது? மதுரை

- ✓ கனகராஜ், பெ (2020) விவிலிய எபிரேய அடிப்படை இலக்கணம்; தொகுதி 1, நோசன் பிரஸ் வெளியீடு

- ✓ John Laux (1992) Introduction to the Bible: The Nature, History, Authorship & Content of the Holy Bible With Selections from & Commentaries on the Various Books, Tan Books & Publication

- ✓ Stephen M Miller, Robert V Huber (2015) The Bible: a history: The making and impact of the Bible (Kindle Edition), Lion Books & Publication

- ✓ Richard Gilmour (2018) Bible History: Containing the Most Remarkable Events of the Old and New Testaments, Forgotten Books & Publication

ஆசிரியரின் பிற வெளியீடுகள்

101. சமூகத் தீமைகள்
102. பிரகாசமான வாழ்வு
103. உன்னோடு ஒருவர் - நற்செய்தி நூல்
104. சிறுவர்களிடையே நற்செய்தி ஊழியம்
105. நூறு குழு விளையாட்டுகள்
106. சிந்திக்க சிறுகதைகள் (பாகம் - 1)
107. சிந்திக்க சிறுகதைகள் (பாகம் - 2)
108. யவீரு
109. இந்தியாவில் மதச் சுந்திரம்
110. எழுப்புதலின் தீப்பொறிகள்
111. ஞானஸ்நானம் - விளக்கவுரை
112. நீங்கள் தான் உப்பு
113. மோசேயைக் காப்பாற்றிய ஆறு பெண்கள்

இன்றே பார்வையிடுங்கள்

கிறிஸ்தவ பாடல்கள், நடப்பு கிறிஸ்தவ செய்திகள், கருத்துக்களம், சரித்திரத்தில் அருட்பணியாளர்கள், வேதாகம ஆய்வு குறிப்புகள், சிறப்பு நேர்காணல்கள் என பக்திவிருத்திக்கேதுவான நிகழ்ச்சிகளை காணவும், ஆவிக்குரிய செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், கதைகள் மற்றும் நூற்றுக்கணக்கான பிரசங்க குறிப்புகள் இவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும் இன்றே பார்வையிடுங்கள்

www.tcnmedia.in

புத்தகத்தைப் பற்றி:

வேதாகமம் எழுதப்பட்ட விதம், மூல மொழிபெயர்ப்பு வரலாறுகள், வேதாகம சம்பவங்களின் சரித்திர தொகுப்பு, வேதாகம உபதேசங்கள், வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதன் ஆதாரங்கள், வேதாகமத்தை ஆராய தெளிவான ஆலோசனைகள், வேதாகமத்தின் பயன்கள், சிறப்புகள் மற்றும் தமிழ் வேதாகமம் கடந்து வந்த பாதைகள் உள்ளிட்ட 25 சிறப்பான தலைப்புகளின் கீழ் இந்த ஆய்வு நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தை வாசிப்பவர்களும், போதிப்பவர்களும் அடிப்படையில் அறிந்திருக்க வேண்டிய ஏராளமான தகவல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. கருத்துச்செறிவுமிக்க இந்நூலை வாசித்து பயன்பெறுங்கள்.

Beviston

ஆசிரியரைப் பற்றி:

போதகர். பெ. பெவிஸ்டன், இந்தியாவின் முன்னணி செய்தித் தாள்களில் தொடர்ந்து பல ஆண்டுகள் ஆன்மீக கட்டுரைகளை எழுதியவர். சமூகவியல் (B.A Sociology), மனித உரிமைகள் (M.A Human Rights) மற்றும் தமிழ் இதழியல் (D.T.J Journalism) ஆகிய மூன்று துறைகளில் தனித்தனியே பட்டப்படிப்புகளை பயின்று, தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சம்மேளம் (TNPS) என்ற அமைப்பில் உறுப்பினராகவும், மனித உரிமைகள் கழகத்தின் (Human Rights Organization) இளைஞர் அணி கிளை செயலாளராகவும் பணி செய்தார். பின்னர் தேவனுடைய அழைப்பைப் பெற்று, கடந்த 2009 ஜூன் 10 ஆம் தேதி முதல் தொடர்ந்து முழு நேரமாக இறைப்பணியாற்றி வருகிறார்.

இவரது இலக்கியம் மற்றும் ஊடகச் சேவையினை அங்கிகரித்து மலேசியாவிலுள்ள உலகத் தமிழ் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம் இவருக்கு சாதனைத் தமிழன் என்ற சர்வதேச விருதினை வழங்கியுள்ளது. மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற பிரபல அமைப்புகளால் மாநில மற்றும் தேசிய அளவில் இலக்கியச் செம்மல், சேவரத்னா, பல்துறை கலைஞர் போன்ற உயரிய விருதுகளை பெற்றுள்ளார். இவர் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற வாழ்க்கை பயிற்சியாளர் (Accredited Life Coach) என்பது குறிப்பிடத்தக்கது.

இறையியல் துறையில் இளங்கலை (B.Th), முதுகலை (M.Div) மற்றும் முனைவர் (Doctor of Divinity) பட்டப்படிப்புகளை பயின்று பட்டம் பெற்ற இவர், அசெம்பிளிஸ் ஆப் காட் (AG) இயக்கத்தில் இணைந்து, மதுரையில் சபை ஊழியம் செய்து வருகிறார். மேலும் இவர் நற்செய்தி அறிவித்தல், போதனை மற்றும் ஆலோசனை ஊழியங்களில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டு, சமய, சமூகப் பணியை செய்து வருகிறார். தமிழ் கிறிஸ்டியன் நெட்வொர்க் (TCN Media) என்ற இவரது இணைய ஊடகமானது நம் சமூகத்தில் மாபெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி, இயங்கி வருகிறது.

TCNMEDIA.IN

LPNBLR5X24 00231